DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com, Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam, Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue, Markham ON, L6B 1A6

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN | THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1433 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday September 22, 2023

# “தியாகி திலீபனின் நினைவூர்தியை சிங்கக் கொடியை தாங்கிய வண்ணம் அடித்து நொருக்கிய சிங்கள இனவெறி அரசின் ரணிலே வெளியேறு”

## நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக கோசங்கள் எழுப்பிய பெரும் திரளான தமிழ் மக்கள்




நேற்று நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பங்கேற்பதை எதிர்க்கும் முகமாக ஐ.நா முன்றலில் பெரும் திரளான தமிழ் மக்கள் தமிழர் தேசியக் கொடியுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணிக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் உருத்திரகுமாரனின் தலைமை தாங்கினார்.

மேற்படிப் போராட்டத்தின் போது, ”காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே?” ”சிங்களதேசமே இனப்படு கொலை செய்தது” ”ரணில் ஐ.நாவுக்கு வருவது ஐ.நாவுக்கு அவமானம்” ”இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்து” போன்ற கோசங்கள் மக்களால் எழுப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.




## ஒரே வகையான குற்றச்சாட்டுகளுக்கள் காரணமாக தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்த ஒன்றாரியோ மாகாண அரசின் அமைச்சர் இருவர்

### ஆட்டம் காணுகின்றதா முதல்வர் டக் போர்டடின் அரசாங்கம்?

ஒன்றாரியோ அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் முறையற்ற விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட **Greenbelt Controversy** எனப்படும் பசுமை வலய வீடமைப்பு திட்டம் தொடர்பான ஒரே வகையான குற்றச்சாட்டுக்கள் காரணமாக தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்த ஒன்றாரியோ மாகாண அரசின் அமைச்சரகள் இருவர் தொடர்பாகவும் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுவதாக அறியப்படுகின்றது. ஏற்கனவே பசுமை வலய வீடமைப்பு திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கு நிலங்களை வழங்கும் முறையில் பக்க சார்பு பார்த்து வழங்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முன்னர் வீடமைப்பு அமைச்சராக கடமையாற்றிய ஸ்டீவ் கிளார்க் பதவியை ராஜினாமா செய்திருந்தார்.

இந்த ராஜினாமாவைத் தொடர்ந்து ஒன்றாரியோ மாகாண பொது மற்றும் வர்த்தக சேவை விநியோக அமைச்சராகப் பணிபுரிந்த காலீத் ரீத் என்பவரும் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். இவர் லாஸ் வேகாஸிற்கு மேற்கொண்ட உல்லாசப் பயணம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகள் மற்றும் விமர்சனங்கள் தொடர்பாகவே அவர் பதவியை இழக்க வேண்டி வந்தது என அறிவிக்கப்பட்டுள்து. ஒன்றாரியோ மாகாண அரசின் வீடமைப்பு திட்டங்களின் அடிப்படையில் வீடமைப்பிற்கான தனியார் நிறுவனம் ஒனறின் நிர்வாகிகளோடு இணைந்து இவர் உல்லாசப் பயணம் ஒன்றை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

Sri Nadarajasundram, Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE, RIGHT TEAM
MORTGAGE AGENT | ACCOUNTING
Purchase & Refinance; First Mortgage; Second Mortgage; Commercial Mortgage; Equity Loan
Personal Income Tax; Corporate Income Tax; HST Returns; Bookkeeping Service; Payroll Service; Audit preparation; Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE
Acupuncturist Mrs. K. Vsanthakumar
இடமாற்றம் பற்றிய அறிவித்தல்
இதுவரை காலமும் Kennedy & Finch சந்திப்புக்கு அருகில் இயங்கிவந்த மேற்படி அக்குபன்சர் சிகிச்சை நிலையம் தற்போது புதிய இடத்தில் பின்வரும் விலாசத்தில் இயங்கிவருகின்றது:
5200 Finch Ave. East. Suit 349,
Scarborough, ON M1S 4Z5 Tel: 416 754 4024

BIG Billyard Insurance Group, Stouffville
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray, Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 | 23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 | 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE


Latika Production
Latika
Gold House
பெருமையுடன் வழங்கும்
பிரமாண்டமான உள்ளரங்க இசை நிகழ்ச்சி
CANADA
பொங்கிவரும் இசை வெள்ளம்
தென் இந்திய கனடிய
கலைஞர்களின் சங்கமம்
Actor/ Singer
Chrish
Singer
Unni Menan
Anchor
B.H Abdhul Hameed
Singer
Sainthavi
Actress/ Singer
Rammiya Nambeesan
Music
Mathan Band
Singer
Aravinth
Singer
Srithar Sena
MC
KeeKee
Actor/ Singer / MC
Vijay
Music Director /Singer
A.R. Rehana
Singer
Chandraleka Anubama
Singer
Bob Shalini
Singer
Manashi
Singer
Anu Anand
Tickets
$40
$60
CANADA
Event Centre
Venue :
300 Water St, Whitby,
ON L1N 9B6, Canada
October
21
SATURDAY 4PM
Tickets
VIP $100
VVIP$200
அனுசரணையாளர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்.
416 423 7555 - 416 625 5010

Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# கனடா – இந்தியா நாடுகளுக்கிடையில் நிலவும் 'கடும்போக்கு' விவகாரம் தொடர்ந்தால் பாரிய எதிர்விளைவுகள் ஏற்படலாம்

நீறுபூத்த நெருப்பாக புகைந்து கொண்டிருந்த கனடா-இந்தியா நாடுகளுக்கிடையில் நிலவும் 'கடும்போக்கு' விவகாரம் தற்போது ஏனைய நாடுகளுக்கும் தெரியும் அளவிறகு ஒ ரு சர்வதேச பிரச்சனையாகத் தோற்றம் பெற்றுள்ளது. இந்த விவகாரம் உடனடியாகத் தீர்க்கப்படக் கூடியதாகத் வகையில் உள்ளது என்பது கேள்விக்குறியாக இருந்தாலும். இரு நாடுகளுக்கிடையிலும் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள நட்பு நாடுகள் முன்வரவேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்த வண்ணம் உள்ளனதொடர்ந்தால் பாரிய எதிர்விளைவுகள் ஏற்படலாம் என்பதும் உண்மையே.
காலிஸ்தான் என்னும் தனி நாட்டை அமைக்கும் தொடர்ச்சியான முயற்சிக்கு தடை போடுங்கள் என்ற இந்தியாவின் கண்டிப்பான வேண்டுகோளுக்கு கனடிய பிரதமரும் சில அதிகாரிகளும் அளித்த பதில்களின் கனடிய பிரஜைகளின் மதம் மற்றும் பண்பாடு சார்ந்த விவகாரங்களில் அவர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதால் இதுபற்றிய கட்டுப்பாடுகளை நாம் விதிக்க முடியாது என்று பதிலளிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.
இதை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைப்பாடு இந்திய அரசிற்கும் அதன் பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும் ஆலோசகர்களுக்கு இருக்கும் எனவும் நாம் எதிர்பார்க்க முடியாது. இதன் காரணமாக இந்த 'மோதல்' அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் பதிலுக்கு பதில். நுடவடிக்கைக்கு பதிலாக நடவடிக்கை என தொடர்ந்த இந்த 'கடும்போக்கு' விவகாரம் தணிந்திட வேண்டும் என்ற நமது கனடியப் பிரதமர் முன்வந்தாலும் இந்தியாவின் வெளியுறவுத் துறை அதிகாரிகள் மற்றும் ஆலோசகர்கள் மிகவும் கடுமையான விமர்சனங்களை கனடாவை நோக்கி முன்வைப்பதாகத் தெரிகின்றது. இது ஆரோக்கியமான ஒன்றாக நாம் பார்க்கவில்லை.
காலிஸ்தான் விவகாரம் தொடர்பாக, இரு நாடுகள் இடையே கருத்து மோதல் நிலவி வரும் நிலையில் நேற்று 21ம் திகதி கனடியர்களுக்கான வீசா சேவையை இரத்து செய்து இந்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் விவகாரம் எவ்வாறு ஆரம்பித்தத என்று பார்த்தால் கடந்த ஜூன் மாதம் கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியாவில் உள்ள ஒரு சீக்கிய குருத்துவராவுக்கு வெளியே சீக்கிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் என்ற சமூகத் தலைவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். நிஜ்ஜார் குரு நானக் சீக்கிய குருத்வாரா சாஹிப்பின் தலைவராகப் பதவி வகித்துவந்தார். அவர் இந்திய அரசால் தேடப்படும் நபர்களின் பட்டியலில் இடம்பெற்றிருந்தார எனவும் இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டது. உடனே கனடிய புலனாய்வுத் துறையின் அறிக்கையின் படி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இந்திய அரசு இருக்கலாம் என கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார். ஆனால், கனடாவின் குற்றச்சாட்டை இந்திய அரசு மறுத்தது. அது மட்டுமல்லாது தொடர்ச்சியாக பல நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது

இதற்குப் பிறகு இந்திய தூதரக ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவின் மூத்த அதிகாரியை நாட்டை விட்டு வெளியேறுமாறு கனடா உத்தரவிட்டது. இதற்கு பதிலடியாக கனடாவின் உயர்மட்ட தூதர் ஒருவரை "நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட்டதற்காகவும், இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகவும் இந்தியா வெளியேற்றியது. இந்தச் சம்பவத்தால், கனடா – இந்தியா உறவுக்கிடையில் விரிசல் ஏற்பட்டு, பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. இது தணிகின்றதாகவும் தோன்றவில்லை

இந்நிலையில், கனடாவில் இருந்து இந்தியா வரும், கனடியர்களுக்கான வீசா சேவையை தற்காலிகமாக நிறுத்துவதாக இந்திய அரசு அறிவித்தது.

முன்னதாக, அங்கு மேலும் ஒரு காலிஸ்தான் தீவிரவாதி சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தால் கனடாவில் உள்ள இந்திய மாணவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு இந்தியாவின் மத்திய அரசு ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.
இதனால் இரு நாடுகள் இடையேயான உறவு நிலையில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் தற்போது கனடாவில் வசித்து வந்த மற்றுமொரு காலிஸ்தான் இனத்தவரான சுக்தூல் சிங் என்பவர் 2 குழுக்கள் இடையே இடம்பெற்ற துப்பாக்கி சண்டையில் கொல்லப்பட்டுள்ளார். இதனால் கனடாவில் மேலும் பதற்றம் தோன்றியுள்ளது.

அது மாத்திரமல்ல நான்கு முனையிலிருந்தும் எழுந்து வரும் பிரச்சனைகளும் முரண்பாடுகளும் கனடா-இந்தியா நட்பை எவ்வாறு பாதிக்கப்போகின்றன. எந்தெந்த நட்பு நாடுகள் இந்த முரண்பாடுகளைத் தீர்க்க எழுந்து வரப்போகின்றன என்பதைப் பொறுத்திருந்து கவலையோடு கவனித்துக்கொள்வோம்

**Notice**

NOTICE IS HEREBY GIVEN that on behalf of Dexter Seusahai application will be made to the Legislative Assembly of the Province of Ontario for an Act to revive Tribal Carnival Inc. The application may be considered by the Standing Committee on Procedure and House Affairs. Any person who has an interest in the application and who wishes to make submissions, for or against the application, to the Standing Committee on Procedure and House Affairs should notify, in writing, the Clerk of the Legislative Assembly, Legislative Building, Queen's Park, Toronto, Ontario, M7A 1A2. Dated at 4pm, this 30th day of September 2023.

Dexter Seusahai

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# இலங்கை போர் குற்றங்களை விசாரிக்க சர்வதேச பொறிமுறை அவசியம்

## – வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜர்

இலங்கையில் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற போர் குற்றங்களை விசாரிக்க உடனடியாக சர்வதேச பொறிமுறையை ஐ.நா ஏற்படுத்த வேண்டும் என வடக்கு கிழக்கு சிவில் ஒருங்கிணைப்பு குழு நேற்றையதினம் வியாழக்கிழமை யாழில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் மகஜர் கையளிக்கப்பட்டது.
அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது, ஐ.நா பொதுச்செயலாளர் மற்றும் ஐ.நா பொதுச்சபையின் உறுப்பினர்களுக்கு ஒரு வெளிப்படையான முறையீட்டை முன்வைக்க விரும்புகிறோம். போர் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்கான உண்மையான நீதிப் பொறிமுறையை நிறுவி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கவும் போர்க்குற்றவாளிகளுக்கு பொறுப்புக் கூறி தண்டனையைப் பெற்றுக் கொடுக்கவும் இலங்கை அரசின் தரப்பிலிருந்து இன்றுவரை எந்த முயற்சியும் எடுக்கவில்லை.
இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, இலங்கை அரசாங்கமானது, சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் விழுமியங்களை முற்றாக புறக்கணித்ததுடன், அடிப்படை சர்வதேச நியமங்களுக்கு எதிராக செயற்பட்டது. ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு எதிரான மீறல்.
ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில், ஐக்கிய நாடுகள் சபையின் முதன்மை நோக்கங்களை இலங்கை மீறியுள்ளது.
மனிதநேயம் மனித கண்ணியம் மற்றும் அனைத்துலக மனிதர்களுடைய அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை உறுதிபூண்டுள்ளதாக அதனுடைய சாசனம் வெளிப்படையாகக் கூறுகின்றது.
ஐ.நா சாசனத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் இணங்கத் தவறிவிட்டது என்பதை எங்களுடைய அனுபவங்களின் ஊடாகவும் மற்றும் ஐ.நா குழு அறிக்கையில் பொதிந்துள்ள விபரங்கள் ஊடாகவும் நாம் தெரிந்து கொள்கின்றோம். ஜெனிவா ஒப்பந்தத்திறகு எதிரான மீறல் 1949ம் ஆணடு மாநாட்டின் போர் பிரதேசங்களில் சிக்கிய பொது மக்களைப் பாதுகாப்பதாகும்.
ஜெனிவா உடன்படிக்கையின் ஒரு சாட்சியான இலங்கை, சிவில் பாதுகாப்பு கோட்பாடுகளையும் மாநாட்டின் அடிப்படை விதிகளையும் இறுதி யுத்த நேரத்தில் மீறியது. இலங்கையின் போர்க் குற்றங்கள் ஐ.நா நிபுணர்கள் குழு அறிக்கையின் படி, இலங்கை அரச படைகள், இறுதி யுத்தத்தில் பொதுமக்கள் செறிந்து இருந்த பகுதியில் (சூனியபிரதேசம்) கடுமையான குண்டுத் தாக்குதல்களை நடத்தியது மற்றும பாரிய உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தியது உறுதியாகியுள்ளது.
அரச படைகளால் பயன்படுத தப்பட்ட இரசாயண குண்டுகள், பொதுமக்களுடைய உடல்களில் எரிகாயங்களை உண்டு பண்ணி, இன்றும் மாறாத வடுக்களாக உள்ளன. ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கைகளின்படி போரின் இறுதிக்கட்டத்தில் 40000 பொதுமக்கள் உயிரிழந்துள்ள நிலையில் சரணடைந்த பல விடுதலைப்புலி உறுப்பினர்கள் அரச படைகளினால் கொல்லப்பட்டனர்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத் தொடுவாய் பகுதியில் பாரிய மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அகழ்வுப் பணிகளின்போது பெண்ணின் உள்ளாடைகள், விடுதலைப்புலிகளின் சீருடைகள் மற்றும் இலக்கத்தகடுகளோடு மனித எச்சங்கள் போன்றன தோண்டி எடுக்கப்பட்டன.
புஆகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பது ஐக்கிய நாடு சபையினுடைய முதன்மைப் பொறுப்பாக உள்ள நிலையில் போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச நீதிப் பொறிமுறையை நிறுவுவதற்கு இலங்கை அரசுக்கு அழுதங்களைக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சபையை கேட்டுக் கொள்கின்றோம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**SAREE BLOUSE தைத்தல் மற்றும் பயிற்சி வகுப்புக்கள்**

இலங்கையில் தையல் துறையில் பல வருடங்கள் அனுபவம் பெற்றவரான பெண்மணியினால் நியாயமான கூலியில் சாறி பிளவுஸ் தைத்துக் கொடுக்கப்படும். அத்துடன் சாறி பிளவுஸ் கட்டிங் வகுப்புகளும் எடுக்கப்படும்.
மிசிசாகா நகரில் **Mavis & Dundas** சந்திப்புக்கு அருகில் நிறுவனம் உள்ளது. அத்துடன் **Scarborough** நகரிலும் விரைவில் வகுப்புக்கள் ஆரம்பமாகும்
தொடர்புகளுக்கு:- தர்மா : 437 8333 2660 அல்லது 905 268 0272

**மணமகள் தேவை**

மன்னாரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட 32 வயதுடைய கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மணமகனுக்கு பெற்றோர் கனடாவில் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். மணமகன் க.பொ.த (உயர்தரம்) கற்றவர். மேலும் விபரங்களை அறிய 365-777-6868 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

**Canadian Citizenship Exam எடுப்பதற்கு உதவி**

**Canadian Citizenship Exam** க்கு உதவிகள் தேவையா? பரீட்சைக்கு தயார்படுத்தி **Canadian Citizenship Exam** எடுப்பதற்கு உதவி செய்து தரப்படும்.

பின்வரும் இலக்கத்தை அழைக்கவும்

**Ramneet** 437-771-5294

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மடு கல்வி வலய சாதனையாளர்கள் கௌரவிப்பு

- மன்னார் நிருபர் (15-09-2023)




மன்னார் மடு கல்வி வலய சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (15) மதியம் மடு கல்வி வலயத்தில் வலயக்கல்வி பணிப்பாளர் தலைமையில் இடம் பெற்றுள்ளது.

மடு வலயத்தில் இருந்து 2023 ஆம் ஆண்டு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மற்றும் உயர் தர பரீட்சையில் சாதனை நிலைநாட்டிய மாணவர்களையும் கௌரவிக்கும் வகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.





குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி எம்.கதிர்காமநாதன், சமூக சேவையாளர் யதீஸ் ஆகியோர் கலந்து கொண்டதோடு சர்வமத தலைவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த கௌரவிப்பு நிகழ்வில் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மற்றும் உயர் தர பரீட்சையில் சாதனை நிலைநாட்டிய மாணவர்கள் கௌரவிக்கப் பட்டதோடு, அவர்களுக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

# மீள்குடியேற காணிகள் வழங்கப்பட்ட வலி வடக்கு பலாலி மக்களின் அவல நிலை

- மன்னார் நிருபர் (14-09-2023)





பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் தமக்கு குறிப்பிட்ட அளவு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள போதும் குறித்த காணிகளில் மக்கள் குடியேறும் வகையில் வீடுகளை அமைக்க அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை என யாழ் வலிகாமம் வடக்கு பலாலி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வலி வடக்கு பலாலி கிராம மக்கள் தமது சொந்த நிலங்களில் இருந்து 1990 ஆம் ஆண்டு பாதுகாப்புக் காரணங்களுக்காக இடம் பெயர்ந்து பல்வேறு இடைத்தங்கல் முகாம் மற்றும் உறவினர்கள் வீடுகளில் வாழ்ந்து வந்தனர்.

குறிப்பாக சின்னவளை, பொலிகண்டி, நிலவன், கே.கே.எஸ். மற்றும் ஆனைப்பந்தி ஆகிய ஐந்து இடைத்தங்கல் முகாம்களில் கடந்த 33 வருடங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த முகாம்களில் மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அந்த மக்கள் தொடர்ந்தும் மனிதநேய அமைப்புக்களின் உதவியுடன் தொடர்ந்தும் பல்வேறு போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுத்து வந்த நிலையில் சுமார் 33 வருடங்களின் பிற்பாடு பலாலி வடக்கு (J/254)கிராம அலுவலர் பிரிவில் மேய்ச்சல் தரைக் கென ஒதுக்கப்பட்ட அரச காணியில் அவர்களுக்கு என காணி அளவீடு செய்யப்பட்டு, மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் அந்த மக்களின் சொந்த பூர்வீக காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை என அந்த மக்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளதோடு அக்காணிகள் படையினர் வசம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சுமார் 33 வருடங்கள் முகாம்களில் இருந்து பல்வேறு துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்த தாங்கள் முகாம்களில் இருந்து முதலில் வெளியே வர வேண்டும் என்ற நோக்கத்துடன் இக்காணிகளை பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்ததாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

5 முகாம்களை சேர்ந்த 49 குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் 45 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 4 குடும்பங்களுக்கு காணி வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

45 குடும்பங்களுக்கும் 13 1/2 ஏக்கப் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இந்து கோவிலுக்கு 10 பரப்பு காணியும், பாடசாலைக்கு என 2 ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு ஒரு குடும்பத்திற்கு தலா 2 பரப்பளவு காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

மெசிடோ நிறுவனத்தின் உதவியுடனும் ஒத்துழைப்போடும் தாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்த போராட்டங்களின் பலனாகவே தமக்கு இக்காணி கிடைத்ததாக அந்த மக்கள் தெரிவித்தனர்.

தற்போது தமது மீள் குடியேற்றத்துக்கு என வழங்கப்பட்டுள்ள குறித்த காணியானது மேய்ச்சல் தரைக் கூறிய காணியாக உள்ளது. குறித்த காணியில் மழைக்காலங்களில் வெள்ள நீர் தேங்க கூடிய நிலை காணப்படுவதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்காணியானது மக்கள் வசிப்பதற்கு உகந்தது இல்லை எனவும், இந்த காணியில் தாங்கள் இதற்கு முன்னர் வசிக்கவில்லை என்றும் மக்கள் வசிக்காத காணியை யே தமக்கு வழங்கியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே குறித்த காணியில் மக்கள் வசிப்பதாக இருந்தால் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக குறித்த காணிகளுக்கு சுற்று வேலி அமைத்தல் வேண்டும், தற்காலிக கொட்டகைகள் அமைக்க வேண்டும், குடிநீர் வசதி, மலசல கூட வசதி மற்றும் மின்சார வசதிகள் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

குறித்த மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தங்களினால் உடனடியாக குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது எனவும், அதற்கான உதவிகளை அரசாங்கத்திடம் இருந்தும் அரச சார்பற்ற அமைப்புகளிடம் இருந்தும் எதிர்பார்த்துள்ளனர்.

எனினும் எதிர் காலத்தில் தமது பூர்வீக காணிகளையே மீட்டெடுப்பதே தமது இலக்காக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் எங்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்ற மெசிடோ அமைப்பினருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு, குறித்த அமைப்பின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் எங்களுக்கு எந்த நேரத்திலும் பக்க பலமாக செயல்படுவதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

# மனித எச்சங்களை மறைப்பதற்காகவே புத்த கோவில்களை அமைத்து வருகிறார்கள் – செல்வம் அடைக்கலநாதன் சந்தேகம்

மனித எச்சங்கள் காணப்படுவதை மறைப்பதற்காகவே புத்த கோவில்களை அமைத்தும் இராணுவம் நிலங்களை கையகப்படுத்தியும் வருகின்றார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 14-09-2023 இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதவுரிமை மீறல் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை என தென்னிலங்கை தலைவர்கள் கோரும் நிலையில், குறிப்பாக ஒரு விடயத்தை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கொக்குதொடுவாயில் மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டு அதில் முன்னாள் பெண் போராளிகளது எச்சங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இதற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என தென்னிலங்கை தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும். இதற்கு அவர்கள் மௌனம் சாதிக்க முடியாது.

இலங்கை அரசாங்கம் அதாவது கோட்டபாய அவர்கள் ஜனாதிபதியாக இருக்கும் போதும், அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் போதும் பல கொடுமைகளை எங்களது மக்களுக்கு இழைத்திருக்கின்றார். பல இன்னல்களையும், மனிதவுரிமை மீறல்களையும் அவர் செய்துள்ளார். அந்தக் குடும்பம் மற்றும் அதில் சம்மந்தப்பட்டவர்கள் அத்தனை பேரும் சர்வதேச விசாரணையில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கிடப்பிலே உள்ளது. இப்படி ஒவ்வொரு இடத்திலும் மனித எச்சங்களை கண்டு பிடித்து கிடப்பில் போடும் நிலை தான் காணப்படுகிறது. ஆகவே இந்த விடயத்தில் சர்வதேசம் சரியான கவனத்தை எடுக்க வேண்டும். புத்த கோவில்கள் அமைப்பது, இராணுவம் பல இடங்களை பிடிப்பது இதற்கான காரணங்கள் எல்லாம் அவர்கள் பிடிக்கின்ற இடங்களை தோண்டுகின்ற போது எங்களது மக்களின் மனித எச்சங்கள் உள்ளது. அந்த விடயத்தை மறைப்பதற்காகவே இவை துரிதமாக நடைபெறுவதாக நான் சந்தேகப்படுகின்றேன்.

ஆகவே, இந்த விடயத்தில் ஒட்டுமொத்த சிங்கள தலைவர்களும் குரல் கொடுக்க வேண்டும். சர்வதேச விசாரணையை தமிழ் மக்கள் கோருகின்றார்கள். அந்தவகையில் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கபடும் வகையில் தென்னிலங்கையில் உள்ளவர்களும் மனசாட்சிப்படி நடக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# "சிறுபான்மை சமூகங்கள் மீதான அடக்குமுறைகள் ஓயவில்லை கஜேந்திரன் எம்.பியை தாக்கியமை கவலையளிக்கிறது" – மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் கண்டனம்!




18-9-2023

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதான தாக்குதலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"சிறுபான்மைச் சமூகங்கள் இன்னும் அடக்குமுறைக்குள் இருப்பதையே இந்தத் தாக்குதல் வெளிப்படுத்துகிறது. சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால், சிறுபான்மை மக்களின் நிலை எப்படியிருக்கும்?

பேரினவாதக் கும்பலின் அட்டகாசங்களுக்கு சிறுபான்மை மக்கள் பலியாவது அல்லது அவமானப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இவற்றைச் செய்யாமல் சமூக ஐக்கியம் எங்கே வரப்போகிறது?

பொலிஸாருக்கு முன்னால் இவ்வாறான அடாவடித்தனங்கள் இடம்பெறுவது சட்டவாட்சியை கேலிக்கூத்தாக்குகின்றது. சட்டத்தின் ஆட்சியை பேரினவாதக் கும்பல் கையிலெடுக்கும் நிலைமைகள் ஒழிக்கப்படாத வரை, சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பே கிடையாது. அரசியல் உரிமைகளை உணர்வு ரீதியாக மதிக்கவும் இடமில்லாத இந்த ஆட்சியில், நாம் எந்த நம்பிக்கையில் வாழப்போகிறோம்?" இவ்வாறு அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவு ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது தொடரப்பட்ட வழக்கு — கடற்படை புலனாய்வாளர் மற்றும் சாட்சிக்கு நீதிமன்றத்தால் பிடியாணை!

21-09-2023

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளருமான சண்முகம் தவசீலன் மீது முல்லைத்தீவு கோட்டபாய கடற்படை முகாமின் கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் திட்டமிட்டு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட அவர் முல்லைத்தீவு காவல்துறையினரால் 20.04.2019 அன்று கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் அவர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டு கடந்த பல வருடங்களாக வழக்கு இடம்பெற்று வரும் நிலையில், கடந்த 04.05.2023 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றபோது வழக்குடன் தொடர்புடைய கடற்படை புலனாய்வாளர் தொடர்ச்சியாக வழக்கு விசாரணைகளுக்கு வருவதில்லை என தெரிவிக்கப்படட நிலையில் குறித்த கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதோடு வழக்கு விசாரணைகள் 2023-09-21 இன்றைய திகதிக்கு தவணையிடப்பட்டிருந்தது.





இந்நிலையில் 2023-09-21 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் சார்பாக சட்டத்தரணி வி எஸ் எஸ் தனஞ்சயன் முன்னிலையாகியிருந்தார் இன்றும் வழக்கு தொடுனரான குறித்த கடற்படை புலனாய்வாளர் வருகைதரவில்லை இந்நிலையில் குறித்த கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளதாக பொலிசார் நீதிபதிக்கு தெரிவித்தனர் இந்நிலையில் குறித்த கடற்படை புலனாய்வாளர் மற்றும் அவரது சாட்சி ஆகிய இருவருக்கும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 07.04.2019 அன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலத்தில் இருந்து வட்டுவாகல் பாலம் வரை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தார். இதன் போது செல்வபுரம் பேரூந்து நிலையத்தில் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களையும், ஊடகவியலாளர்களையும் இனம் தெரியாத நபர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்ததோடு தனது கைபேசியில் ஒளிப்படம் எடுத்துள்ளார்.


இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் அடையாளப்படுத்த முற்பட்டவேளை ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் தலையிட்டு குறித்த நபர் யார் என வினவியபோது, அதற்கு அவர் யார் என சொல்ல மறுத்து குறித்த இடத்தினை விட்டு தப்பி ஓடிய போது ஆர்ப்பாட்டக்காரர்களால் பிடிக்கப்பட்டு மீண்டும் விசாரித்த போது தான் கடற்படை அதிகாரி என தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து, முல்லைத்தீவு காவல்துறையினரை சம்பவ இடத்திற்கு வருமாறு அழைத்தபோது அவர்கள் குறித்த இடத்திற்கு வர தாமதமாகியுள்ளது.குறித்த நபரை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று அவர் கெடற்படையினை சேர்ந்தவரா என வினவியபோது, அவர் தங்களுடைய நபர் என கடற்படையினர் தெரிவித்ததுடன், அவரை குறித்த இடத்தில் வருகை தந்த காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், தொடர்ந்து குறித்த கடற்படை அதிகாரி ஊடகவியலாளர்களை பழிவாங்கும் நோக்கில் அன்று மாலை முல்லைத்தீவு காவல்நிலையத்தில் உண்மைக்கு புறம்பான கருத்தினை தெரிவித்து முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் 20.04.2019 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் அவர்களை முல்லைத்தீவு காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட காவல்துறையினர் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய நிலையில், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு வழக்கு விசாரணைகள் தொடந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# "நவீன உலகத்தில் உணவு நெருக்கடியைத்தவிர்த்தல்" என்ற தொனிப்பொருளில் 9வது உலர் வலய விவசாயம் தொடர்பான சர்வதேச மாநாடு




யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் "நவீன உலகத்தில் உணவு நெருக்கடியைத்தவிர்த்தல்" என்ற தொனிப்பொருளில் 9வது உலர் வலய விவசாயம் தொடர்பான சர்வதேச மாநாடு யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்றது.

விவசாய பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வு, யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி எஸ்.வசந்தரூபா தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். கண்ணதாசன் கலந்து கொண்டிருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினராக விவசாய திணைக்கள பணிப்பாளர் நாயகம் மாலதி பரசுராமன் கலந்து கொண்டிருந்ததுடன், முதன்மை பேச்சாளராக யப்பான் NAGOYA பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் KOISHI USAMI கலந்து கொண்டு உரையாற்றிருந்தார்.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், விவசாய திணைக்களங்களின் உயரதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.








இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பிரான்சின் தலைநகர் பாரிஸின் வீதியில் தியாக தீபம் திலீபனின் திருவுருவம்

பு. கஜிந்தன்





தியாக தீபம் திலீபன் அவர்களின் 36வது ஆண்டு நினைவை முன்னிட்டு பிரான்சின் தலைநகர் பாரிஸின் 10ம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஈழத் தமிழர்களின் குட்டி யாழ்ப்பாணம் எனப்படும் லா சப்பல் (la Chapelle) பகுதியில் 12 நாட்களுக்கும் தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படம் பாரிஸ் 10ம் வட்டாரக் காவல்துறை மற்றும் நகரசபையின் அனுமதியுடன் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளது.

இதனை பிரான்சை தளமாக இயங்கும் ç'est les nous tamouls சேனூ தமிழ் என்ற அமைப்பு முனெடுத்துச் செய்துவருகின்றது.

# மனித புதைகுழி மறைப்பு விவகாரம் – செல்வம் அடைக்கலநாதனுக்கு தெரிந்திருக்க வாய்ப்புண்டு




கடந்த யுத்த காலங்களில் அரச படையினருடன் குழுக்களாக இணைந்து செயற்பட்டவர்களுக்கு சில சமயங்களில் புத்தவிகாரைகள் அமைக்கப்படும் இடங்களில் மனித எச்சங்கள் இருப்பது தெரிந்திருக்கக் வாய்ப்பிருக்கக் கூடும் என சந்தேகம் தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் யாழ்ப்பாண மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன் மனித எச்சங்கள் காணப்படுவதை மறைப்பதற்காகவே புத்த கோயில் அமைக்கப்படுகின்றன என கூறுவது அவரது அரசியல் கபடத்தனமாகவே பார்க்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் 15-09-2023 அன்று ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு சுட்டிக்காட்டிய அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு கிழக்கில் ஆயிரம் புத்த விகாரைகள் அமைப்பதற்கு ஆதரவளித்துவந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அன்றைய நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் மனித எச்சங்கள் காணப்படுவதை மறைப்பதற்காகவே புத்த கோயில் அமைக்கப்படுவதாக தெரிவித்து தனது அரசியல் கபடத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழும் நிகழ்வு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அரசினால் நிதி ஒதுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் அடைக்கலநாதன் தனது அறிக்கையில் வடக்கு கிழக்கில் மனித உடல் எச்சங்கள் காணப்படுவதை மறைப்பதற்காகவே புத்தவிகாரைகள் அமைக்கப்படுவதாக கூறியுள்ளார்.

உண்மையில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கில் ஆயிரம் விகாரைகள் கட்டுவேன் என சஜித் பிரேமதாசா தேர்தல் விஞ்ஞாபனத்தில் பகிரங்கமாக குறிப்பிட்டிருந்தபோது வடக்கு கிழக்கு மக்களை சஜித்துக்கு வாக்களிக்குமாறு தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்ட கூட்டமைப்பினர் 2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக அண்மிப்பதை கருத்தில்கொண்டு இவ்வாறான மக்களை ஏமாற்றுகின்ற சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் கடந்த யுத்த காலங்களில் அரச படையினருடன் குழுக்களாக இணைந்து செயற்பட்ட இவர்களுக்கு சில சமயங்களில் புத்தவிகாரைகள் அமைக்கப்படும் இடங்களில் மனித எச்சங்கள் இருப்பதை இவர்கள் நன்கு அறிந்திருக்க கூடும்.

ஆதலால்தான் அவருடைய குறித்த அறிக்கை அதை புடம்போட்டு காட்டுவதாக கருதவும் வாய்ப்பு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூரில் உற்சவ காலத்தில் கடமையாற்றிய சாரணர்கள் மற்றும் பொலிஸாருக்கு கௌரவிப்பு!



நல்லூர் உற்சவ காலத்தில் கடமை ஆற்றிய பொலிசார் மற்றும் சாரணங்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நல்லூர் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி ஆலய வருடாங்க மகோற்சவம் கடந்த 21ம் திகதியிலிருந்து ஆரம்பமாகி இன்றுடன் நிறைவு பெறுகின்ற நிலையில் உற்சவ காலங்களில் பாதுகாப்பு கடமை மற்றும் வீதி தடைகளில் கடமையாற்றி, உற்சவ காலத்தில் பக்தர்கள் கந்தனை வழிபடுவதற்கு ஒத்துழைத்த பொலிசார் மற்றும் சாரணர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நல்லூர் ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது. உற்சவ காலத்தில் கடமையாற்றியவர்களுக்காக விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்று காளாஞ்சியும் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் அதிபர், யாழ்ப்பாணமாவட்ட சாரண சங்கத் தலைவர் பொலிஸ் உயரதிகாரிகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை தாக்குதல் சம்பவம் – முன்னாள் யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் கண்டனம்!

தியாக தீபம் திலீபனின் உருவப்படத்தை தாங்கிய வாகன ஊர்தியை பொலீசார் வேடிக்கை பார்க்க சிங்கள காடையர்கள் தாக்கி சேதப்படுத்தியமையும் அவ் வாகன அணியோடு வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் தாக்கப்பட்டமையும் ஏற்றுக்கொள்ள முடியாத காட்டுமிராண்டி தனம் என யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

தியாகதீபம் திலீபனின் உருவப்படத்தை தாங்கி வந்த ஊர்திப் பவனி மீது திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தி குறிப்பில், தியாக தீபம் திலீபன் அண்ணாவின் உருவப்படத்தை தாங்கிய வாகன ஊர்தியை பொலிசார் வேடிக்கை பார்க்க சிங்கள காடையர்கள் தாக்கி சேதப்படுத்தியமையும் அவ் வாகன அணியோடு வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் தாக்கப்பட்டமையும் ஏற்றுக்கொள்ள முடியாத காட்டுமிராண்டி தனம். இந்த ஈன செயலை வன்மையாக கண்டிக்கின்றேன்.

உண்ணா நோன்பிருந்து அகிம்சை போர் தொடுத்து ஈகச்சாவடைந்த உத்தமனை நினைவு கூர கூட இந்த மண்ணில் அனுமதி இல்லை என்பதை இது காட்டி நிற்கின்றது. இச் செயல் இந்த நாட்டில் ஒருபோதும் நல்லிணக்கம் சாத்தியம் இல்லை என்பதையும் தமிழ்மக்கள் இந்த மண்ணில் நிம்மதியாக வாழ அனுமதிக்கப்படப் போவதில்லை என்பதையும் பட்டவர்த்தனமாக காட்டுகின்றது. இதனை சர்வதேசம் கண்டும் காணாதிருப்பது தான் வேதனையானது - என்றுள்ளது.






OM NAMO NARAYANA

125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM L3S 3T8 CANADA

Mobile & WhatsApp: 001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம், பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகர்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது தீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.


இவையன்றியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# மன்னாரில் கிணறு வெட்டிய ரசீது உண்டு கிணற்றைக் காணவில்லை

**- நடராசா லோகதயாளன்**





தமிழகத்தின் முன்னணி நகைச்சுவை நடிகர்களில் ஒருவரான வடிவேலு நடிப்பில் தனக்கென்று தனியொரு முத்திரையை பதித்து காலங்களை கடந்து ரசிகர்கள் மனதில் நிற்கும் நகைச்சுவை காட்சிகளை அளித்துள்ளார். அதில் அமரத்துவம் வாய்ந்த பல காட்சிகள் உள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஒரு திரைப்படத்தில் இடம்பெறும் நகைச்சுவை காட்சியமைப்பு, நடிப்பு, வசனம், இயக்கம் என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு, அது சமகாலத்தில் சமூகத்தில் நிலவும் அவலங்களை தோலுரித்து காட்டுவதே மக்கள் மனதில் நிலைத்திருக்கும். அவ்வகையில் தமிழ் திரைப்படங்களில் தொடர்ச்சியாக சில நகைச்சுவை காட்சிகள் சமூக அவலங்களை மையப்படுத்தி எடுக்கப்பட்டு அவை சமூக மாற்றத்திற்கு உதவியுள்ளதையும் காண முடிகிறது.

அவ்வகையில் "வைகைப் புயல்" என்று அறியப்படும் வடிவேலு அவர்கள் நடித்த "கிணற்றை காணோம்" நகைச்சுவ பல செய்திகளை கூறியது. இந்திய அரசமைப்பு மற்றும் நிர்வாக கட்டமைப்பிலுள்ள ஊழல்களை அது வெட்ட வெளிச்சமாக்கியது. லஞ்ச ஊழல்கள் எந்தளவிற்கு தலைவிரித்து ஆடுகிறது என்பதே அந்த நகைச்சுவையின் அடிநாதம். அதிகார படிநிலை எப்படி லஞ்ச லாவண்யத்தில் திழைத்து ஊறியுள்ளது என்பதை மிகவும் அற்புதமாக தனது நடிப்பின் மூலம் அவர் வெளிப்படுத்தியிருப்பார்.

சட்டரீதியாக அவர் கிணறு வெட்டியதை கண்டதாக அதி-காரி கொடுத்த கடிதமே அவர் தப்பிக்கவும், அந்த நகைச்சுவை பரிமளிக்கவும் காரணமாக அமைந்தது.

இந்த நகைச்சுவை தமிழ்நாட்டின் தென் பகுதியில் ஒரு ஊரில் நடப்பதாக கதையில் இடம்பெற்றிருக்கும். இப்போது தென் தமிழ் நாட்டிற்கு அருகாமையிலிருக்கும் இலங்கையின் மன்னார் மாவட்டத்திலும் இதே போன்று "கிணற்றை காணோம்" கதை அரங்கேறியுள்ளது. அதாவது ஊழலுக்கு சாதி, மதம், இனம், ஆண், பெண் என வேறுபாடுகள் ஏதும் கிடையாது என்பதை மன்னார் சமப்வம் நிரூபிப்பதாக உள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்குப் பகுதி அபிவிருத்தி அமைச்சின் ஊடாக வடக்கு கூட்டுறவுத் துறையின் கீழ் ரெக் சிலோன் நிறுவனத்தின் ஆலோசணையில் 500 மில்லியன் ரூபாவில் சிறு கைத்தொழில்சாலைகள் உருவாக்கம் என்ற திட்டத்தில் மன்னாரில் அமைத்ததாக மாவட்டச் செயலகம் எழுத்தில் வழங்கிய தொழிற்சாலை இன்றுவரை மாவட்டத்தின் எப்பாகத்திலும் காணப்படவில்லை.

இந்த திட்டத்தின் கீழ் மன்னர் மாவட்டத்திற்கு கிடைத்த திட்டங்கள் எவை, அதற்கான செலவு எவ்வளவு, திட்டத்தின் நிலை என்ன என தகவல் அறியும் சட்டத்தின் கீழ் எழுத்தில் விண்ணபிக்கப்பட்டது.

அவ்வாறு விண்ணப்பித்த தகவல் அறியும் சட்டத்தின் மூலமான விண்ணபத்திற்கான பதிலில் மாவட்டத்திற்கு 4 திட்டம் கிடைத்ததாகவும் அந்த நான்கின் மொத்தப் பெறுமதி 100 மில்லியன் 570 ஆயிரம் ரூபா எனவும் இதில் ஓர் திட்டம் வலை உற்பத்தி நிலையம் அதற்கான செலவு 48 மில்லியன் ரூபா எனக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இந்த வலைஉற்பத்தி நிலையத்தின் மூலம் 37 மீனவ சங்க அங்கத்தவர்கள் நேரடி நன்மை அடைவதாகவும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் 5 மாவட்டத்திலும் மாவட்டச் செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தில் மன்னாரிற்கு கிடைத்த ஏனைய திட்டங்கள் இயங்குவதாக மாவட்டச் செயலகம் பதிலளித்த போதும் அவையும் தற்காலகமாக தடைப்பட்டே உள்ளதாக கூட்டுறவுத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதேநேரம் வலை உற்பத்தி நிலையம் தொடர்பில் மாவட்டச் செயலகத்தின் பதிலில் வலை உற்பத்தி நிலையத்தின் பணிகள் தற்போது தற்காலிகமாக இடை நிறுத்ப்பட்டுள்ளதாகவும் தகவல் அறியும் சட்டத்தில் எழுத்தில் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இடை நிறுத்தப்பட்ட வலை உற்பத்தி நிலையத்தில் எதற்காக பணி நிறத்தப்பட்டது என அறிவதற்காக குறித்த வலை உற்பத்தி நிலையம் எங்கே உள்ளது அதனை மன்னாரில் எந்த கூட்டுறவுச் சங்கம் மேற்பார்வை செய்கின்றது என மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளை தொடர்புகொண்டு கேட்டபோது கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விழி பிதுங்குவது மட்டுமன்றி இவ்வாறானதொரு வலை உற்பத்தி நிலையம் மாவட்டத்தின் எப்பாகத்திலும் ஆரம்பிக்கப்பட்டதான தகவல் எமக்கு எந்தக் காலத்திலும் சமர்ப்பிக்கப்படவில்லை என்கின்றனர்.

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரகளின் பதில் தொடர்பில் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரகளிடம் தொடர்புகொண்டபோது அவர்களும் இத்திட்டம் மன்னாரில் இருப்பதனை உறுதி செய்ய முடியவில்லை. அவ்வாறானால் மாவட்டச் செயலகங்கள் ஊடாக முன்னெடுத்த இத்திட்டங்களில் எந்த திட்டம் கிடைத்தது அதில் எவை முன்னெடுக்கப்பட்டன, அதில் எத்திட்டங்களிற்கான நிதி விடுவிக்கப்பட்டன என்ற தகவல்கள் கூடவா மாவட்டச் செயலகங்களில் பேணப்படவில்லை அல்லது இத்திட்டத்திற்கு நிதி அனுமதிக்கப்பட்டும் திட்டம் ஆரம்பிக்கப்படவே இல்லையா என்ற கேள்விக்கு மாவட்டச் செயலகமே பதிலளிக்க வேண்டும்.

இறுதியில் வடிவேலின் நகைச்சுவை பாணியில் கிணறு வெட்டிய ரசீது உண்டு ஆனால் கிணற்றை காணவில்லை என்னும் நிலையை மன்னார் மாவட்டச் செயலகம் உருவாக்கி விட்டது.


# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

உலக செய்திகள்
World News

# வட அமெரிக்க தமிழர் பேரவையின் "அமெரிக்கத் தமிழ் முன்னோடி விருது"கள் பற்றிய அறிவித்தல் வெளியாகியுள்ளது

## FeTNA – Tamil American Pioneer Award Recipients - 2023

வட அமெரிக்க தமிழர் பேரவையின் பெருமை வாய்ந்த அமெரிக்கத் தமிழ் முன்னோடி விருது பெற்றவர்களை பேரவை மனதார பாராட்டுகிறது!

மேற்படி விருதுகளைப் பெற்ற 3 சாதனையாளர்களின் பெயர்கள் இங்கு பிரசுரமாகியுள்ளன. இந்த உயர் விருதுகளைப் பெற்ற இந்த மூன்று சாதனையாளர்களின் செயற்பாடுகள். அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அவர்கள் மேற்கொண்டுள்ள பணிகள் தொடர்பான விபரங்கள் ஆங்கிலத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

---------------------------

FeTNA – Tamil American Pioneer Award Recipients - 2023

Dr. Indran Indrakrishnan in the "Medicine" category



Dr. Indran B. Indrakrishnan, a Sri Lanka born Tamil, is a Physician & an adjunct Professor at Emory University school of Medicine, Atlanta, Georgia. He sits on the Georgia Board of healthcare workforce overseeing the healthcare of Georgia. Dr. Indrakrishnan has a special passion & interest for the prevention of colorectal cancer.

The Georgia state Assembly honored him by passing a resolution declaring February 14th, 2018, as Dr. Indrakrishnan Day in Georgia for his relentless service to the community, making him the first physician and the first American of Asian descent to receive such an honor. Georgia senate also passed a resolution recognizing Dr. Indrakrishnan's exceptional contributions in the treatment and raising of colon cancer awareness and leadership as a Professor of Medicine at Emory University school of Medicine. Georgia Asian Times Magazine honored him twice as one of 25 most Influential Asian Americans in Georgia.

Dr. Indrakrishnan received lifetime achievement award of 2023 from Thamilar Thahaval magazine & Tamil information Center in Canada for his services & work in the medical field. With Dr Indrakrishnan's persuasion, Georgia state declared January 14th Thai Pongal day and April 14th Tamil New year day in Georgia. Dr Indrakrishnan received "person of the year" award from the Greater Atlanta Tamil Sangam, for his community services & philanthropic activities towards Tamils.



Dr. Venu Prabaker in the "Medicine" category

Dr.Venu Prabaker is a highly experienced physician with over 35 years of practice in internal medicine, with a focus on aggressive preventive care to provide longer & healthier life. He was the Founder, President, and CEO of San Diego Independent Accountable Care Organization, Health Care Medical Group, CareMed Corp which developed the first electronic medical records in the country in 1994, WelconnectMD as well as a co-founder of MyOwnMD and a Co-Founder of American Tamilnadu Medical Association (ATMA).

He is one of the Board Member a charitable organization SDIAS and founder & CEO of "We are the Parents Foundation" for orphan kids' education. He served as a Board Member of San Diego Medical Society, Solo & Small Practices Board of California Medical Association.

He has founded and led various organizations over his long career as well as served as a passionate educator and clinical faculty member for multiple universities including Stanford, UCSD, USC, Yale etc., with extensive experience in teaching and supervising medical students, residents, physician assistants, and nurse practitioners over his long career. He is also one of the founders of San Diego Tamil Sangam.

Ms.Thenmozhi Soundararajan in the "Activism" category



Thenmozhi Soundararajan is a Dalit Civil rights artist, organizer, and author of the Trauma of Caste who has worked with hundreds of organizations to better understand the urgent issues of racial, caste, and gender equity. Working across disciplines she is an innovative strategist and thinker that has built bridges between many communities around the world. Through her work at Equality Labs, Thenmozhi has mobilized the South Asian American community to confront their historical trauma and to build power and to heal from structural violence.

Her intersectional, cross-pollinating work—research, education, art, activism, and digital security—helps to create a more generous, global, expansive, and inclusive definition of South Asian identity, along with safe spaces from which to honor the stories of these communities. Thenmozhi's work has been recognized by the U.S. Congress, The Smithsonian Asian Pacific American Center, New York Times, Washington Post, BBC, Guardian, ABC, and NBC news. She is a current fellow at Stanford Center for South Asian Studies.

நன்றி,
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.

# கைக்குழந்தையுடன் அலுவலகம் வந்து பணி செய்த பெண் மேயர்



கேரளாவில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த உள்ளாட்சி தேர்தலில் ஆளும் இடது ஜனநாயக முன்னணி அதிக இடங்களை கைப்பற்றியது. இதில், திருவனந்தபுரம் மாநகராட்சி மேயராக ஆர்யா ராஜேந்திரன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நாட்டிலேயே மிக குறைந்த வயதில் மேயர் ஆனவர் என்ற பெருமையை பெற்றார். இவருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் இளம் எம்.எல்.ஏ.வான சச்சின் தேவுக்கும் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் திருமணம் நடைபெற்றது. இந்த தம்பதிக்கு கடந்த மாதம் 10-ந் தேதி பெண் குழந்தை பிறந்தது. இந்நிலையில் மேயர் ஆர்யா ராஜேந்திரன் தனது கைக்குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு அலுவலக பணிகளை கவனிப்பது போன்றும், கோப்புகளில் கையெழுத்திடுவது போன்றும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகின.

ஆர்யா ராஜேந்திரனை பாராட்டியும், வாழ்த்தியும் கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation
உடற்பருமன் குறைத்தல் | Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



இலங்கை செய்திகள் Sri Lanka News




# சிறுவயது முதல் சுற்றுசூழல் பாதுகாப்பு சிந்தனை வலுவூட்டப்பட வேண்டும் – யாழ்ப்பாண மாவட்ட செயலர்

பு. கஜிந்தன்

சிறுவயது முதல் சுற்றுசூழல் பாதுகாப்பு சிந்தனை வலுவூட்டப்பட வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட செயலர் அ.சிபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பங்குதாரருக்கான கலந்துரையாடல், இயக்குனர் அருட் தந்தை பிரான்சிஸ் அடிகளாரின் வழிநடத்துதலில், யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் (20.09.2023) அன்று யாழ்ப்பாணம் கியூடெக் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் கலந்து கொண்டார். அதன்பின்னர் கருத்துதெரிவிக்கையில்,

இவர் தனது உரையில் சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் சகல மட்டத்தினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது காலத்தின் கடமையாகும்.

பொறுப்புள்ளவர்களின் பொறுப்பற்ற தன்மையும், சட்டத்தை மதியாமையும், சட்டத்தை முழுமையாக பின்பற்றாமையும், மனப்பாங்கில் மாற்றம் ஏற்படாமையுமே நாம் பின்னடைவை எதிர் கொள்ள காரணமாகின்றன.

இவற்றில் இருந்துசிறுவர்கள் முதல் சகல மட்டத்தினரும் ஒன்றிணைந்து செயற்பட்டு பரிந்துரைக்கின்ற சூழலை இவ் ஒன்றுகூடல் ஏற்படுத்த வேண்டும். சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் திட்டமிடலை தூரநோக்குடன் வகுப்பது காலத்தின் தேவையாகும் - என்றார்.

தொடர்ந்து இக்கலந்துரையாடலை யாழ்ப்பாண பல்கலைகழக பேராசிரியர் திருமதி. ஞா. இராஜேந்திரமணி நெறிப்படுத்தினார். அவர் தனது கருத்துரையில், சூழலும் சுற்றுலா அபிவிருத்தியும் மேம்படுத்துவதில் சகல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பும் வழிகாட்டலும் சூழலை மேம்படுத்துவதுடன் சுற்றுலா தளங்களாக மாற்றக் கூடிய வல்லமையும் செயலூக்கம் பெற வேண்டும் என்றார்.

இக்கலந்துரையாடலில் தெல்லிப்பளை, வேலணை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், பிரதேச சபை செயலர்கள், சுகாதார பரிசோதகர்கள், வனவள திணைக்கள உத்தியோகத்தர்கள் கடல்வள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சுற்றுச் சூழல் அதிகார சபை, நீர்பாசன திணைக்கள பொறியியலாளர்கள், தேசிய நீர்வழங்கல் அதிகார சபை உத்தியோகத்தர்கள, ஊடகவியலாளர்கள் மற்றும் கிராமிய சமூகத்தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# ஐ.எம்.எப்பிடம் இருந்து வாங்கப்பட்ட நிதியில் 9 ரில்லியன் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது – சுந்தரலிங்கம் பிரதீப்

## உங்களுக்கு முடியாவிட்டால் நாட்டை முடியுமானவர்களிடம் கொடுத்துவிட்டு நீங்கள் வீடு செல்லுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

ஐ.எம்.எப் இடமிருந்து வாங்கப்பட்ட கடனில் மூன்று ரில்லியன் ரூபா மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றது. மிகுதி 9 ரில்லியன் ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டு ஊழல் செய்யப்பட்டு இருக்கின்றது என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட ஊடகவியாளர்கள் சந்திப்பு யாழ்ப்பாணம் தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையிலே தற்பொழுது இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளில் சீனா முதலிடம் வகிக்கின்றது. எனவே தற்பொழுது ஐ.எம்.எப் இலங்கைக்கு அதிகளவு கடன் கொடுத்தமை காரணமாக ஐ.எம்.எப் இந்த கடன் சம்மதமாக அதாவது சீனாவில் இருந்து இலங்கை பெற்ற கடன் தொடர்பாக அறிக்கை கேட்ட பொழுதும் இலங்கை அரசாங்கம் வாய் திறக்கவில்லை.

சீனா அரசாங்கமே தொடர்பாக கருத்துக்கள் கூறப்படவில்லை எனவே கடந்த காலத்திலே மத்திய வங்கி ஆளுநர் எமது நாடு கடன் கடனை திருப்பி செலுத்தாது என்று வெளிப்படையாக கூறியது பிரச்சனை வந்தது.

எனவே அவர் என்ன செய்தது என்பது தனித்தனியாக கடன் பெற்ற நாடுகள் சென்று பேச்சுவார்த்தை செய்திருந்தால் இந்த பிரச்சனைக்கு தீர்வுகளை காணலாம்.

எனவே தற்போது ஐ.எப்.எப் கடன் வாங்கின் காரணமாக போடுகின்ற அனைத்து நிபந்தனைகளுக்கும் இலங்கை உட்பட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

அதுமட்டுமல்ல அதை வெளிநாடுகளைப் பெற்ற கடனுக்கு அந்த நாடுகள் விதிக்கின்ற விதிக்கின்ற நிபந்தனைகளுக்கும் நாடு செலவிடு ஏற்பட்டது. அதன் காரணமாகத்தான் இன்று இந்தியா இந்தியாவில் அடுத்த கடனாக இந்தியாவிடம் பெற்று இருக்கிறது. இந்தியா கேட்கின்ற வளங்களை இலங்கை கொடுக்கின்ற நிலைமை என்று காணப்படுகின்றது.

உங்களுக்கு முடியாவிட்டால் நாட்டை முடியுமானவர்களிடம் கொடுத்துவிட்டு நீங்கள் வீடு செல்லுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

அதாவது அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டிலிருந்து ஒன்பது ரில்லியன் ரூபாய் கடன் வாங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கணக்காய்வு திணைக்களம் கூறி இருக்கின்றது வாங்கப்பட்ட கடனில் மூன்று ரில்லியன் ரூபா மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றது. மிகுதி 9 ரில்லியன் ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டு ஊழல் செய்யப்பட்டு இருக்கின்றது - என்றார்.

# அரைகுறை விடயங்கள் தெரிந்தவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டதாக கூறுகின்றார்கள் – அனந்தி காட்டம்!



திருகோணமலையில் லெப்டினன்ட் கேணல் தியாகி திலீபனுடைய ஊர்தி மீதும், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதும் சிங்கள காடையர்கள் வெறித்தனமாக தாக்கியது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இன்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

அண்மைக் காலமாக, அத்துமீறிய சிங்கள குடியேற்றம் மற்றும் புத்த விகாரைகள் அமைப்பது தொடர்பாகவும் போராட்டங்கள் நடாத்தி நாங்கள் எதிர்ப்புகளை எங்களது மக்கள் காட்டிக்கொண்டு இருந்தாலும் கூட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மௌனமாக இருப்பதுடன் இந்த சம்பவங்களையும் பார்த்தும் பாராத மாதிரி இருக்கிறார்.

இந்திய அரசிடம் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தான் இந்த உண்ணாவிரதத்தினை தியாக தீபம் திலீபன் அவர்கள் கடைப்பிடித்தார். இந்த உண்ணாவிரதம் இருந்தபோது விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எந்த தடையும் இருக்கவில்லை.

அவர்கள் மிகவும் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலை இருந்தது. அவர்களை இந்த இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்குள் கொண்டுவர வேண்டும் என்ற காரணத்திற்காக சுதந்திரமாக அவர்களை நடமாட விடப்பட்டது. ஆனால், அரைகுறை விடயங்கள் தெரிந்தவர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டதாக கூறுகின்றார்கள்.

அகிம்சை நாடு என கூறப்படும் இந்தியா ஆயுதங்களையும் பறித்துவிட்டு, திலீபன் அண்ணாவையும் மரணிக்க விட்டது.

உண்மையிலே அந்த தியாகியை நினைவு கூருகின்ற எல்லாருக்குமே தெரியும், விடுதலை புலிகளுக்கு ஆயுதம் ஏந்தி போராடவும் தெரியும், தியாக வழியில் போராடவும் தெரியும் என்று. அந்த தியாகியுடைய தியாகத்தை தெரியாத சிங்கள காடையர் கூட்டம் இந்தமாதிரி செய்திருக்கின்றார்கள்.

திருகோணமலை சிங்களவர்களின் இடம் இல்லையே. அது தமிழர்களுடைய மரபுவழி வந்த இடம். விடுதலைப் புலிகள் இருந்த போது சிங்களவர்கள் சொல்லி இருக்கலாமே அது சிங்கள இடம், தங்களுடைய குடியேற்றங்கள் இருக்கின்றன என்று. தற்போது யுத்தம் முடிந்து அப்பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டு, சிங்களவர்கள் மேலோங்கிப் போய் இன்றைக்கு திருகோணமலை தங்களுடைய இடம் என்று சொல்லும் அளவிற்கு தான் சிங்களவர்களுடைய ஆதிக்கம் இருக்கிறது. இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டபோது இருந்த காணி பூமிகள் கூட தற்போது எங்களிடம் இல்லை.

இதுவே வட பகுதியில் சிங்கள பாராளுமன்ற உறுப்பினருக்கு இந்த மாதிரி யாராவது செய்திருந்தால் என்ன நிலைமை என யோசித்து பாருங்கள். இலங்கையில் நீதி சிங்களவருக்கு புறம்பாகவும், தமிழருக்கு புறம்பாகவும் உள்ளது. தமிழ் நீதிபதிகள் சொல்கின்ற தீர்ப்பை மீறி, நீதிமன்றத்தை அவமதிக்கின்ற தரப்பாக தான் சிங்கள இனவாதிகள் செயற்படுகின்றார்கள்.

தற்போது ஐக்கிய நாடுகள் சபை கூடிக்கொண்டு இருக்கின்ற இந்த நேரத்தில், ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு சிங்கள காடையர்கள், 83ஆண்டு தமிழர்களை தாக்கி அழித்தது போல செயற்பட்டுள்ளார்கள். நாகரீகமான காலத்தில் கூட அநாகரீகமான முறையில் நடக்கக் கூடிய சிங்கள காடையர்கள் தான் இந்த மண்ணில் இருக்கின்றார்கள் - என்றார்.



# திலீபனின் ஊர்தி மீதான தாக்குதலும் விளைவுகளும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

திருகோணமலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வாகன ஊர்தி தாக்கப்பட்டிருக்கிறது. திலீபனின் படத்தை ஏந்திய அந்த ஊர்தி கடந்த ஆண்டும் அந்த வழியால் சென்றிருக்கிறது. இது இரண்டாவது தடவை. அது தாக்கப்பட்ட இடம் கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் அபகரிக்கப்பட்ட தமிழ் நிலம். கடந்த ஆண்டு அந்த ஊர்தி குறிவைக்கப்படவில்லை. இந்தமுறை தான் அது குறிவைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊர்தியை குறிவைத்து அசம்பாவிதங்கள் நடக்கலாம் என்பது ஏற்கனவே மட்டக்களப்பில் உணர்த்தப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு தாக்குதலை முன்னணி எதிர்பார்க்கவில்லை என்பது காணொளிகளைப் பார்க்கும் பொழுது தெரிகிறது. தம்மைத் தற்காத்துக் கொள்ளத் தேவையான ஆளணிகளோடு அவர்கள் வரவில்லை என்பதும் தெரிகிறது. தாக்கப்பட்ட போது திருப்பித் தாக்கும் நிலையில் அவர்கள் இருக்கவில்லை. பின்வாங்கும் நிலைமையே காணப்பட்டது. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மத்தியில் ஊடகவியலாளர்களும் இருந்திருக்கிறார்கள். அந்த ஊடகவியலாளர்களில் சிலர் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினரைப் பாதுகாக்க முற்பட்டிருக்கிறார்கள். தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மத்தியில் பெண்கள் காணப்படுகிறார்கள். அதை ஒரு சமூகத்தின் தாக்குதலாகக் காட்ட வேண்டும் என்று நன்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

முன்னணி கடந்த சில மாதங்களாக தமிழ் அரசியலை நொதிக்கச் செய்கின்றது. தமிழ் எதிர்ப்பு அரசியலின் ஈட்டி முனையாக அக்கட்சி மேலெழுந்து வருகிறது. குறிப்பாக நிலப்பறிப்பு, விகாரைகளைக் கட்டுவது போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக அக்கட்சி தீவிரமாக எதிர்ப்பை காட்டி வருகிறது. எனவே அக்கட்சிக்கு அதன் வரையறைகளை உணர்த்தும் விதத்தில் அச்சுறுத்தலைக் கொடுப்பதே அத்தாக்குதலின் நோக்கமாக இருக்கலாம். ஏற்கனவே கஜேந்திரகுமாரின் கொழும்பு இல்லத்தை முற்றுகையிட முற்பட்டமையும் அந்த நோக்கத்தோடுதான். அது கஜேந்திரக்குமாரை விடவும் அவருடைய தாயாருக்கு அச்சுறுத்தலானது. ஏற்கனவே கணவனை பறிகொடுத்தவர். அவரை பொறுத்தவரை அதுதான் அவருடைய வசிப்பிடம். அங்கே அவருக்கு நெருக்கடியைக் கொடுப்பதன் மூலம் அவருடைய மகனுக்கு நெருக்கடியைக் கொடுக்கலாம். அதனால்தான் அந்த வீட்டை முற்றுகையிட முயற்சித்தார்கள்.

எனவே திருகோணமலையில் நடந்த தாக்குதலானது 2009க்குப் பின் தமிழ் எதிர்ப்பு அரசியலுக்கு இருக்கக்கூடிய வரையறைகளை உணர்த்தும் நோக்கிலானது என்று சொல்லலாம்.

அந்த ஊர்தி அந்த வழியால் போனதால் சிங்கள மக்கள் ஆத்திரமூட்டப்பட்டார்கள் என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. பொதுவாக எல்லா எதிர்ப்பு அரசியல் களங்களிலும் இந்த வாதம் முன்வைக்கப்படுவதுண்டு. ஆயுதப் போராட்டத்தின் தொடக்க காலங்களில் கொரில்லாத் தாக்குதல்கள் நடந்த போதும் இந்த வாதம் முன்வைக்கப்பட்டது. குளவிக் கூட்டுக்குக் கல்லெறிகிறார்கள். அதனால் குளவிகள் கலைந்து அப்பகுதியில் இருக்கும் சாதாரண மக்களைக் கொட்டும் என்றும் விளக்கம் தரப்பட்டது. எதிர்ப்பு அரசியலின் பண்பே அத்தகையதுதான். எதிர்ப்பு கூர்மையடையும் பொழுது அதற்கு எதிரான ஒடுக்குமுறையும் கூர்மை அடையும். ஒடுக்கும் தரப்பு அதன் மூலம் தன்னை அம்பலப்படுத்தும்.அதனால் ஒடுக்கப்படும் தரப்பு மேலும் அரசியல் மயப்படுத்தப்படும். ஒடுக்கு முறைக்கு எதிராக அணி திரளும். உலகமெங்கிலும் எதிர்ப்பு அரசியல் அப்படித்தான் வளர்ந்திருக்கிறது.

திருமலைச் சம்பவம் முன்னணியின் வாக்கு வங்கியைப் பலப்படுத்தும். அதேசமயம் அது திருகோணமலையில் இளம் தலைமுறையினர் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தக் கூடியது. கடந்த 14 ஆண்டுகளாக ஒரு தலைமுறை அரசியல் நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. அதில் ஒரு பகுதி ஏன் எதிர்க்க வேண்டும் என்று கேட்கத் தொடங்கிவிட்டது. இன்னொரு பகுதி ஏன் பொது எதிரி என்று அழைக்க வேண்டும் என்றும் கேட்க தொடங்கிவிட்டது.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் திருமலைச் சம்பவமானது ஒடுக்கு முறைக்கு எதிரான விழிப்பை அதிகப்படுத்தக் கூடியது. சம்பவத்தின் பின் அங்குள்ள இளையோரின் சமூகவலைத்தளச் செயற்பாடுகளில் அதைக் காணக் கூடியதாக இருப்பதாக ஒரு சமூகச் செயற்பாட்டாளர் சொன்னார். சம்பவத்துக்கு முன் திலீபன் யார் என்று கேட்டால் தெரியாது என்று சொல்லக்கூடிய பலரும் இப்பொழுது திலீபனைத் தேடி வாசிக்கிறார்கள் என்றுமவர் சொன்னார். அதுமட்டுமல்ல. சம்பவத்தின் பின் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள பெரும்பாலான கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் முன்னணியுடன் தமது சகோதரத்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக முன்னணியில் இருந்து பிரிந்து சென்ற மணிவண்ணன் உட்பட தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் முன்னணிக்கு ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத அரசியல்வாதிகளும் சம்பவத்தைக் கண்டித்திருக்கிறார்கள். நாட்டுக்கு வெளியே தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் உட்பட பலரும் கண்டித்திருக்கிறார்கள்.

ஒடுக்குமுறை என்று வரும்பொழுது தமிழ் மக்கள் இனமாகத் திரள்வார்கள் என்பதனை இச்சம்பவத்தின் பின்னரான நிலமைகள் காட்டுகின்றன. இங்கேதான் முன்னணி கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு விடயமும் இருக்கின்றது.

காலத்துக்கு காலம் தமிழ் மக்கள் ஏதோ ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஆகக் கூடிய பட்சம் பெருந்திரளாகத் திரண்டிருக்கிறார்கள். தமிழ்க் கட்சிகளால் அவர்களை அவ்வாறு திரட்ட முடியவில்லை என்பதுதான் கடந்த 14 ஆண்டு காலத் துயரம்.

திருமலையில் முன்னணி தாக்கப்பட்ட இடம் எதுவென்று பார்த்தால் அது திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் சிங்களமயப்படுத்தப்பட்ட ஒரு பகுதிதான். கடந்த பல தசாப்தகால தமிழ் அரசியலால் அப்பகுதியை மீட்க முடியவில்லை. அது மட்டுமல்ல கிழக்கில் தொடங்கி அது வடக்குக்கும் படர்ந்து வருகிறது. அதை எதிர்த்த காரணத்தால்தான் முன்னணி தாக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட போது திருமலை யாழ் பெருஞ்சாலையில் முன்னணி ஒற்றைக் கட்சியாகத்தான் நின்றது. அதன் நாடாளுமன்ற உறுப்பினர் மிகச் சில ஆதரவாளர்களோடு காணப்பட்டார். அவர்களை ஆதரிக்கும் மக்கள் அங்கே திரண்டு நிற்கவில்லை. அந்த ஊர்தி சில வாகனங்களோடுதான் நகர்ந்து சென்றது. அது ஒரு மக்கள் மயப்பட்ட வாகனப் பேரணி அல்ல. தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் ஈட்டி முனையாகக் காணப்படும் ஒரு கட்சி மிகச் சிலரோடு ஒரு தாக்குதலை எதிர்கொண்டமை என்பது எதைக் காட்டுகின்றது? அது தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் பலவீனமா? அல்லது அந்தக் கட்சியின் பலவீனமா?

இதே திலீபனின் நாளில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 2020ல் எல்லாக் கட்சிகளும் இணைந்து எதிர்ப்பைக் காட்டின. அப்பொழுது போலீசார் நீதிமன்றத் தடை உத்தரவின் மூலம் அந்த எதிர்ப்பு நடவடிக்கையை முறியடிக்க முயற்சித்தார்கள். ஆனால் அங்கே ஒன்றுபட்டு நின்றதால் போலீசார் அந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இதை இங்கு எழுதுவதன் மூலம் இக்கட்டுரையானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏனைய கட்சிகளோடு இணைந்து ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டும் என்றெல்லாம் சிறுவர் சித்திரக் கதை எழுத வரவில்லை. ஆனால் தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியல் எனப்படுவது இவ்வாறு மக்கள் மயப்படாத சிறு திரள் நடவடிக்கையாகச் சுருங்கி விட்டதை சிங்கள பௌத்த அரசியலும் வெளியுலகமும் எப்படிப் பார்க்கும்?

# மொன்றியால் கவிஞரும், எழுத்தாளருமாகிய திருமதி. யோகநாயகி நடராஜாவின் மூன்று நூல்கள் வெளியீடு







கியூபெக் தமிழ் மூத்தோர் இணையத்தின் அங்கத்தவரும், கவிஞரும், எழுத்தாளருமாகிய மதிப்புக்குரிய திருமதி. யோகநாயகி நடராஜாவின் படைப்புக்களான: இலங்கையில் உள்ள ஆலயங்கள் (கட்டுரைகள்), உள்ளத்தின் ஊற்றுக்கள் (கவிதை தொகுப்பு), திருக்குறள் சித்தனை விளக்கம் (கருத்து குவியல்) ஆகிய மூன்று நூல்களும் 17-09-2013ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை கியூபெக் தமிழ் மூத்தோர் இணையமண்டபத்தில் நூற்றுகணக்கான தமிழ் பற்றாளர்கள் மத்தியில் வெகு சிறப்பாக வெளியிடப்பட்டன.

மொன்றியால் திருமுருகன் கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ வெங்கடேஸ்வர குருக்கள் அவர்கள் மங்கள தீபம் ஏற்றி ஆசிவழங்க விழா ஆரம்பமாகியது.

ஆரம்பமாக தமிழ்தாய் வாழ்த்து பாடல், கனேடிய தேசிய கீதம் இசைக்கப்பட திருமதி. உமராஜ் அவர்களின் நிகழ்ச்சி தொகுப்புடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

இவ் நூல்களின் ஆய்வுரைகளை திரு. சண்முகராஜா (வீணை மைந்தன்), திரு. க. உயிரவன், திருமதி. உமா மோகன், திரு. செல்லையா மூர்த்தி (தமிழ் ஆசிரியர்), திருமதி. இளவரசி இளங்கோவன் (தமிழ் ஆசிரியை), திருமதி. ரஞ்சனி ரஞ்சன் (அகரம் வானொலி) ஆகியோர் மிக சிறந்தமுறையில் வழங்கி நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

தொடர்ந்து சிறப்புரையை திரு. காசிப்பிள்ளை ஜெயசேகரம் (கவிஞர், ஆசிரியர்), திரு. உதயகுமார் (ஆத்மஜோதி), திரு. காசிப்பிள்ளை ஜெகசோதிலிங்கம் (கவிஞர், தமிழ் ஆசிரியர்), திருமதி. தயாபரி சர்மா ஆகியோர் வழங்கி யிருந்தார்கள்.

நிகழ்வில் மூத்தோர் இணைய அங்கத்தவர்களும், வருகை தந்திருந்த தமிழ் பற்றாளர்களும் பொன்னாடைகள் போர்த்தி, மலர்க்கொத்துகள் வழங்கி தமது அன்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்ததோடு விழா நாயகியான தமது அங்கத்தவரான யோகநாயகி நடராஜா அவர்களை வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

தகவல், சீ.ஸ்ரீரஞ்சன் (செயலாளர் (கியூபெக் தமிழ் மூத்தோர் இணையம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 6000க்கு மேற்பட்ட இந்திய சுற்றுலா பயணிகள் வருகையை வரவேற்றுக் கொண்டாடிய சுற்றுலா பணியகம்!



"கோடிலியா" சுற்றுலா கப்பல் மூலம் ஜுன் 16முதல் 9 தடவைகளாக காங்கேசன்துறை ஊடாக யாழ்ப்பாணம் வந்த 6000க்கும் மேற்பட்ட சுற்றுலாவிகளை வரவேற்றுக் கொண்டாடும் நிகழ்வு காங்கேசன்துறை வலி வடக்கு பிரதேச சபை கட்டடத்தில் 15-09-2023 அன்று நடைபெற்றது.

வடக்கு மாகாண சுற்றுலாத்துறைப் பணியகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் மற்றும் தூதுவரக அதிகாரி ராம் மகேஷ் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வில், சுற்றுலாவிகள் வரவேற்கப்பட்டதுடன், சுற்றுலாப் பயணிகளுக்கு வரவேற்பு உபசார சேவை மற்றும் போக்குவரத்துச் சேவையை வழங்கியவர்களும் நன்றி கூறி கௌரவிக்கப்பட்டனர்.

வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியக தலைவர் பத்திநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆரம்பத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக



அமைக்கப்பட்ட உள்ளூர் உற்பத்திகளுக்கான காட்சிக்கூடங்களை இந்தியத் துணைத்தூதுவர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டதுடன், உற்பத்தி மற்றும் விற்பனையாளர்களுக்கு சுற்றுலாப் பயணிகளால் கிடைத்துவரும் நன்மைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதேபோல், சுற்றுலாப் பயணிகளுக்கான முச்சக்கரவண்டி, தனியார் வாகன சேவையை வழங்கி வரும் போக்குவரத்துச் சங்கங்கள் மற்றும் தனியார் வாகன உரிமையாளர்களுக்கும் அவர்கள் வழங்கிவரும் சேவைக்காக நன்றி பாராட்டப்பட்டது.

மேலும், ஆரம்பம் முதல் சுற்றுலாவிகளை வரவேற்கும் இந்த ஏற்பாட்டை களத்தில் ஒருங்கிணைத்துச் செயற்படுத்திவரும் தெல்லிப்பளை பிரதேச செயலகம் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை உத்தியோகத்தர்களுக்கும் நன்றி பாராட்டப்பட்டது.

நிகழ்வின் சிறப்பம்சமாக, வலிகாமம் வடக்கு கட்டுவன் பகுதியைச் சேர்ந்த உள்ளூர் கலைஞர்களின் ஒயிலாட்டம் நிகழ்வும் இடம்பெற்றதுடன், அந்தக் கலைஞர்களும் நன்றி கூறிப் பாராட்டப்பட்டனர்.

தற்போதைய காலநிலைச் சூழ்நிலை காரணமாக அடுத்துவரும் மாதங்களில் கோடிலியா சுற்றுலாப் பயணக் கப்பல் சேவை நடைபெறாது என்றபோதும், மீண்டும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் இந்தச் சேவை தொடர்ந்து நடைபெறும் எனவும் தெரிவித்த இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ், மேலதிகமாக, காங்கேசன் - நாகபட்டினம் நாளாந்த கப்பல் சேவையும் ஆரம்பிக்கும் எனவும், இதன்மூலம் வடக்கு மாகாண மக்கள் இன்னும் பல நன்மைகளை அடைவர் என்று இங்கு உரையாற்றும்போது தெரிவித்தார்.



# அமைச்சர் டக்ளஸை எதிர்க்க துணிந்த வடக்கு ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் — பதவி பறி போகுமா?

வடக்கு ஆளுநர் பி.எச்.எம். சாள்ஸ் அவர்களை வடக்கு ஆளுநராக கொண்டு வந்ததில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்கு அளப்பெரியது இதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆளுநர் சாள்ஸ் எப்படிப் பதவிக்கு வந்தார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம் அதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பங்கும் உள்ளதாக கூறப்படுகிறது.

சுங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக சாள்ஸ் இருந்தபோது நிதி அமைச்சராக ரவி இருந்தார். தற்போதைய ஆளுநர் செயலாளரான நந்தகோபன், முன்னர் பணிப்பாளராக இருந்தார்.

இந்த இணைப்புக்களை சரியாக இணைந்ததால் தான் நேர்மையான அதிகாரியான வாகிசனை நீக்கிவிட்டு நந்தகோபனை அருகில் கொண்டு வந்தார் சாள்ஸ்.

வடக்கு ஆளுநர் தொடர்பில் பல்வேறு முறைப் பாடுகள் ஜனாதிபதி செயலகம் வரை சென்ற நிலையில் ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானி சாலகவும் சாள்சை மாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே உள்ளாராம்.

ஆளுநரை மாற்ற வேண்டாம் என செல்வம் அடைக்கலநாதனும் சாள்ஸ் நிர்மலநாதனும் ஜனாதிபதியின் நெருங்கிய சகாக்களுக்கு குடைச்சல் கொடுக்க ஆரம்பித்துள்ள நிலையில் விக்னேஸ்வரன் ஒரு படி மேலே சென்று ஜனாதிபதியிடம் நேரடியாகவே "ஆளுநரை மாற்றுங்கள் எனக் கூறிவிட்டாராம்".

இவரை மாற்ற வேண்டாம் என கூறுபவர்கள் தொடர்பில் ஏன் என்பதற்கு "எல்லாமே ஊழல் தான்" என ஒரு சொல்லில் ரணிலிடம் பதிலளித்தாராம் விக்கி.

சரி இது ஒரு புறம் நடக்க அமைச்சர் டக்ளஸ்சை எதிர்ப்பதற்கு காரணமான மகள் பாசம் தான் என்ன? விரிவாகப் பார்ப்போம்.

யானையின் காதில் தேனீ புகுந்தால் யானை எவ்வளவு சங்கடப்படும் என்பதை கதைகள் மூலம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் தற்போது நடக்கும் செயற்பாடு கதை அல்ல நியமாகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு குடைச்சல் கொடுக்கும் செயற்பாட்டை ஆளுநர் மேற்கொண்டுள்ளார்.

வடமாகாண சுகாதார பணிப்பாளராக நிரந்தரமாக எவரும் நியமிக்கப்படாத நிலையில் பதில் பணிப்பாளராக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சங்கமுத்து சத்தியமூர்த்தி கடமையாற்றி வருகிறார்.

வட மாகாண நிரந்தர சுகாதாரப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கும் முயற்சியில் மன்னார் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றும் வைத்திய கலாநிதி வினோதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயற்சித்துள்ளார். மத்திய சுகாதார அமைச்சருடனும் செயலாளருடனும் கலந்துரையாடி அவரை நியமிப்பதற்கான வேலைப்பாடுகள் இடம்பெற்றன.

மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரான சந்திரகுப்தா மாகாண சுகாதார பணிப்பாளரை நியமிப்பதற்கு ஆளுநருடைய சிபாரிசு வேண்டுமென கூறியதன் அடிப்படையில் வடமாகாண ஆளுநர் எழுத்து மூலம் மத்திய சுகாதார அமைச்சுக்கு சிபாரிசினை அனுப்பியதாக அறிய கிடைக்கிறது.

மறுநாள் வேதாளம் முருக்க மரத்திலிருத்தில் ஏறியது போல சுகாதார அமைச்சின் செயலாளருக்கு தொலைபேசி மூலம் ஆளுநர் சார்ள்ஸ் தொடர்பு கொண்டு, கிளிநொச்சி மற்றும் வவுனியா வைத்தியசாலைகளின் சம்பவம் தொடர்பில் விசாரணை இடம்பெறுவதாகவும் சத்தியமூர்த்தியை வடமாகாண சுகாதார பணிப்பாளர் பதவியில் இருந்து மாற்ற வேண்டாம் என கூறினாராம்.

இந்தத் தகவலை ஆளுநரின் அருகில் இருந்த ஒருவர் "படாச்" என்று அமைச்சர் டக்ளஸ் காதுக்கு போட்டுள்ளார்.

ஏன் அவ்வாறு சத்தியமூர்த்தியை காப்பாற்றுகிறார் என அமைச்சரின் சகாக்கள் தேடி பார்த்தபோது, ஆளுநரின் மகள் ரஷ்யாவில் மருத்துவ படிப்பை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பயிற்சிக்காக சென்றுள்ளார் என்ற சம்பவம் தெரியவந்தது.

சரி பயிற்சி தானே. சத்தியமூர்த்தி போதனா வைத்தியசாலை பணிப்பாளர். ஏன் ஆளுநர், பணிப்பாளர் சத்தியமூர்த்தியை மாற்ற வேண்டாம் என திடீரென கூறினார் என சில தரப்புகள் ஆராய்ந்தன.

அப்போதுதான் ஜீபூம்பா பூதம் சத்தியமூர்த்தியிடம் மாட்டிய கதை வெளியில் வந்தது.

ஆளுநர் செயலகத்துக்கு வழங்கப்பட்ட அரச வாகனத்தில், ஆளுநருடைய மகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பயிற்சிக்காக சென்று வருவது அம்பலமானது.

மருத்துவ பயிற்சிக்காக மூன்றாம் இலக்க விடுதியில் இணைத்துக் கொள்ளப்பட்ட மகள், கொடுக்கப்படும் வேலைகளை உரிய வகையில் செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு பொறுப்பு வைத்தியர் ஊடாக விடுதி வைத்தியருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

விடுதி வைத்தியர், சரிவராது இவரை வேறு ஒரு விடுதிக்கு அனுப்புங்கள் என எச்சரிக்கையுடன் கூற, ஒரு வைத்தியர் "சேர்" இது ஆளுநரு டைய மகள்" என கூற உடனடியாக மாற்றி விடுங்கள் என கடுந்தொனியில் கூறிவிட்டு சென்றாராம் வைத்திய நிபுணர்.

வேறு வழியில்லை என விடுதி வைத்தியர்கள் கூற, மகள் தாயிடம் நடந்தவற்றைக் கூற, சத்தியமூர்த்தியிடம், குறித்த பிரச்சினையை சரி செய்யுங்கள் என தொலைபேசியில் ஒரு குரல் நலிந்து ஒலித்தது. பணிப்பாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் 9 இலக்க விடுதிக்கு மாற்றப்படுகிறாள் மகள்.

இந்த நன்றிக்கு பிரதி உபகாரமாக பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஆளுநருக்கு தொலைபேசி ஊடாக, நான் மாகாண சுகாதார பணிப்பாளர் பதவியில் இருந்து விலகத்தான் போகிறேன் ஆனால் தற்போது விசாரணைகள் இடம் பெற்றுக் கொண்டிருப்பதை காரணம் காட்டி தை மாதம் வரை பிட் போடுங்கள் என கூறினாராம்.

வேறு வழியில்லை கடமைப்பட்டு விட்டோம். வாழ்நாள் பூராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளராக சத்தியமூர்த்தி தான் இருக்கப் போகிறார். எனது மகளும் இங்கே தான் வைத்தியராக இருக்கப் போகிறார் என நினைத்து மகளைக் காப்பாற்ற வேண்டுமென களத்தில் இறங்கி விட்டார் தற்போதைய ஆளுநர்.

இது அத்தனையும் அமைச்சர் டக்ளஸ் காதுகளுக்கு சென்ற நிலையில் ஆளுநரிடம் ஒன்றும் பேசாது தொலைபேசி மூலம் சுகாதார அமைச்சின் செயலாளர் சந்திர குத்தாவிடம் நடந்தவற்றை கேட்டாராம் டக்ளஸ்.

அவரும் நடந்த சம்பவத்தை ஆக்கு வேறு ஆணிவேறாக அமைச்சரிடம் கூற, ஆளுநரை தூக்க வேண்டும் என டக்ளஸ் முடிவெடுத்து விட்டாராம்.

ஆளுநர் பார்க்கும் படலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் முதலாவது தொலைபேசி பெண் ஒருவருக்கு சென்றது அவர் தனது நோய் நிலைமையை காரணம் காட்டி மறுத்து விட்டார்.

இந்த விடயம் தற்போதைய ஆளுநர் சாள்சின் காதுகளுக்கு சென்ற நிலையில், நேரடியாக அமைச்சர் டக்ளஸ்சுடன் எப்படி பேசுவது என தயங்கிய சாள்ஸ் நடந்த சம்பவங்களை கூறி ஒருவரை தூது அனுப்பியுள்ளாராம்.

ரணில் விக்கிரமசிங்க நாடு வந்தடைந்ததும் அமைச்சரவை மாற்றத்துடன் வடக்கு ஆளுநர் மாற்றத்தையும் செய்தே ஆக வேண்டும் என்ற வைராக்கியத்துடன் காத்திருக்கிறார் டக்ளஸ். செய்வதறியாது நிக்கிறார் ஆளுநர் சாள்ஸ்.




# சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம் — சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமி ஒருவரின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது, காய்ச்சல் காரணமாக கடந்த மாத இறுதியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 12 இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்ட சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் பெற்றோர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

கடந்த 13ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வந்த போது நீதவான் சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் அறிக்கை தருமாறு மூவர் அடங்கிய நிபுணர் குழுவை நியமித்தார்.

விசாரணை குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு மேலும் 10 நாட்கள் எடுக்கும் நிலையில் வழக்கை எதிர்வரும் 27ஆம் திதிக்கு நீதவான ஒத்தி வைத்தார்.

இன் நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் போதனா வைத்திய சாலை சார்பில் மருத்துவ அறிக்கை ஒன்றை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

# இலங்கை அரசியல் : 75 வருடகால 'பழைய போத்தலில் பழைய கள்'



**வி.தேவராஜ்**
மூத்த
ஊடகவியலாளர்

தமிழ் மக்களும் தமிழர் போராட்டமும் காட்டிக் கொடுப்புக்களாலும் துரோகத்தனத்தாலும் பலியாகிய பல சம்பவங்களை கடந்த 75 வருடகால வரலாற்றில் பதிவுகளாக கொண்டுள்ளது. இத்தகைய காட்டிக் கொடுப்புக்களிலும் துரோகத்தனங்களிலும் மிதவாதத் தலைமைகள் உற்பட விடுதலைநோக்கி களம் இறங்கிய இளைஞர் குழாங்களையும் இந்த நோய் பற்றிக் கொண்டது. விதிவிலக்கின்றி தமிழர் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் காலத்துக்குக் காலம் சிறு சிறு துளிகளாக கிளைவிட்டுப் பரவிய இத்தகைய குருவிச்சைகளினால் தமிழினம் சந்தித்த இழப்புக்கள் கணக்கில் அடங்காதது.

• பிரபாகரனைப் பலவீனப்படுத்துவது என்பது தமிழினத்தை வேருடன் பிடுங்கிச் சாய்ப்பதற்குச் சமன்'

ஆனால் இந்த இழப்புக்களால் தமிழினம் சோர்ந்து போய்விடவில்லை. அமைதியாக மூலையில் முடங்கிவிடவும் இல்லை. அந்த இழப்புக்களையும் சுமந்து கொண்டு மீண்டெழுவதே வரலாராக உள்ளது.

2004 ஆம் அண்டில் கருணா தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து வெளியேறியபோது.

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் பலவீனப்படுத்துவது என்பது தமிழினத்தை வேருடன் பிடுங்கிச் சாய்ப்பதற்குச் சமன்" என்று வீரகேசரி வாரவெளியீட்டில் எழுதப்பட்ட எனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

கருணாவின் வெளியேற்றத்துடனும் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது பிரகடனப்படுத்திய "மனிதாபிமானத்துக்கான போரினை" இந்தியா உற்பட சர்வதேசமும் இணைந்து தலைமையேற்று "வெற்றியினை" இலங்கைக்கு பரிசாக வழங்கின. அவ்வேளையில் புதிய இலங்கை மலரப்போவதாகவும் ஜனநாயகம் தழைத்தோங்கப்போவதாகவும் தமிழ் மக்களின் வாழ்வில் விடிவு விமோசனம் பிறக்கப் போவதாகவும் பிரசாரப் பீரங்கிகள் இதற்கு சார்பானவர்களால் முழங்கப்பட்டன.

• நரிகளாகக் காத்திருந்த தமிழ்த் தலைமைகள்

அதேவேளையில் தமிழ் மக்கள் "மனிதாபிமானத்துக்கான போரில்'; கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டபோது இந்தக் கொலைகளைத் தடுத்து நிறுத்த முன்வராது அமைதி காத்து மனிதாபிமானத்துக்கான போர் "தமிழர் அரசியலில் தமக்கான விடியலைத் தரும்" என்ற எதிர்பார்ப்பில் தமிழ்த் தலைமைகள் சிங்களத்தின் கொலைக் களத்தின் ஓரத்தில் நரிகளாகக் காத்திருந்தனர்.

அனைத்துமே இவர்கள் எதிர்பார்த்தது போன்று நிறைவேறியது.

• இலங்கை அரசாங்கம் இந்தியா மற்றும் சர்வதேசத்தின் உதவியுடன் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

• தமிழ்த் தலைமைகள் தமிழர் அரசியலில் "கிங் மேக்கர்களாக" தம்மைத் தாமே முடி சூட்டிக் கொண்டனர்.

• கருணா பிள்ளையான் உற்பட இணக்க அரசியல் நடத்துபவர்கள் மகிந்த அணியினரின் செல்லப் பிள்ளைகளாயினர்.

ஆனால் தமிழ் மக்கள் "வேருடன் பிடுங்கிச் சாய்க்கப்பட்டுவிட்டனர்".

கருணா பிள்ளையான் மற்றும் இணக்க அரசியல் நடத்தபவர்களால் தமிழ் மக்களின் வாழ்வில் விடியலோ விமோசனமோ பிறக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் "மனிதாபிமானத்தக்கான போரினை" உத்தியோகப்பற்றற்ற முறையில் தலைமையேற்று நடத்தி வெற்றியை ஈட்டிக் கொடுத்த இந்தியா உற்பட சர்வதேச சமூகத்தினாலும் இலங்கை மண்ணில் ஜனநாயகத்தையோ அல்லது தமிழ் மக்களுக்கான விடியலையோ பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

கருணா பிள்ளையான் போன்றோர் தமிழ் மக்களின் விடுதலைக்காக இலங்கை ஆட்சியாளர்களுடன் குறிப்பாக மகிந்த ஆளும் வர்க்கத்துடன் இணையவில்லை. தத்தமது நலன்களுக்காக விலை போனவர்கள். எனவே இவர்களால் தமிழ் மக்களுக்கு விடுதலை விடிவு விமோசனம் என்பன கிடைக்கும் என தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

அதேபோல் இலங்கை அரசாங்கத்தின் மனிதாபிமானத்தக்கான போருக்கு உடந்தையாக நின்ற இந்தியா மற்றும் சர்வதேச சமூகமும் உண்மையில் இலங்கையில் ஜனநாயகம் மலர வேண்டும் புதிய பாதையில் பயணிக்க வேண்டும் தமிழ் மக்களுக்கு விடுதலை விமோசன் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காக போர் நடத்தவில்லை.

ஆப்கானிஸ்தானைவிட்டு அமெரிக்கா வெளியேறிய போது அமெரிக்க ஜனாதிபதி பைடன் "ஆப்கானிஸ்தானில் ஜனநாயகத்தை நிலை நிறுத்தவது அமெரிக்காவின் வேலை அல்ல" என்று குறிப்பிட்டார்.

அதேபோல்தான் இந்தியாவும் சர்வதேச சமூகமும் தத்தமது நலன்களுக்காகவே தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கைப் போரில் பங்கெடுத்தன. எனவேதான் தமக்கான நலன்களை இலங்கை ஆட்சியாளர்களிடம் இருந்து தற்போது கறந்து வருகின்றனர்.

இந்த சக்திகளின் நகர்வுகளுக்கு கர்த்தாவாக இருக்கின்ற தமிழ் மக்கள் தெருவில் நிற்க போர் நடத்தியவர்களும் போரில் பங்குபற்றியவர்களும் காட்டிக் கொடுத்தவர்களும் பலன் பெறுகின்றனர்.

மனிதாபிமானத்துக்கான போரில் இலங்கை ஆட்சியாளர்களினதும் இந்தியா உற்பட சர்வதேச சமூகத்தினதும் தத்தமது நலன் நோக்கிய வாக்குறுதிகளை உள் இழுத்து தமிழ் மக்கள் கொலைக் களத்தில் செத்துக் கொண்டிருக்க அமைதி காத்த தமிழ்த் தலைமைகளும் வடக்குக் கிழக்கில் வெறுமையாகிய தமிழர் அரசியலை பங்குபோடுவதில் இன்றுவரை குடும்பி பிடி சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களாலும் தமிழ் மக்களுக்கு விடிவோ விமோசனமோ வருவதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களுக்கான அரசியல் விடுதலை நோக்கிய பயணத்துக்கான எவ்வித தீர்வுப் பொதிகளும் இன்றி வெறும் கையுடன் நிற்கும் இவர்கள் நாடாளு மன்றம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் தம்மையும் தாம் சார்ந்தவர்களையும் வெற்றி பெறச் செய்துவிடுமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

2009 இல் போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்து அதற்கென யாப்பையும் உருவாக்கி வெளிப்படைத் தன்மையுடனான நிதி கட்டமைப்பையும் உருவாக்கி அனைத்து தமிழ்க் கட்சிகளையும் உள்ளடக்கிய பலம வாய்ந்த அமைப்பாக உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அவ் வேளையில் முன் வைக்கப்பட்ட போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையால் தொடர்ச்சியாக அது நிராகரிக்கப்பட்டது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த தமிழரசுக் கட்சியினர் இதற்கு எதிராக இருந்தனர். தமிழரசுக் கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பெயரில் அரசியல் நடத்தி தனது அரசியல் பாதையைப் பலப்படுத்தும் இலக்கை நோக்கிப் பயணிக்க முயல்கின்றது. இது இறுதியில் தமிழர்களுக்கென உள்ள அமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைத்துவிடும் என இந்தக் கட்டுரையின் பத்தியாளரால் தொடர்ச்சியாக அவ் வேளையில் எழுதப்பட்டது. ஆனால் பத்தியாளர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைப்பதாகவும் தமிழ் மக்களிடையே உள்ள ஜனநாயக அமைப்பை இல்லாதொழிக்கப் பார்ப்பதாகவும் இன்னொரு தீவிரவாதத்துக்கான விதைகளைத் தூவுவதாகவும் அயலக தூதரகத்தின் உதவியுடன் பத்தியாளரை ஊடகத்துறையில் இருந்தே அகற்றினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் அதற்கென யாப்பு உருவாக்கப்பட வேண்டும் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்க வேண்டுமென்ற கோரிக்கையை தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா அண்மையில் விடுத்திருந்ததை இங்கு பதிவு செய்தல் பொருந்தும்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழரசுக் கட்சியுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதே இதற்குச் சான்றாகும். உண்மையில் எதிர்பார்த்தது போன்று தமிழரசுக் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைத்துவிட்டதை இன்று வரலாறு பதிவு செய்துள்ளது.

• மொத்தத்தில் தமிழ் மக்களை விடுவிப்பதற்காக இலங்கை ஆட்சியாளர் பிரகடனப்படுத்தி நடத்திய மனிதாபிமானத்துக்கான போர் தமிழ் மக்களை விடுதலை செய்யவில்லை.

• தமிழிழ விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து சென்ற கருணா பிள்ளையான் மற்றும் இணக்க அரசியல் நடத்துபவர்களாலும் தமிழர் விவகாரத்தில் விடுதலை நோக்கி ஒரு துரும்பைத்தானும் நகர்த்த முடியவில்லை.

• மனிதாபிமானப் போருக்கு அணி திரண்டு ஆதரவு வழங்கி தமிழ் மக்களுக்கு எதிராகப் போரினையும் நடத்தி இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்த இந்தியா உற்பட சர்வதேசமும் தமிழர் விவகாரத்தில் ஏதும் செய்ய முன்வரவில்லை.

முள்ளி வாய்க்காலில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட போது அமைதி காத்த சர்வதேச சமூகம் ஈஸ்டர் குண்டு வெடிப்பில் பலியான தமது நாட்டு குடி மக்களுக்காகவும் உலக கத்தோலிக்க சமூகத்திற்காகவும் சர்வதேச விசாரணை கோரி நகர்கின்றனர். இந்த நகர்வுகள் மறுபுறம் ரணில் விக்ரமசிங்கவின் எதிர்கால அரசியல் நலன்களுக்கான நகர்வுகளாக அரசியல் விமர்சகர்கள் பார்க்கின்றனர்.

• அதே வேளையில் கடந்த 75 வருடங்களாக இனவாதத்தை வைத்து சிங்கள மக்களிடையே மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய சிங்கள ஆளும் வர்க்கம் 2009 இல் போர் மொளனமாக்கப்பட்டதையடுத்து இனவாதமும் போர் வெற்றி வெறியும் அரசியல் மூலதாமாக தென்னிலங்கையில் எடுபடாத நிலையில் பாதுகாப்பு என்ற போர்வையில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை நடத்தி சிங்கள ஆளும் வர்க்கம் ஆட்சிபீடமேறியதை சனல் 4 வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இது ஆட்சி அதிகாரத்துக்காக சிங்கள ஆளும் வர்க்கம் எந்த எல்லைக்கும் செல்வதற்குத் தயங்காது என்பதை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் பதிவு செய்தள்ளது. அதாவது தமது அரசியல் நலன்களுக்காக தமிழ் மக்களைத் தொடர்ச்சியாகக் கொன்றொழித்த சிங்கள ஆளும் வர்க்கம் தற்போது சிங்கள மக்களையே பலி எடுக்கத் துணிந்துவிட்டது என்பதையே ஈஸ்டர் குண்டு வெடிப்பும் அரகலயா மக்கள் எழச்சிக்குப் பிந்தைய தென்னிலங்கை நிகழ்வுகளும் துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றன.

மொத்தத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை ஆட்சியாளர்களின் மனிதாபிமானத்தக்கான போரினை வழி நடத்தி பங்குபற்றி வெற்றியினை தங்கத் தட்டில் வைத்து இலங்கையின் ஆட்சியபாளர்களுக்கு வழங்கிய இந்தியாவும் சர்வதேச சமூகமும் தமிழ் மக்களை மாத்திரமல்ல தென்னிலங்கை சிங்கள மக்களையும் சிங்கள அளும் வர்க்கத்தினரிடம் தாரைவார்த்துக் கொடுத்தள்ளனர். அதற்கும் அப்பால் அரகலய எழச்சிக்குத் துணை நிற்பதாக பாசாங்கு காட்டி மீண்டும் சிங்கள அளும் வர்க்கத்தின் பிடிக்குள் ஒட்டு மொத்த நாட்டு மக்களையும் தள்ளிவிடும் நகர்வினையே சர்வதேச சமூகம் மேற் கொள்கின்றது.

மகிந்த ஆளும் வர்க்கத்திற்கு மாற்றீடாக ரணில்விக்ரமசிங்க ஆளும் வர்க்கம் என்ற சர்வதேசத்தின் சூத்திரம் இதனையேக் காட்டி நிற்கின்றது. இதே பாணியிலேயே தமிழர் அரசியலையும் இந்தியாவும் சர்வதேசமும் உருவாக்குகின்றது. தமிழர் அரசியலும் தென்னிலங்கை அரசியலும் பழைய போத்தலுக்குள் அடைக்கப்பட்ட பழைய கள்ளாகவே பயணிக்க உள்ளது.

Email : vathevaraj@gmail.com
15th September 2023

SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION

# RADIOTHON
# ரேடியோதோன்

## SUPPORT SCARBOROUGH HOSPITALS AT THE TAMIL RADIOTHON

**Sept. 26, 2023 | 9AM to 7PM | Live-to-air on EAST FM 102.7**

One of the fastest growing communities in Canada, nearly 75% of Toronto's Tamil population lives in Scarborough. Featuring exclusive interviews with patients, SHN physicians and staff, community members, and Tamil business leaders, this year's Radiothon will showcase how SHN is excelling in providing inclusive care for the Tamil community.

**Donate today and help shape the future of healthcare in Scarborough.**

Help us raise over $200,000 to support our Love, Scarborough campaign which includes key priorities such as expanding our emergency departments, cardiac care, as well as building research and education facilities to support the Scarborough Academy of Medicine and Integrated Health (SAMIH) in partnership with the University of Toronto.

**கனடாவில் வேகமாக வளர்ந்து வரும் சமூகங்களில் ஒன்றான தமிழ் சமூகத்தில், 75% தமிழ் மக்கள் ஸ்காபரோவில் வாழ்கின்றனர். நோயாளிகள், SHN மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் தமிழ் வணிகத் தலைவர்களுடன் பிரத்தியேக நேர்காணல்களைக் கொண்ட இந்த ஆண்டு ரேடியோதோன், தமிழ் சமூகத்திற்கான அனைத்து சேவைகளும் உள்ளடக்கிய மருத்துவ பராமரிப்பை வழங்குவதில் SHN எவ்வாறு சிறந்து விளங்குகிறது என்பதை வெளிப்படுத்தும்.**

**எங்களுடைய லவ் ஸ்கார்பரோ பிரச்சாரத்தை ஆதரிப்பதற்காக $200,000 டாலருக்கு மேல் திரட்ட உதவுங்கள்.**

**இதில் எங்கள் அவசர சிகிச்சைப் பிரிவுகளை விரிவுபடுத்துதல், இருதய பராமரிப்பு, அத்துடன் ஸ்கார்பரோ அகாடமி ஆஃப் மெடிசின் அண்ட் இன்டகிரேட்டட் ஹெல்த் (SAMIH) உடனும், டொரோண்டோ பல்கலைக்கழகத்துடனும் இணைந்து ஆராய்ச்சி மற்றும் கல்வி வசதிகளை உருவாக்குதல் போன்ற முக்கிய விடயங்களை முன்னெடுக்க உதவுவோம். இன்றே நன்கொடை அளியுங்கள்! ஸ்கார்பரோவில் எதிர்கால சுகாதாரத்தை வடிவமைக்க உதவுங்கள்!!**

PROUDLY PRESENTED BY

CTCC Canadian Tamils' Chamber of Commerce
கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்

IN PARTNERSHIP WITH


east FM 102.7

CALL CENTRE SPONSOR

Lucvaa KITCHENS

EVENT SPONSORS

co-operators | CTS BUILDING SUPPLIES LTD | TIMBER MART | JC's GROUP | JC's BANQUET HALL | PRINT FAST | SLAAC Sri Lankan Accountants Association of Canada



## DONATE TODAY | இன்றே நன்கொடை அளியுங்கள்!

SHNFoundation.ca/**Tamil**

GENERAL | CENTENARY | BIRCHMOUNT

knarine@shn.ca | 416-431-8130

CHARITABLE REGISTRATION NUMBER 11914 2263 RR0001

SHN SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION | Love, Scarborough


EASY FURNITURE
Summer
BLOWOUT SALE
LOWEST PRICE IN TOWN
READY TO DELIVER
STARTING FROM $59
Queen Diamond Firm Mattress $499 $299
Rest-O-Pedic Queen $309 $249
S/S BUNK Bed (Grey) $709 $399
Dreamopedic Single Mattress $249 $149
Velvet Rose Queen Mattress $309 $299
Back Support Queen Mattress $709 $549
Spine Comfort Queen Mattress $609 $499
5" Foam $79 $59
ANG L Sofa Grey& Brown $650 $399
4 Door Wardrobe $899 $599
2 Door Wardrobe With Glass Mirror $449 $349
2 Door Wardrobe $309 $249
Sami Madam
Price Starting from $149
We Can Make Special Order
CALL US TODAY
416-293-9204
3500 McNicoll Ave, Unit 5
Scarborough, ON M1V 5C7
EASY FURNITURE
WHOLESALE PRICE
REM L Sofa $609 $499
SAI L Sectional (with ottoman) $1299 $899
JANE Sectional (Bk-WH-RD) $1699 $1299
UG RED Sectional $1199 $899
MOREN Sectional Sofa $1249 $899
GRASSY 3 pcs Sofa $1199 $899
Easy Air Leather Corner Sofa $2499 $1999
Sky Power 3 pcs Recliner Sofa $2999 $2499
EF QUEEN Bedroom Only $909 $799
Single Bed $199 $149
5 pcs Dining Table $709 $499
6 pcs Bedroom $899 $599
5pcs Dining Table $709 $499
7 pcs Dining Table $709 $549
Coffee Table $149 $99
Bar Stool $99 $59
STARTING FROM $59
ORDER TODAY 416-293-9204
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7

# 'தியாய தீபம்' திலீபனின் நினைவுநாள் ஊர்தி பவனி மீது சிங்கள மக்களால் திருகோணமலையில் தாக்குதல்

இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படைகள் நிலைகொண்டிருந்த காலத்தில், அந்த படைகளுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கும் இடையே தொடர்ச்சியாக மோதல்கள் இருந்து வந்ததும், இந்தியப் படைகள் அத்துமீற்ல்களில் ஈடுபட்டன என்ற குற்றச்சாட்டு இன்றளவு உள்ளது. அதன் காரணமாகவே அவர்களுக்கும் புலிகளுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டு கடும் மோதல்களுக்கு வழிவகுத்தன என்பது வரலாறு.

தனது ஐந்து அம்ச கோரிக்கைகள் நிறைவேற்றபடாததால், அறவழியில் உண்ணாவிரதம் தொடங்கி, 12 நாட்களுக்கு பிறகு அவர் தாய்மண்ணிற்க்காக தனது உயிரை தியாகம் செய்தார். இதையடுத்து அவர் தமிழ் மக்களால் மிகுந்த அன்பு மற்றும் மரியாதையுடன் "தியாக தீபம்" என்று அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு ஆண்டும் அவரை நினைவுகூர்ந்து உளப்பூர்வமாக அஞ்சலி செலுத்துகின்றனர்.

அவ்வகையில் இந்த ஆண்டும், அவர்கள் அஞ்சலி செலுத்த தொடங்கினர். அவரது நினைவி போற்றும் வகையில் கிழக்கே பொத்துவில்லில் தொடங்கி யாழ்ப்பாணம் நல்லூர் வரை வாகன் பவனி ஒன்றை தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது. அந்த வாகனம் திருகோணமலை மாவட்டம் கப்பற்துறையருகே சென்றுகொண்டிருந்த போது சிங்கள கும்பல் ஒன்று அந்த வாகனம் மற்றும் அதனுடன் பயணித்துக்கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது மோசமான தாக்குதலை நடத்தியது. இந்த சம்பவம் தொடர்பான காணொளி சமூக ஊடகங்களில் தீயாகப்பரவியுள்ளன.

அங்கு பொலிசார் பாதுகாப்பு கடமையில் இருந்த போதும், அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரையும், அந்த வாகனப் பவனி மீதான தாக்குதலையும் தடுக்கவோ அல்லது காப்பாற்றவோ செய்யவில்லை. அவர்கள் மௌனமாக நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருந்ததும் காணொளியில் காணப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் என பல்துறையினர் கண்டித்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இந்த தாக்குதலை வன்மையாக கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளது:

---------------------------------------

தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய நினைவேந்தல் ஊர்திமீது, திருகோணமலை கப்பற்துறையருகே சிங்களக் காடையர்கள் மேற்கொண்டுள்ள மிலேச்சத்தனமான தாக்குதல், இந்தநாட்டில் இனவாதத்தீ நீறுபூத்த நெருப்பாகவே இன்னமும் கனன்றெரிகிறது என்பதை இன்னுமொருமுறை நிரூபணம் செய்திருக்கிறது.

இருநாட்டு அரசுகளின் கவனத்தையும், ஈழத்தமிழர்களுக்கான அடிப்படை நியாயத்தையும் கோரி 36 ஆண்டுகளின் முன்னர் அகிம்சைப் போராட்டம் நடாத்திய, திலீபன் என்கிற தியாகியின் உருவப்படத்துக்கும், அதைத்தாங்கிய ஊர்திக்கும், அவ்வூர்தியோடு இணைந்து பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கும் இந்த நிலை என்றால், எந்தவித நியாயப்பாடுகளுமற்று இத்தனை ஆவேசமாய் இனவாதத்தைக் கக்கும் சிங்களவர்களோடு, இந்த நாட்டில் தமிழர்கள் இணைந்து வாழ்வது எத்தனை தூரம் சாத்தியமானது என்பது பற்றி, இனிமேலேனும் சர்வதேச சமூகம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஜெனீவா அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமநேரத்தில், தமிழர்களையும், அவர்களது போரியல் நியாயத்தையும், இனத்துக்காக நிகழ்த்தப்பட்ட தியாகத்தையும் காலில் போட்டு மிதித்து, தங்களது அடக்குமுறை மனோபாவத்தை சிங்கக்கொடிகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ள சிங்களக் காடையர்களது செயல் கடும் கண்டனத்துக்குரியது. தமிழர்களது உணர்வுநிலைகள் குறித்தும், அவர்களது சுயாதீன உரித்துகள் குறித்தும் எப்போதும் கள்ளமௌனம் காக்கும் ஆட்சி அதிகாரபீடங்கள், இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என நாம் துளியும் எதிர்பார்க்கவில்லை.

இருந்தபோதும், ஒரு சுதேசிய இனத்தின் அடிப்படை உணர்வுநிலைகளை வலிந்து சீண்டி, இரு இனங்களுக்குமிடையிலான முரண்நிலைகளை மீண்டும் மீண்டும் கொதிநிலைக்குத் தள்ளி அரசியல் லாபம் ஈட்டும் சக்திகள் இனங்காணப்பட வேண்டும். ஈழத்தமிழர்களது தன்னாட்சிக் கோரிக்கை நியாயபூர்வமானது என்ற செய்தியை சர்வதேச சமூகத்தின் செவிகளில் அறைகூவல் செய்வதற்கு இந்தச் சம்பவம் ஓர் சாட்சியமாய் அமைந்திருக்கிறது. இதன் விளைவென்பது, எமது மக்களிடத்தே இனம் குறித்த ஓர்மத்தை தணியாது தகிக்கச் செய்துகொண்டே இருக்கும் என்பதை சிங்களவர்களும் உணரும் காலமொன்று உருவாகியே தீரும்.

சிவஞானம் சிறீதரன்.
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

வ.நிதர்சன்
நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் ஊடக இணைப்பாளர்
0778609586

# கல்வியிலும் கலைப் பண்பாட்டுத்துறையில் தான் அடைந்த உயரத்தை தனது மாணவர்களும் அடைய வேண்டும் என்று விரும்புவரே கனடா வாழ் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள்

## அன்னாரது வாழ்நாள் சாதனைகளைப் பாராட்டும் வகையில் எடுக்கப்பட்ட விழாவில் பொன்னையா விவேகானந்தன் புகழாரம்



"இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் பிறந்து கல்வி கற்று பேராதனைப் பல்கலைகழகத்தில் புகுந்து அன்று தொடக்கம் கல்வியிலும் கலைப் பண்பாட்டுத்துறையில் தான் அடைந்த உயரத்தை தனது மாணவர்களும் அடைய வேண்டும் என்று விரும்புவரே கனடா வாழ் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள். இன்று அவருக்காக எடுக்கப்படும் விழாவில் நானும் ஒருவனாக பாராட்டுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்"

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறையின் தலைவரும் தற்போது கனடா அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்தின் தமிழ்த் துறையின் தலைவராக விளங்குபவராக உள்ளவருமான பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் வாழ்நாள் சாதனைகளைப் பாராட்டும் வகையில் எடுக்கப்பட்ட விழாவில் உரையாற்றிய கனடா வாழ் கல்வியாளரும் பேச்சாளருமான பொன்னையா விவேகானந்தன் புகழாரம் சூட்டினார்.

கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்றத்தின் கலா மண்டபத்தில் நடைபெற்ற இந்த பாராட்டு விழாவை கனடாவில் இயங்கிவரும் விபுலானந்தர் கலை மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

பல்வேறு துறைசார்ந்த பெரியோர்கள் கல்வியாளர்கள் மற்றும் கலைஞர்கள் ஆகியோர் உரையாற்றினார்கள்.

கவிஞர் குமரகுரு கணபதிப்பிள்ளை விழாவை தொகுத்து வழங்கினார்.

விழாவின் ஆரம்பத்தில் பேராசிரியர் இ. பாலசுந்தரம் மற்றும் அவரது பாரியார் மற்றும் குடும்பத்தினர் அனைவரும் மண்டப வாசலில் வரவேற்கப்பட்டு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து மண்டபத்தில் கூடியிருந்த அனைவரும் எழுந்து நின்று கல்வித்துறை சார்ந்த தம்பதிக்கு மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து பல பேச்சாளர்கள் வாழ்த்துரைகளை வழங்கினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்"பெற்றன. விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக பல்வேறு கல்வி மற்றும் கலை இலக்கியம் சார்ந்த அமைப்புக்கள் சார்பில் பாராட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

அண்ணாமலை பல்கலைக் கழக கனடா வளாக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் சார்பிலும். கனடா கவிஞர்கள் கழகத்தின் சார்பிலும். கனடா விபுலாந்தன் கலை மன்றத்தின் சார்பிலும் கௌரங்கள் செய்யப்பெற்றன.

இறுதியில் பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் பதிலுரை ஆற்றினார் அவரது உரை மிகுந்த உருக்கத்துடன் இடம்பெற்றது. கல்வி மற்றும் கலைப் பண்பாட்டுத்துறையில் தான் தொடர்ச்சியாக ஈடுபாட்டோது இயங்கிவருவதற்கு தனது துணைவியாரும் மற்றும் குடும்பத்தினரும் மானசீகமாக ஆதரவை வழங்கிவருவதாகவும் தொடர்ந்து இலங்கையிலும் கனடாவிலும் மற்றும் ஏனைய நாடுகள் பலவற்றிலும் செயற்பட்டு வரும் கல்விச் சமூகம் தனக்கு வழங்கிவரும் ஆதரவிற்கு தான் நன்றி தேரிவிப்பதாகவும் கூறினார்.

# கனடாவில் "விலா கருணா" மூத்தோர் இல்லம் நடத்திய "சந்தியாராகம்" சுப்பர் சிங்கர் போட்டி நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

## மண்டபம் நிறைந்திருக்க. இசையும் கொண்டாட்டமுமாக இடம்பெற்ற மூத்தோருக்கான முத்தான விழா



கனடாவில் நீண்ட கால இயங்கிவருபவதுடன் தமிழ் பேசும் மூத்தவர்களின் உடல் நலம் குன்றிய நாட்களில் அவர்களைப் பராமரிக்கும் அற்புதமாக மனித நேயப் பணியை மேற்கொண்டு வரும் திருமதி இந்திராணியின் "விலா கருணா" மூத்தோர் இல்லம் நடத்திய "சந்தியாராகம்" சுப்பர் சிங்கர் போட்டி நிகழ்ச்சி கடந்த 16ம் திகதி சனிக்கிழமை ஒன்றாரியோ இசைக் கலா மன்றத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அன்றைய நாளில் மண்டபம் நிறைந்த இரசிகர்கள் கூட்டமும் வர்த்தக மற்றும் கலைத்துறை சார்ந்தவர்களும் கூடியிருக்க. இசையும் கொண்டாட்டமுமாக இடம்பெற்ற மூத்தோருக்கான முத்தான விழா அனைவரையும் மகிழ்வித்தது என்றே கூற வேண்டும்.

"சந்தியாராகம்" 2023 போட்டி நிகழ்ச்சியில்இறுதிப் போட்டிக்கு ஒரு பெண் போட்டியாளர் உட்பட ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்கள் அனைவரும் மேடையில் பாடிய போது அவர்களின் பாடல்களுக்கு "விண்ட் " இசைக்குழுவினர் பின்னணி இசை வழங்கினார்கள்.

கனடாவில் இசைத்துறை அனுபவமும் புலமையும் நிறைந்தவர்கள் நடுவர்களாக பணியாற்றினார்கள்.

அன்றைய சந்தியாராகம் போட்டியின் இறுதியில் முதல் மூன்று இடங்களைத் தட்டிக் கொண்டவர்களின் பெயர்கள் மேடையில் அறிவிக்கப்பெற்றபோது சபையினர் உற்சாகமாக கரகோசம் செய்து பாராட்டினார்கள்.

இவ்வருடத்திற்கான சந்தியாராகம் மூத்தோருக்கான இசைப் போட்டியில் முதலாவது இடத்திற்கான சிறப்புப் பரிசை பாடகர் சிவா தர்மலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார். இரண்டாவது இடத்தை திரு நவரட்ணம் அவர்களும் மூன்றாவது இடத்தை ஆனந்த் குமாரசாமி அவர்களும் பெற்று பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.

www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

UTHAYAN CULTURAL SHOW - 2023
and 27th Year Celebration

tasty தமிழா Presents

# உதயன் பல்சுவைக் கலைவிழாவும் விருது வழங்கலும்-2023

**DATE:** 15-10-2023 Sunday
**TIME:** 6:00 PM

**VENUE:**
Thamil Isai Kalaamanram of Ontario
1120 Tapscott Road #3
Scarborough, ON M1X 1E8

கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான
AAROSAI "WHERE MUSIC BEGINS..."
வழங்கும் மெல்லிசை



இவ்வருடத்தின் சிறப்புப் பாடகராக "பொன்னியின் செல்வன்" புகழ் வி. எம். மகாலிங்கம் அவர்களும் கனடியப் பாடக பாடகிகளும் மேடையை அலங்கரிப்பார்கள்



POWERED BY: VIBRANT HOSPITALITY GROUP | Latika Gold House | ARABI FINDER

TICKETS VIP $15

For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512



YOU ARE INVITED TO
Grand
OPENING
Ceremony of
Latika Gold House

20TH OCTOBER - 2023

Unit 37-35 Karachi Drive, (New Delhi Plaza) Markham, ON
(Markham Costco விற்கு அருகாமையில்)

Majestic City யில் அமைந்துள்ள Latika Gold House இன் Anniversary ஐ முன்னிட்டு $5000 க்கு மேல் தங்கநகை வாங்குபவர்கள் 21 & 22 ம் திகதி நடக்கவிருக்கும் இசை வெள்ளம் நிகழ்ச்சிக்கான VIP Ticket ஒன்றினை பெற்றுக் கொள்ளலாம்.

www.latikagoldhouse.ca Tel:- 416 423 7555 Cell:- 647 996 5922

# Canadian Journalist and Educator Joyce Grant Awarded a Global Youth & News Media Prize



## கனடிய பத்திரிகையாளரும் கல்வியாளருமான ஜாய்ஸ் கிராண்ட், குழந்தைகள் மற்றும் இளம் வயதினருக்கான சேவைக்காக உலகளாவிய ஊடகப் பரிசைப் பெற்றுள்ளார்



GLOBAL YOUTH & NEWS MEDIA PRIZE
FOR EXCELLENCE IN SERVING, SUPPORTING, ATTRACTING AND LEARNING FROM YOUNG AUDIENCES.

கனடாவைச் சேர்ந்த பத்திரிகையாளரும் கல்வியாளருமான ஜாய்ஸ் கிராண்ட், குழந்தைகள் மற்றும் இளம் வயதினருக்குச் சேவை செய்யும் அவரது புதிய செய்திகள் மற்றும் ஊடக கல்வியறிவுப் பணிக்காக உலகளாவிய இளைஞர் மற்றும் செய்தி ஊடகப் பரிசைப் பெற்றுள்ளார்.

"ஜாய்ஸ் கிராண்ட் ஒரு சக்தியாக இருக்கிறார், மேலும் பல முனைகளில் அவர் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்" என்று மேற்படி விருதை வழங்கிய அமைப்பின் நிர்வாக இயக்குனர் டாக்டர் அராலின் மெக்மேன் கூறினார். "உண்மையான மற்றும் கடுமையான பத்திரிகைத்துறை என்றால் என்ன என்பதை அவர் குழந்தைகளுக்கு எளிய முறையில் விளக்கமளித்துள்ளார், மேலும் பதின்வயதினர் அதையே கற்றுக்கொள்வதற்கு உறுதியான வழிகாட்டுதலையும் வழங்குகிறார், தங்கள் ஊடகப் பயணத்தில் பத்திரிகையாளர்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகள் பற்றிய பாடங்களையும் இவர் பதின்ம வயதினருக்கு கற்பித்துள்ளார்."

கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தில் உள்ள ஹாமில்ரன் நகரத்தில் வசிக்கும் கிராண்ட், TeachingKidsNews.com என்னும் தனது சொந்த ஊடக நிறுவனத்தை 2010 இல் ஆரம்பித்தார். அத்துடன் ரொறன்ரோ ஸ்டாருக்கான ஊடக கல்வியறிவு வளங்களையும் உருவாக்கியவரும் இவரே இளைஞர்களுக்கான விளக்கப்படமான புனைகதை அல்லாத புத்தகம் உட்பட ஆறு புத்தகங்களை எழுதியவர். நீங்கள் நம்புகிறீர்கள்: போலிச் செய்திகளைக் கண்டறிவது மற்றும் உண்மைகளைக் கண்டறிவது எப்படி (2022, கேத்லீன் மார்கோட்டால் விளக்கப்பட்டது மற்றும் கிட்ஸ் கேன் பிரஸ்ஸால் வெளியிடப்பட்டது), மற்றும் ஹம்பர் கல்லூரி மற்றும் ஷெரிடன் கல்லூரி ஆகியவற்றில் ஒரு வருகை தரும் பேராசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்.

மேற்படி விருது தனக்குக் கிடைத்தது பற்றி ஜாய்ஸ் கிராண்ட் அவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"நான் நிறைய பாடசாலைகளுக்குச் செல்கிறேன், பத்திரிகையாளர்களாக வர விரும்பும் குழந்தைகளை நான் எப்போதும் கண்டுபிடிப்பேன்" அவர்களுடன் பேசுவதும் அவர்களை ஊக்குவிப்பதும் உற்சாகமாக இருக்கிறது. ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு இதழியல் எவ்வளவு இன்றியமையாதது என்பதைப் பற்றி அவர்களிடம் பேசி வருகிறேன். அந்தத் தலைவர்கள் எதற்காக நிற்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியாவிட்டால் நீங்கள் எப்படி தலைவர்களைத் தேர்ந்தெடுத்து வாக்களிக்க முடியும்? என்றும் நான் அவர்களுக்கு கற்பித்துள்ளேன்.

"பத்திரிகையாளர்கள் என்ன செய்கிறார்கள் என்பது பற்றிய அனைத்து தவறான தகவல்களாலும் தவறான எண்ணங்களாலும், வேலை முன்னெப்போதையும் விட கடினமாக உள்ளது. பத்திரிக்கையாளர்களுக்கு துல்லியம் எவ்வளவு முக்கியம் மற்றும் வேலை எவ்வளவு முக்கியம் என்பதைப் புரிந்துகொள்ள குழந்தைகளுக்கு உதவுவதிலேயே எனது கவனம் உள்ளது. இளம் பத்திரிக்கையாளர்களின் அடுத்த கவனிப்பு பற்றியும், உண்மைகளைப் பற்றி அக்கறை கொண்டவர்கள் மற்றும் ஒரு பத்திரிகையாளரைப் போல, அவர்கள் இணைய தளங்களில் பார்ப்பதையும் படிப்பதையும் பற்றி விமர்சன ரீதியாக எப்படிச் சிந்திக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ள விரும்பும் ஒவ்வொருவரையும் பற்றியும் நான் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மேலும் ஆறு பரிசு பெற்ற வெற்றியாளர்களுடன்-கல்வியாளர்கள், செய்தி ஊடக நிறுவனங்கள் மற்றும் கல்வி தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஜாய்ஸ் கிராண்ட் அவர்களும் ஒருவரான மிளிர்கின்றார்.

2023 ஆம் ஆண்டிற்கான "அடுத்த தலைமுறைக்கு அதிகாரம் அளிப்பது" என்ற கருப்பொருளைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் ஜனநாயகத்திற்கான சர்வதேச தினத்தை ஒட்டி இந்த விருதுகள் சில நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டன. இந்த ஆண்டு செய்தி/ஊடக எழுத்தறிவு பிரிவு ஜனநாயகத்தை ஆதரிப்பதற்கான இரண்டு முக்கிய கூறுகளை மையமாகக் கொண்டது. உலகளவில் ஊடக கல்வியறிவின் பெரும்பகுதியைக் காணவில்லை: பத்திரிகையின் முக்கிய பங்கு மற்றும் அந்த வேலையைச் செய்யும் பலருக்கு அச்சுறுத்தல்கள் தொடர்ந்து வருகின்றன.

2018 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் இலாப நோக்கற்ற நிறுவனமாக நிறுவப்பட்ட குளோபல் யூத் ரூ நியூஸ் மீடியா, இளைஞர்களுடன் செய்தி ஊடக ஈடுபாட்டில் சிறந்த நடைமுறையை அங்கீகரிப்பதிலும் பரப்புவதிலும் கவனம் செலுத்துகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கடல் தாண்டி கனடாவில் பார்த்து வியந்த எம் தமிழ் மண்ணின் படைப்பு "பாலை வனம்" திரைப்படம் கற்றுத் தந்த பாடம்

## "பெரிய" நடிகர்களின் திரைப்படங்களை சில மாதங்களுக்கு "தள்ளி" வைத்து விட்டு நம்மவர் வெண்திரைப்படங்களை வெற்றியடைச் செய்வோம். நமது கலைஞர்களுக்கும் நல்லாதரவு வழங்குவோம்




ஞாயிற்றுக்கிழமை 17ம் திகதி கனடாவின் ஸ்காபுறோ நகரின் வுட்சைட் சினிமாவில் நம் தமிழ் மண்ணின் தயாரிப்பாய் வெளிவந்துள்ள "பாலை வனம்" திரைப்படத்தை கண்டு களிக்கும்படி கிடைத்த அழைப்பை ஏற்று சரியாக திரைப்படம் ஆரம்பமாகிய அந்த நிமிடத்தில் சென்று ஆசனத்தில் அமர்ந்தோம்.

திரைப்படத்தின் பெயரே நம் மண்ணின் அவலத்தை எடுத்துச் சொல்லி ஒரு ஆர்வத்தைத் தூண்டியிருந்தது.

நம் தாயக மண்ணில் ஒரு கடலோரக் கிராமத்தின் பின்னணியில் தயாரிக்கப்பெற்ற முழு நீள திரைப்படமாக வெளி வந்துள்ள "பாலை நிலம்" திரைப்படத்தின் ஆரம்பமே உற்சாகத்தையும் பரவசத்தையும் தந்தது. எழுத்தோட்டத்தின் போது எழுந்து நின்று பாராட்ட வேண்டும் போல இருந்ததற்கு காரணம் அதற்கு வழங்கப்பட்டிருந்த இசை தான் என்பதை உணரக் கூடியதாக இருந்தது.

கதை ஆரம்பமானது. நம் தாயக உறவுகளின் மனங்களைப் போன்று காய்ந்து வரண்டு போயிருந்த நிலமும் அந்த நிலம் சார்ந்த மக்களுமாக கதை நகர்ந்து கொண்டிருந்தது.

திரைப்படத்தின் இயக்குனரும் பிற தொழில்நுட்பக் கலைஞர்களும் எவ்வித அவசரமோ அன்றி ஆர்ப்பாட்டமோ இன்றி திரைப்படத்தை தயாரிப்பதில் ஈடுபாடு கொண்டு உழைத்திருக்கின்றார்கள் என்பதை ஒவ்வொரு காட்சியும் மாறும் போது நன்கு புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

நகைச்சுவை பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்ட காட்சிகள் ரசிகர்களை உற்சாகப் படுத்துவதற்காக திரைப்படத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலும் படத்தின் கரு அதனை ஒரு திரைப்படமாக நகர்த்திச் சென்றதன்மை ஆகியன பாராட்டும் படியாக வலுவாய் அமைந்திருந்தன.

"பாலை நிலம் திரைபடத்தின் கதை சோகத்தின் சுமைகளோடு நகர்ந்து செல்கின்றது, போர் சூழலில் தனது தாயை காப்பாற்ற தமிழ்நாட்டுக்கு புலம்பெயர்ந்த கதையின் நாயகன் அங்கிருந்து தாயகம் நோக்கி தனது தாயிற்கு இறுதி கடமை செய்ய மீண்டும் வருகின்றார்.







அங்கு தனது தாய் மாமாவோடு இணைந்து முன்னாள் காதலியான கதாநாயகியைத் தேடுகின்றார். அந்த தேடலின் போது கடந்த கால காதல் நினைவுகள் மிகவும் கச்சிதமாகவும் யதார்த்தமாகவும் திரையில் காட்டிய இயக்குனரையும் இசையமைப்பாளரையும் தொழில்நுட்பக் கலைஞர்களையும் பாராட்டவேண்டும்.

திரைப்படத்தில் முற்று முழுதாக எமது தாய் மண்ணின் வெறுமையும் அவலமும் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக காலைக் கடன் கழிக்கச் செல்வது கிணற்றில் வாளிகொண்டு தண்ணீர் அள்ளி குளிப்பது கடற்தொழிலின் போது இயல்பாக பகிரப்படும் நகைச்சுவை உரையாடல் எம் மண்ணின் "உற்சாகப் பானமாக விளங்கும் "கள்"ளை வேறு பட்ட மக்களோடு சேர்ந்து அருந்துவது போன்ற காட்சிகளை புலம் பெயர்ந்த எம் மக்களுக்கு ஞாபகமூட்டுவதை உணரக் கூடியதாக இருந்தது.

பொதுவாகக் கூறுவதானால் திரைப்படத்தின் காட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பெற்றபோது மிகுந்த அவதானத்தோடும் கவனிப்போடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

படத்தில் கதாநாயகன்-கதாநாயகி ஆகியோரின் காதல் செய்யும் காட்சிகள் எம் மண்ணில் யதார்த்த நிலைக்கு ஏற்ப அசிங்கங்கள் நிறைந்ததாக இல்லாமல் காதலின் ஆழம் மற்றும் அழகு ஆகியவற்றை அடக்கியதாக இருந்தமை இயக்குனரின் மிகுந்த கூர்மையான திரைப்பட ஆர்வத்தைக் காட்டி நின்றன.

கடலோரக் காட்சிகள் மற்றும் பசுமை நிறைந்த வயல் காட்சிகளை திரையில் காட்டிய போது எமது தாய் ம ண்ணின் கடல்வளம் நில வளம் ஆகியவற்றை துறந்து நாம் மேற்குலக நாடுகளில் எம் உழைப்பை வீணாக்குகின்றோமே என்ற ஆதங்கம் இயல்பாகவே எம்மிடத்தில் தோன்றியது.

திரைப்படத்தின் உரையாடல் எம் மண்ணின் மொழி சார்ந்து நின்ற விதம் திரைப்படத்தின் எழுச்சியைக் காட்டியது.

திரைப்படத்தில் பல இடங்களில் எமது தாய் மண்ணினதும் மக்களினதும் வாழ்வியல் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள், பண்பாடுகள் எவையும் நிராகரிக்கப்படாமல் திரைப்படம் எடுக்கப்பட்டிருந்தது "பாலை நிலத்தின் தரத்தை அதிகரித்துள்ளது.

திரைப்படத்தின் பாடல்கள் அனைத்தும் உற்சாகத்தையும் உணர்வையுத் தருபவையாக அமையப்பெற்றுள்ளன. அத்துடன் . பாடல்கள் காட்சிகள் இடைச் செருகல்கள் போன்று இல்லாமல் அவசியமானவையாகவே தோன்றின. அவை திரைப்படத்துடன் இணைந்து பயணித்தையே அனுபவிக்கக்கூடியதாக இருந்தது.

இந்த திரைப்படத்தில் இயக்குநராக விளங்கும் ஜூட் சுகி அவர்களின் நேர்த்தியும் அர்ப்பணிப்பும் கொண்ட கடமை உணர்வு நன்கு பளிச்சிடுகின்றது.

இவர் எமது நண்பர் டென்மார்க் சண் அவர்களின் திரைப்படத்தில் ஒளிப்பதிவாளராக பணியாற்றியவர் என்பதை அறியும் போது இன்னும் அவரைப் பாராட்ட வேண்டும் போல உள்ளது.

திரைப்படத்தின் ஒளித்தொகுப்பும் சிறப்பாக உள்ளது. இசையமைத்து அதேவேளை ஒளித்தொகுப்பையும் நேர்த்தியாக செய்திருக்கிறார் பிரசாந்த் அவர்களையும் நாம் பாராட்ட வேண்டும்.

திரைப்படத்தின் மாமாவாக பாத்திரமேற்று நடித்த மகேந்திர சிங்கத்தின் அனுபவ முதிர்ச்சி நன்கு புலனாகின்றது. நாயகன், நாயகி மற்றும் நாயகியின் தோழி ஆகியோரின் நடிப்பையும் இன்னும் ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பு ரசிகர்களாகிய மக்களிடம் தான் உள்ளது. அதுவும் புலம் பெயர் மக்களாகிய நாம் எமது தாய் ம்ணணில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் பொருளாதார ரீதியாக வெற்றியடைவதற்கு நாலா பக்கங்களிலிருந்தும் உதவ வேண்டும்.

அதற்காக நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது இது தான். ஆம்! ""பெரிய" நடிகர்களின் திரைப்படங்களை சில மாதங்களுக்கு "தள்ளி" வைத்து விட்டு நம்மவர் வெண்திரைப்படங்களை வெற்றியடைச் செய்வோம். நமது கலைஞர்களுக்கும் நல்லாதரவு வழங்குவோம்"" என்பதை எமது கடமையாக ஏற்று செயற்பட வேண்டும்.

சில சில குறைகளைத் தவிர்த்துப் நாம் "பாலை நிலம்" திரைப்படத்தை நோக்கினால். இளம் வயதைக் கடந்த புலம்பெயர் மக்களான எமக்கு இந்த படம் நிச்சயம் பழைய நினைவுகளைத் மீட்டுத் தருவதாக அமைந்தது என்றும் தாயக உணர்வைத் தட்டி எழுப்பும் ஒரு சாதனமாக விளங்கும் என நாம் உற்சாகப்படுத்துவோம்.

கனடாவில் இந்த திரைப்படத்தை திரையிட முயற்சி எடுத்து அதில் வெற்றியீட்டிய கனடா மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்கள் சங்கத்திற்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகுக!

**- கனடாவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சிங்களத்தின் அதியுச்ச மிலேச்சத்தனத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் – ஜனநாயகப் போராளிகள் கட்சி கண்டனம்



தியாக தீபம் திலிபன் அவர்களின் நினைவேந்தலை அனுஸ்டிக்கும் முகமாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னனியினரால் மேற்கொள்ளப்படுகின்ற நினைவு ஊர்தி பேரணியின் போது திருகோணமலையில் வைத்து இரு இடங்களில் சிங்களக் காடையர்களால் ஊர்தியின் மீதும், அக்கட்சியின் செயலாளர் பாரளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்டோர் மீதும் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை ஜனநாயகப் போராளிகள் கட்சியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

அக் கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இந்த நாட்டினை பின்நோக்கிக் கொண்டு செல்லும் வகையிலேயே தாக்குதலை மேற்கொண்டவர்களின் செயற்பாடும், அவர்களை பின் இருந்து இயக்குபவர்களின் எண்ணப்பாடுமாக இருக்கின்றது.

முப்பது வருட யுத்தம் இந்த நாட்டில் ஏற்படுத்திய அழிவுகளை எண்ணி இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஒன்றே நாட்டில் எதிர்கால சுபீட்சத்திற்கு ஏற்ற வழி என்று பலரும் ஜனநாயக வழியில் செல்லுகையில் இடம்பெற்றிருக்கும் தாக்குதல் மீண்டும் இனங்களுக்கிடையிலான முறுகலை வலுப்படுத்தும் விதமாக அமைந்திருக்கின்றது.

இவ்வாறான நிலைமைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய இராணுவம், பொலிஸார் முன்னிலையில் இத்தாக்குதல் இடம்பெற்றமையானது. இந்த நாட்டின் பாதுகாப்புத் தரப்பு தமிழ் மக்களையும், தமிழ் பிரதிநிதிகளையும் எந்த இடத்தில் வைத்து நோக்குகின்றது என்பதை திட்டவட்டமாகப் புலப்படுத்துகின்றது.

எந்த இனமாக இருந்தாலும் தன் இனத்திற்காக போராடியவர்கள் அவர்களுக்கு உயர்ந்தவர்களே. அவர்களுக்கு அந்த இனத்தினால் கொடுக்கப்படும் மரியாதையை மற்ற இனத்தவர்கள் வஞ்சித்தல் என்பது ஜனநாயகப் பண்பு அல்ல. யுத்த வீரன் என்பவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை துட்டகைமுனுவின் வரலாற்றில் இருந்து சிங்களவர்கள் அறியாமல் இருப்பது, சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு இவ்வாறான தாக்குதல்களை நடத்துபவர்கள் அறியாமல் இருப்பது அவர்களின் சிறுமைத் தனத்தையே காட்டுகின்றது.

கிழக்கில் தமிழ் இனம் எந்த நிலையில் இருக்கின்றதென்பதை இந்த நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் காட்டியிருக்கின்றது இந்த சம்பவம். இவற்றுக்கெல்லாம் நமக்குள் இருக்கும் ஒற்றுமையின்மையே காரணம். இவ்வாறான நினைவேந்தல்கள் எல்லாம் கட்சிசார்ந்து செய்யப்படுவது அல்ல. இவை தமிழ் மக்களால் உன்னதமாக அனுஸ்டிக்கப்படுபவை.

இவ்வாறான நினைவேந்தல்களை அனைவரும் ஒருமித்து செயற்படுத்தும் போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுமா? இடம்பெறத்தான் விட்டுவிடுவோமா?

அனைவரும் ஒன்றிணைந்து எத்தனையோ போராட்டங்கள் கிழக்கில் இருந்து வடக்கிற்கு சென்றுள்ளன. இதன்போதெல்லாம் இவ்வாறான அசம்பாவிதங்கள் இடம்பெறவில்லையே ஏன்? நாம் ஒற்றுமைப்பட்டு நின்றமையால் எம்மைச் சீண்ட சிங்களம் பயப்பட்டது. தனித்து தனித்து கட்சி இலாபம் கருதி இவ்வாறான நிகழ்வுகளைச் செய்யும் போது இவ்வாறானவர்களும் இது வாய்ப்பாக இருக்கின்றது.

நம் ஒற்றுமைக்கு விட்டிருக்கும் சவாலாகும். இதிலிருந்து நாம் படிப்பினையைக் கற்றுக் கொள்ளாமல் இருந்தோமானால் இன்று கிழக்கில் இடம்பெற்றது நாளை இன்னொருவருக்கு வடக்கில் இடம்பெற்றாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

எனவே நமக்குள் ஒற்றுமை எப்போது அவசியம், தேர்தல் காலத்தில் மாத்திரம் தங்கள் தங்கள் கட்சி செயற்பாடுகளை முன்னெடுத்து தமிழ் மக்கள் சார்ந்த வேலைத் திட்டங்கள், இவ்வாறான நினைவேந்தல்கள் ஆகியவற்றை நாம் ஒற்றுமையாக ஒருமித்துச் செய்ய வேண்டும். இதன் போதுதான் இவ்வாறான சிங்களக் காடையர்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

எனவே தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு கசப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. பழையனவற்றை ஞாபகப் படுத்துகின்றது. இந்த நிலைமைகள் இனிமேலும் இடம்பெறாமல் இருக்க வேண்டுமானால் தாக்குதலை மேற்கொண்ட காடையர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால் அவை உரிய முறையில் இடம்பெறுமா என்பது கேள்விக் குறியான விடயமே. ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால் தமிழ் மக்களின் நிலை என்ன என்பதை இந்தியா உட்பட சர்வதேசம் புரிந்துகொள்ளும் என நம்புகின்றோம். எனவே தமிழ் மக்களின் இனப்பிரச்சனை தொடர்பில் சர்வதேசத்தினூடாக விரைவில் தீர்வினைப் பெற்றுத்தர முன் வரவேண்டும் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

# அகிம்சை வழியில் போராடி உயிர்த்தியாகம் செய்த ஒரு தியாகிக்கு அதே அகிம்சை வழியில், ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அஞ்சலி செலுத்த முடியாத நிலை

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தாக்கப்பட்டமைக்கு வினோ எம்.பி கண்டனம்

- மன்னார் நிருபர் (18-09-2023)



அகிம்சை வழியில் போராடி உயிர்த்தியாகம் செய்த ஒரு தியாகிக்கு அதே அகிம்சை வழியில், ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினரை அஞ்சலி செலுத்த மறுப்பதும், நடுவீதியல் தாக்க முற்பட்டு கொலை செய்ய எத்தனிப்பதும் இந்த நாடு இன்னமும் இன, மத சிந்தனைக்குள்ளிருந்து மீளப்போவதில்லை என்பதை உணர்த்துகின்றது.

கடந்த காலங்களைப்போல் ஆட்சியாளர்களினதும், அரச இயந்திரங்களின் நேரடியானதும், மறை முகமானதுமான கரங்கள் துணை நிற்பதும், வேடிக்கை பார்ப்பதும் நாம் அவதானிக்கின்ற விடயங்களாகும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

கயேந்திரன் எம்.பி. மீதான தாக்குதலை கண்டித்து அவர் 18-09-2023 அன்று விடுத்துள்ள அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், ஈஸ்டர் குண்டு வெடிப்பு எப்படி அழகாக திட்டமிட்டு, இனவாத திரியை எரிய வைத்து, பரவச் செய்து உயிர்களைப் பலியெடுத்து தேர்தல் வெற்றிக்கு பயன்படுத்திய ஒரு கூட்டம் இந்த நாட்டில் வாழ்வதை நாம் கண்டோம்.

அதேபோன்று இன்னுமொரு தேர்தலுக்கு, இன்னுமொரு திரியை கொளுத்தி நாடு முழுவதும் இனவாத தீயைப் பரவச் செய்ய இன்னுமொரு கூட்டம் தயாராகின்றது.

அதன் ஒரு அங்கமே கயேந்திரன் பாராளுமன்ற உறுப்பினர் மீதான தாக்குதலாகும்.

கேவலம் ஒரு தேர்தல் வெற்றிக்காக உயிர்களைப் பலியெடுக்கும் ஒரு சமூகத்தை சுற்றி வாழ்வதையிட்டு வெட்கப்படுகின்றோம்.

சிங்கள பேரினவாத, பௌத்த மேலாதிக்க மதவாத வெறியர்கள் தமது இலக்கை எட்டும் வரை சீண்டிக் கொண்டே இருக்கப் போகிறார்கள்.

எமது மக்கள் இதுவிடயத்தில் மிகவும் அவதானமாக, விவேகத்துடன் செயற்படவேண்டும்.

அவர்களின் திட்டத்துக்கு பலிக்கடாவாகிவிடக் கூடாது.

திட்டமிட்டு தாக்குதல் மேற்கொண்ட காடையர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

உயர்ந்த பட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் ஆகியோருக்கு நேர்ந்த கதி இப்போதைய ஜனாதிபதி, பிரதமருக்கு ஏற்படக் கூடாது என நாம் கருதுகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# வவுனியா நடைபாதைகளை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்கள்!

வவுனியா நகரசபைக்குட்பட்ட இடங்களில் உள்ள நடைபாதைகளை சிறு வியாபார நிலையங்கள் ஆக்கிரமித்துள்ளமையினால் பாதசாரிகள் பெரும் சிரமத்தினை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா பொது வைத்தியசாலை சந்தியில் இருந்து கொரவப்பத்தான வீதி மற்றும் சந்தை உள்வட்ட வீதி என்பன இவ்வாறு நடைபாதை வியாபாரிகளின் ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் விபத்துக்களை சந்திக்கும் நிலைமைகள் எற்பட்டுள்ளது.

வியாபாரிகள் நடைபாதைகளை ஆக்கிரமித்து தமது வியாபாரத்தினை மேற்கொள்வதனால் பாதசாரிகள் வீதியால் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சன நெருக்கடி நிறைந்த குறித்த பகுதியில் இவ்வாறான நிலைமை காணப்படுவதனால் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதுடன் விபத்துக்களும் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இது தொடர்பில் கடந்த காலங்களில் நகரசபை நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும் அண்மைக்காலமாக நகரசபையும் இவ்விடயத்தில் தமது கண்காணிப்பை செலுத்தாமையினால் தினந்தோறும் இவ்வாறான நடைபாதைகளை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்கள் அதிகாரித்து செல்கின்றது.

எனவே தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையில் சிறவியாபாரிகளும் பாதிக்கப்படாத வகையில் நகரசபை சிறந்த தீர்வை ஏற்படுத்த வேண்டும் வரியிறுப்பாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

# மன்னாரை வந்தடைந்த தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி



- மன்னார் நிருபர் (21-09-2023)

தியாக தீபம் திலீபனின் 36வது ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் "திலீபன் வழியில் வருகிறோம்" என்னும் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனியானது பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்களுக்கு சென்று வரும் நிலையில் 7வது நாளான வியாழக்கிழமை (21) மாலை குறித்த ஊர்திப் பவனி மன்னார் நகரை வந்தடைந்தது.

வியாழக்கிழமை (21) மாலை 5.50 மணி அளவில் மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தை தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி வந்தடைந்தது.

பின்னர் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தியாக தீபம் திலீபனின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இதன் போது மக்கள் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து பள்ளிமுனை, பனங்கட்டுக்கொட்டு, சாந்திபுரம், எழுத்தூர் மற்றும் தாழ்வுபாடு ஆகிய கிராமங்களை நோக்கி மக்களின் அஞ்சலிக்காக தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி அசன்றமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் இன்று காலை கிளிநொச்ச்சி சேவை சந்தை முன்பாக இடம்பெற்றது.

இதன் போது, தற்பொழுது ஜெனிவாவில் நடைபெற்று வரும் இலங்கை தொடர்பான விவாதத்தின் போது இறுதி யுத்தத்தின் போது கையளிக்கப்பட்ட உறவுகள், வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள், பலவந்தமாக பிடிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், அவர்களிற்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலும் ஆராய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மேலும், தற்பொழுது முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கு தொடுவாய் பகுதியில் அகலப்பட்டு வரும் மனித புதை குழியானது காணாமல் ஆக்கப்பட்டவர்களா? எனவும், அந்த புதைகுழியில் உள்ள மனித எச்சங்கள் யாருடையது எனவும் சர்வதேசம் உரிய விசாரணை நடத்தி தீர்வு பெற்றுத்தர வேண்டும் வலியுறுத்தப்பட்டது.



குறித்த போராட்டத்தினை கிளிநொச்சி, தர்மபுரம், அக்கராயான்குளம், கோணாவில், பளை உள்ளிட்ட பல பகுதியிலிருந்தும் பல அமைப்புகள் ஒன்றாக இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

# பட்டா ரக வாகனத்தை வழிமறித்து, அதன் சாரதியை கடுமையாக தாக்கிய குற்றச்சாட்டில் 03 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை, உயரப்புலம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு வீதியில் பயணித்த பட்டா ரக வாகனத்தை மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய கும்பல் வழி மறித்து, சாரதியை சரமாரியாக தாக்கி விட்டு அங்கிருந்து தப்பி சென்று இருந்தது.

சம்பவத்தில் காயமடைந்த சாரதி, சிகிச்சைக்காக யாழ், போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார், தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் மானிப்பாய், கல்வியங்காடு மற்றும் மணியந்தோட்டம் பகுதிகளை சேர்ந்த மூன்று இளைஞர்களை நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.



# இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து பாராட்டுவதாக உலக வங்கியின் பணிப்பாளர் தெரிவிப்பு!

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், இலங்கை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி மேற்கொண்டுள்ள சாதகமான நடவடிக்கைகள் பாராட்டப்படுவதாகவும் இலங்கை, மாலைதீவு மற்றும் நேபாளத்திற்கான உலக வங்கியின் பணிப்பாளர் திரு.பாரிஸ் ஹடாட்ஜேர்வோஸ் Faris Hadad Zervos தெரிவித்துள்ளார்.



வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸை அன்று 2023.09.21 அன்றுவடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும் எனவும் இறுதி யுத்தத்தின் பின்னர் மக்கள் மீள்குடியேறி தற்போது நிம்மதியான வாழ்க்கைக்கு திரும்புவது மிகவும் மகிழ்ச்சியை தருவதாகவும் பணிப்பாளர் இந்த கலந்துரையாடலில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள் வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தியதுடன், கல்வி, சுயதொழில், உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதில் வடக்கு மாகாணத்திற்கு ஆதரவளிக்குமாறும் உலக வங்கி பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இதன்படி, எதிர்காலத்தில் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவை வழங்கும் என இலங்கை, மாலைதீவு மற்றும் நேபாளத்திற்கான உலக வங்கியின் பணிப்பாளர் உறுதியளித்தார்.

# கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்திலே அநீதி இழைக்கப்படுமோ என்ற நிலையே காணப்படுகின்றது — துரைராசா ரவிகரன்



கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்திலே அநீதி இழைக்கப்படுமோ என்ற நிலையே காணப்படுகின்றது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்திற்கு நீதி கோரி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் இன்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், உலக சமாதான தினமாகும் ஆனால் இலங்கையை பொறுத்தவரை சமாதானம் என்பது எட்டாக்கனியாகவே இருக்கின்றது.

கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்திலே அநீதி இழைக்கப்படுமோ என்ற நிலையே காணப்படுகின்றது. அதேபோன்று ஐநாவின் ஆணையாளர் நாயகம் இலங்கையிலே போர்க்குற்றம் மீறப்பட்டுள்ளது, மனித உரிமை மீறப்பட்டுள்ளது, வறுமையில் இலங்கை 25% ஆக இருக்கின்றது, சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கள் அடங்கிய அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

எங்களுடைய கதறல்கள், கூக்குரல்கள் வீதிகளில் நின்று போராடுகின்ற போராட்டங்கள் என அத்தனை போராட்டங்களாலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்து குறிப்பிடப்பட்டும் சர்வதேச நாடுகள் ஏன் இதுவரை தலையிடவில்லை. இப்படி ஒரு கொடுமையான அரசுக்கு கீழ் தான் நாம் வாழ்கின்றோம்.

வடக்கு கிழக்கு மக்களின் நிலங்களை எடுக்கின்றார்கள், சிறுக சிறுக மதங்களை அழிக்கின்றார்கள் பௌத்த மயமாக்குகின்றார்கள். கடலும் பறிபோய் கொண்டிருக்கின்றது. இப்படி எமது வாழ்வாதாரம் உட்பட நிலங்களையும் அபகரித்து எங்களை பூர்வீகமற்றவர்களாக்குகின்றார்கள் இந்நிலை மாற வேண்டும்.

சனல் 4 ஊடகத்தில் ஈஸ்டர் குண்டு தாக்குதல் காணொளி வெளியானதன் பிற்பாடு 300க்கு மேற்பட்ட மக்கள் இறந்ததற்காக எல்லோரும் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள். அதை நாம் மறுக்கவில்லை. கொலைகார கும்பல் தான் ஆட்சியில் இருக்கின்றது. ஆண்டாண்டு காலமாக ஆட்சி செய்து வந்திருக்கின்றது. என்பதற்கு மறுப்பதற்கில்லை ஆனால் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இறந்து பல ஆண்டு காலமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் கொடுமை இந்த அரசாங்கத்திற்கு ஏன் எங்கள் நிலமை அவர்களது பார்வையில் படவில்லை. சர்வதேசம் நேரடியாக இதற்கு துணைநிற்க வேண்டும் அல்லது சர்வதேச ஆணையாளர் அறிக்கைகேற்ப கருணை காட்டி இலங்கை அரசாங்கத்தை சர்வதேச பொறிமுறைகுள் விசாரணைக்குட்படுத்தி நீதியினை பெற்றுதர வேண்டும் என்றார்.



# மன்னார் நானாட்டானில் டிப்பர் மோதி குடும்பஸ்தர் பலி

**- மன்னார் நிருபர் (20-09-2023)**

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கட்டைக்காடு காட்டுப்புதுக் குடியிருப்புப் பகுதியில் டிப்பர் வாகனம் மோதி குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து புதன்கிழமை (20) மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் உயிரிழந்தவர் நானாட்டான் பிரதேசத்தில் இராசமடு சாளம்பன் பகுதியில் வசிக்கும் 55 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான நடராசா ஞானசேகரம் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.




விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# Abuses, Intimidation and Threats an Impediment to Sri Lanka's Planned "Truth Commission"

- by Siva Parameswaran




A leading Human Rights organization has warned the Sri Lankan government's action could lead to the failure of its proposed truth and reconciliation commission, which has already been rejected by the war-affected Tamils.

In its latest report, Human Rights Watch (HRW) has said, " The Sri Lankan government's ongoing abuses are undermining the purported goals of its newly proposed truth and reconciliation commission".

Tamil victims of the brutal civil war, human rights defenders, and families of the Association for Relatives of the Enforced Disappearances have constantly maintained they don't have faith in any internal mechanism and their sole demand was an international investigation.

HRW says "The government has not consulted on the victims, ignores evidence gathered by past commissions and it exposes them to security force abuses and retraumatization if they participate".

Recent efforts by President Ranil Wickremesinghe to establish what he calls a National Unity and Reconciliation Commission (NURC) have also come in for sharp criticism from HRW.

"A South African style" truth commission appears to be primarily an attempt to deflect international pressure at the Human Rights Council from genuine truth and justice according to its 39-page detailed report.

"The South African process, implemented in very different circumstances to those of Sri Lanka, provided little criminal accountability. While South Africa's Truth and Reconciliation Commission was a major step forward in its time, there are now 30 years of accumulated global experience of prosecutions of international crimes".

Ranil Wickremesinghe's proposed NURC details including its working methodology, evidence-gathering mechanism, the constitution of members, discussions with stakeholders, and any international participation among others is still not publicly available.

Victims fear serious concerns there will be little or no provision for criminal accountability for serious crimes under international law. In the absence of such an accountability process, it would be contrary to international requirements and practice and their interests HRW report points out.

Tamils who spoke to them during the compilation of their report have said "If we raise our voice, they arrest us".

HRW claims their report is based on over 80 interviews done in June 2023 and shows the proposed NURC is not a serious step to obtain truth or justice for past international crimes.

While calling upon the government to genuinely engage with victims and affected communities and learn from previous efforts, the report also urges them to build on the evidence collected and recommendations made by past commissions. This includes the 2017 Consultation Task Fore on reconciliation mechanism, which studied options for transitional justice.

"The government needs to end its ongoing abuses against victims, their families, and human rights defenders and activists seeking to enforce their rights. This means stopping and appropriately punishing members of the military, police, and intelligence services who are carrying out surveillance and intimidation, repressing protests, abusing counterterrorism laws, and taking part in "land grabs" targeting minority communities".

HRW says Sri Lankan authorities are using draconian anti-terror laws to silence dissent, including those calling for truth, justice, and accountability.

"Sri Lanka profoundly needs truth and accountability, but a credible process requires the support of victims' families and an end to government abuses against them and their communities," said Meenakshi Ganguly, deputy Asia director at Human Rights Watch".

Adding further Ms. Ganguly says "The government's own public statements suggest, this latest commission seems to be aimed at deflecting international pressure over continuing impunity, rather than revealing the fate of the disappeared or bringing those responsible to justice."

While the UN Human Rights Council in Geneve has established an expert team to collect evidence of international crimes committed in Sri Lanka for use in future prosecutions, Ranil Wickremesinghe has apparently sought the support of countries like South Africa, Switzerland, and Japan along with the UN hoping his initiative will convince governments there is no need for any further probe by the UN Rights body.

However, HRW has strongly voiced its deep concern against any such support by these governments.

"Foreign governments, including South Africa, Switzerland, and Japan, should not finance or otherwise endorse a truth and reconciliation commission that victims reject and puts them at risk, Human Rights Watch said. International partners, including the European Union, should continue to press the government to meet its commitments to end violations committed using counterterrorism laws".

The government's targeting of those campaigning for justice undermines the credibility of the latest initiative-Truth Commission-Human Rights Watch added.






Although successive Sri Lankan governments appointed commissions that collected extensive testimony from victims and witnesses, none paved the path for honest and open accountability. The authorities instead of pursuing the leads blocked investigations into serious allegations and abuses and stalled the process of prosecutions.

Civil society and victims' groups in Sri Lanka have made it very clear while a process to deliver truth and justice is urgently needed, the current initiative not only lacks credibility but also risks further harm to victims and their families.

"International law obligates governments to prosecute those responsible for war crimes and other serious international crimes by all sides. Failing to do so fuels further rights violations and undermines prospects for a durable peace", Human Rights Watch said.

"President Wickremesinghe promotes 'reconciliation' while his government threatens the victims of past abuses and their families and minority communities," comments Ms. Ganguly.

Commenting further on the proposed internal commission she warns credibility is a crucial factor.

"Instead of creating yet another commission to give the appearance of progress, the government should take steps to gain credibility for a genuine truth and justice process that Sri Lanka desperately needs".

Thousands of people "disappeared" in state custody during the JVP uprising in the late 1980s and three decades of civil war with the LTTE and their relatives are still searching for their missed ones, who were handed over, surrendered or simply disappeared after handed over to or abducted by the state security.

In his recent report on the 'Situation of Human Rights in Sri Lanka' the High Commissioner of the UNHRC, Volker Turk in his report dated September 6 to the UN Human Rights Council said, for any transitional justice process to succeed, "Truth-seeking alone will not be suffice. It must be accompanied by a clear commitment to accountability and the political will to implement far-reaching change".

# இன்று 22ம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்காபுறோ நகரில் நடைபெறும் "மிஸ் தமிழ் யுனிவேர்ஸ்-2023 விழாவின் ஆரம்ப வைபவம் நேற்று நடைபெற்றது




இன்று 22ம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்காபுறோ நகரில் நடைபெறும் 'மிஸ் தமிழ் யுனிவேர்ஸ்-2023' பிரமாண்டமான விழாவை .கனடாவில் இயங்கிவரும் அரஜனன் பியுட்டி அக்கடமி யின் ஸ்தாபகர்கள் திரு. திருமதி நரேந்திரா-சசிகலா ஆகியோர் இணைந்து வர்த்தக நிறுவனங்களின் ஆதரவோடு நடத்துகின்றனர்.

மிஸ் தமிழ் யுனிவேர்ஸ்-2023 இனது ஆரம்ப நிகழ்வு நேற்று வியாழக்கிழமை 21ம் திகதி ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஊடக நிறுவனங்களின் சார்பில் உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள இலங்கையின் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் அவர்களும் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். இன்றைய போட்டியில் இறுதி போட்டியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் மேடையில் தோன்றினர்.

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

## ரொறன்ரோ-கனடா



Satguru
Siva Yogaswami



Satguru Sivaya
Subramuniyaswami

# "ஆன்மீக சொற்பொழிவு"

## சற்குரு போதிநாத வேலன் சுவாமி

(சன்மார்க்க இறைவன் ஆலயம் - ஹவாய்)



# "Divine Speech"

## Satguru Bodhinatha Veylanswami

(Sanmaarga Iraivan Temple - Hawaii)

**Tuesday September 26, 2023 at 6:30 pm**

**Sri Varasiththi Vinaayagar Hindu Temple of Toronto**
3025 Kennedy Rd. Unit-10 Scarborough, Ontario M1V 1S3.

## புரட்டாதி மாத சனீஸ்வர விரதம்
## விசேட நவக்கிரக ஹோம விஞ்ஞாபனம்



ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ள புரட்டாதி மாத சனீஸ்வர விரதத்தை முன்னிட்டு 23.09.2023, 30.09.2023, 07.10.2023, 14.10.2023 ஆகிய நான்கு வார சனிக்கிழமைகளில் காலை 7:30 மணிமுதல் விஷேட அபிஷேகம், சனீஸ்வர ஹோமம், விஷேட பூஜைகள் நடைபெற்று காலை 11:00 மணிக்கு சனீஸ்வர பெருமானுக்கு அலங்கார உபசார பூஜைகள் நடைபெற்று, சனீஸ்வரப் பெருமான் வீதி வலம் வரும் அருட்காட்சியும் நடைபெறும். அடியார்கள் புரட்டாதி மாத சனிக்கிழமைகளில் விரம் அனுஷ்டித்து ஆலயத்தில் **காலை 11:30 மணிக்து நடைபெறும் விஷேட ஹோமங்களில் பங்குபற்றி,** எள்-எண்ணை தீபமேற்றி வழிபட்டு சனீஸ்வரப் பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

**அடியார்கள் புரட்டாதி மாத சனிக்கிழமைகளில் காலை 7:00 மணிமுதல் இரவு 9:00 மணிவரை எள்-எண்ணை தீபமேற்றி சனீஸ்வர வழிபாட்டில் பங்குகொள்ளலாம்.**

416.291.8500 vinaayagar.com vinaayagar

# SJV Father of Tamil Nationalism

## Expansion of speech by V. Thangavelu, President, Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto (Part 19)

*(Continued from last week)*

Lord Blackburn's reasoning in Mulvane's Case had not been concurred in by the other two members of the Court of Session, Lord Sands and Lord Ashmore, nor has it been subsequently treated in Scotland as correctly laying down the law. See Cameron vs. Lord Advocate (1952 S.C. 165). The conclusion which Lord Blackburn reached was that it " must be read, as an implied condition, into every contract between the Crown and a public servant, with the effect that, in the terms of their contract, they have no right to their remuneration which can be enforced in a civil court of justice, and that their only remedy under their contract ' lies in an appeal of an official or political kind ' ".

The only cases cited in support of this proposition were the well-known cases which establish that the Crown has power to determine the employment of a public servant at will. He treated as an ineluctable consequence of this, too plain to call for further explanation, that a civil servant had no claim in law to arrears of salary accrued due before his dismissal.

In their Lordships' view this is a non sequitur. A right to terminate a contract of service at will coupled with a right to enter into a fresh contract of service may in effect enable the Crown to change the terms of employment in future if the true inference to be drawn from the communication of the intended change to the servant and his continuing to serve thereafter is that his existing contract has been terminated by the Crown and a fresh contract entered into on the revised terms. But this cannot affect any right to salary already earned under the terms of his existing contract before its termination.

In the opinion of their Lordships Lord Blackburn's reasoning in Mulvane's Case is defective and his conclusion is contrary to authority and is wrong. That portion of the judgment in Lull's Case which adopts it as a correct statement of the law must be regarded as given per incuriam (ignorance or forgetfulness) since the relevant and prestigious authorities to the contrary appear not to have been cited to the Board.

Their Lordships will humbly advise Her Majesty that this appeal should be allowed on the preliminary issue upon which alone it was decided by the Supreme Court.

Although in their Lordships' opinion a civil servant in Ceylon does have a right of action against the Crown for arrears of salary which accrued due during the currency of his employment, this answer to the preliminary issue does not dispose of the Crown's appeal to the Supreme Court from the judgment of the District Judge. There are the other important constitutional issues to be decided upon which neither the Supreme Court nor their Lordships have heard argument. As already indicated, their Lordships would think it inappropriate to enter upon any of these matters without the benefit of the considered opinion of the Supreme Court of Ceylon thereon. They accordingly express no opinion upon any of the other issues as to the constitutionality of the Official Language Act or the effect of Treasury Circular No. 560 of 4th December 1961, or of any other material facts upon the plaintiff's contract of employment. The case should be remitted to the Supreme Court for further consideration of these other issues and their Lordships will humbly advise Her Majesty accordingly.

The respondent must pay the costs of this appeal to their Lordships' Board and of the appeal to the Supreme Court.

Appeal allowed on a preliminary issue.

Thus, on 11 December 1969 the Privy Council partially ruled in favour of Kodeeswaran in the case of Kodeeswaran vs. Attorney General. The Privy Council directed the Supreme Court to address the constitutional question of whether the Official Language Act of 1956 which made Sinhala the official language was in violation of Section 29 of the constitution, which prohibits discrimination.

This case is famous because it highlighted a conflict between the Roman-Dutch Law and English Law in Sri Lanka. Kodeeswaran sued the Government for arrears of pay, and the Ceylon (now Sri Lanka) Supreme Court dismissed the action, saying that under English law a civil servant had no right to remuneration that could be enforced against the State. As I have said, it was against the judgment of the Supreme Court that Kodeeswaran appealed to the Privy Council, claiming that Roman-Dutch law governed the issue, and that under Roman Dutch Law, an action against the State for arrears in pay was allowed. The Privy Council said that neither English Law nor Roman -Dutch Law allowed for the type of action Kodeeswaran was brought, but that the Sri Lankan courts, over the years, had recognized such an action. In other words, what the Privy Council said was that the Ceylon courts had developed, through interpretation, a body of laws, and that this was what constituted the "common law" of Sri Lanka. The Privy Council therefore held for Kodeeswaran.

The issue with regard to language policy was a secondary issue in this case, and the Privy Council emphatically refused to comment on it. Here's what the Privy Council actually said: "There are more important constitutional issues to be decided upon which neither the Supreme Court nor their Lordships have heard argument. As already indicated, their Lordships would think it inappropriate to enter into any of these matters without the considered opinion of the Supreme Court of Ceylon thereon." (Kodeeswaran v. Attorney General (1969) 72 NLR 337, pp. 347)

The first legal challenge on the constitutionality of Sinhala Only act was in the case Mudanayake V Sivagnasunderam. This was the Court's first chance to interpret section 29(2) of the Soulbury Constitution, which, inter alia, prohibited the Ceylon Parliament from passing legislation that imposed "disabilities or restrictions" on any community that were not imposed on other communities.

(To be continued)



# குறிந்தூர்மலை தொடர்பில் நாடாளுமன்றின் மேற்பார்வைக் குழுவில் ஆராயப்பட்டது

- நடராசா லோகதயாளன்

முல்லைத்தீவு குறுந்தூர்மலையில் 2,500 வருடத்திற்கு முன்பு பௌத்த ஆலயமே இருந்தது சைவ ஆலயம் இருக்கவில்லை பொங்க அனுமதிக்க முடியாது என சரத் வீரசேகர நாடாளுமன்றின் மேற்பார்வைக் குழுவில் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டார்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் குறுந்தூர்மலை ஆதிசிவன் ஆலய விவகாரம் நாடாளுமன்றின் கலாச்சார அமைச்சின் மேல்பாற்வைக் குழுவில் வியாழக்கிழமை (21) ஆராயப்பட்டது.

இதனபோது முல்லைத்தீவு மாவட்டம் குறுந்தூர்மலை ஆதிசிவன் ஆலய விடயம் நீதிமன்றின் கட்டளைவரை சென்றுள்ளபோதும் அதனைத் தொல்லியல்த் திணைக்களம் முழுமையாக ஆராயும் வகையிலேயே நாடாளுமன்றில் ஆராயப்பட்டது.

நாடாளுமன்ற கலாச்சார மற்றும் தொல்லியல் விவகாரகுழு, தொல்லியல்த் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட அரச அதிபர், மாகாண பிரதம செயலாளர், முல்லைத்தீவு பொலிஸ் அதிகாரி, கிளநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

இக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன்வைத்தபோது இவர்களிற்கான பதில் கருத்துக்களை நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் முன் வைத்தார்.

இதன்போது குறித்த ஆலய சர்ச்சைக்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக தொல்லியல்த்துறையினையும் மாணவர்களையும் உள்ளடக்கி சமய விவகாரம், கலாச்சாரம், தொல்லியல் என 3 குழுவை உருவாக்கி அவர்களின் கண்காணிப்பில் விடும்போது சரச்சை ஏற்படாது என்ற கருத்தை வடக்கு மாகாண பிரதம செயலாளர் முன் வைத்தார்.

"எமது மாவட்டத்தில் வாழ்ந்த, தற்போதும் வாழும் மக்களிற்குச் சொந்தமான 17 ஏக்கர் நிலத்தையும் உள்ளடங்கியே 224 ஏக்கரை சுவீகரிக்க தொல்லியல்த் திணைக்களம் கோருவதனால் மக்களிற்கு கடும் விசணத்தை ஏற்படுத்துவதனால் மக்களின் 17 ஏக்கர் நிலத்தையும் விடுவிக்க வேண்டும்" என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் உமாமகேஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.

இதனிடையே இச்சர்ச்சை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தனது கருத்தில் "1938 ஆம் ஆண்டு தொல்லியல் இடம் என வர்த்தமானி அறிவித்தல் 78 ஏக்கருக்கே உண்டு. அதேநேரம் 2018 வரையும் குறுந்தூர்மலையென இருந்த பகுதி 2020 இல் எவ்வாறு குறுந்தூர் விகாரையாக வர்த்தமானி வெளியிடப்பட்டது. அப்போது அமைச்சர் தலைமையில் ஆய்வு செய்ய வெளிக்கிட்டபோதே பல்கலைக் கழகத்தையும் இணைக்குமாறு நாம் கோரினோம் ஆனால் மறுக்கப்பட்டது.

இதன் பின்பே அங்கே இரகசியமாக விகாரையை அமைத்து பிக்கு பேட்டி வழங்குகின்றார். இருந்தபோதும் அங்கே விகாரை இல்லை எனத் தொல்லியல்த் திணைக்களம் கூறுகின்றது. பௌத்த பிக்குவோ அந்த விகாரையின் மேல் இருந்து இந்த விகாரையை உடைக்க வருகின்றனர் என செவ்வி வழங்குகின்றார் அவ்வாறானால் எது சரியானது.



குறுந்துர்மலையில் ஆய்வின்போது வெளிப்பட்டது சிவலிங்கம் அது சிவ சின்னம் என சைவ மக்கள் தெளிவாக கூறும் நிலையில் தொல்லியல்த் திணைக்கள அதிகாரிகளாகிய நீங்கள் அந்தச் சின்னத்தை பௌத்த அடையாளம் என தெரிவித்து வருகின்றீர்கள். ஆனால் இதே படத்தை தொல்லியல்த் திணைக்களம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் காட்சிப்படுத்தி இது சிவன் சிலை என எழுதியுள்ளனர். அவ்வாறானால் எது சரி நான் கிறிஸ்தவன் நீங்களே பதிலைக் கூறுங்கள் இது சிவன் சிலையா அல்லது பௌத்த சின்னமா" என்பதனை என்று நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கோரியபோது வடமாகாண பிரதம செயலாளரும் முன்னாள் மாவட்ட அரச அதிபருமான சுமன் பந்துல வவுனியா மாவட்டச் செயலகத்தில் அவ்வாறு படம் உள்ளதனை உறுதி செய்கின்றேன் என்றார்.

இங்கே தொடர்ந்தும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் குறுந்தூர்மலையில் "1999 வரை இல்லாத விகாரை இப்போது அமைப்பதோடு சிவன் ஆலயம் இருந்த இடத்தில் இப்ப விகாரை அமைப்பதே பிரச்சணை" என்றார்.

இவை தொடர்பில் தொல்லியல்த் திணைக்கள அதிகாரிகள் கருத்து தெரிவிக்கும்போது, 78 ஏக்கருக்கு வெளியில் தமிழர் நிலமான 17 ஏக்கரையும் விடுவித்து மேலதிகமாக 3 ஏக்கரை விடுவித்து அதில் ஒரு ஏக்கர் நிலத்தில் விகாரையினையும் ஒரு ஏக்கரில் சிவன் ஆலயத்தினையும் அமைப்பதோடு மேலும் ஒரு ஏக்கரை பொது இடமாகவும் பிரேரிக்கலாம் என ஆலோசணை முன்வைத்தனர்.

இதேநேரம் 17 ஏக்கரை விடுவிக்க அனைவரும் இணங்கியபோதும் தொல்லியல்த் திணைக்களத்தைச் சேர்ந்த சன்னஜெயசுமன 2010 முதல் 2015 வரை வடக்கில் எங்கே தொல்லியல் சின்னம் உள்ளது என அடையாளமிட்டுள்ளனர். அதனை வர்த்தமானி வெளியீடு செய்யவும இணக்கத்தை தாருங்கள் என்றபோது இது அதற்கான கூட்டம் இல்லை. இதனை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிற்கு சமர்ப்பித்து பகிரங்கப்படுத்தி மக்களின் கருத்தின் பின்பே உது தொடர்பில் ஆராயலாம் என தொல்லியல்த் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதிலளித்தார்.

இறுதியல் இரு மத ஆலயங்களும் அமைத்து 17 ஏக்கர் நிலத்தையும் விடுவிப்பது தொடர்பிலேயே விசேட கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1066

## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் கொக்குவில், யாழ்ப்பாணம்

இவ்வாறு வளர்ச்சியடைந்த ஆலயத்தின் தேவைகளுக்கு மலர் பறிப்பதற்கு, நந்தவனம் ஒன்று தேவை என்பதை முருகன் அடியார்கள் உணர்ந்தனர். ஆலயத்திலே நந்தவனம் அமைத்து, பூசைக்கு மலர் பறித்துக்கொடுத்தலாகிய திருத்தொண்டு செய்வது, சரியை மார்க்கத்தில் சிறந்ததென்பதை புராண வரலாறுகளும், நாயன்மார்களின் திருத்தொண்டுகளும் உணர்த்தியுள்ளன. இதனை மனதிற்கொண்டு திரு. கா.சி. நடராசா அவர்கள், ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாக நந்தவனம் அமைக்கும் வேலையை ஆரம்பித்து வைத்தார். இவரைத் தொடர்ந்து திரு. சு. நமசிவாயம் அவர்கள், பொதுமக்களிடம் நிதி திரட்டி நந்தவனத் திருப்பணியை நிறைவேற்றி வைத்தார். 1964 ஆம் ஆண்டு, பதின்னான்கு பேர் கொண்ட திருப்பணிச்சபை அமைக்கப்பட்டு, திருப்பணிவேலைகள் பல சிறப்பாக நடைபெற்றன. 1965 ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ செல்லத்துரை குருக்கள், மங்களம்மா ஆகியோரது பேரன் பிரம்மஸ்ரீ வை. சுப்பிரமணியக் குருக்கள், குருப்பட்டம் தரித்து நித்திய நைமித்திய பூசைகளைச் செய்து வந்தார். 1966 ஆம் ஆண்டு இவ்வாலயத்திலே பல்வேறு திருப்பணிகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாண்டு பாலஸ்தாபனம் நடைபெற்று கருவறையும், சண்டேசுவரர் சந்நிதானத்தையும் தவிர, ஏனைய பரிவார மூர்த்திகளது சந்நிதானங்களும், ஏனைய மண்டபங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டது. இவ்வாறான புனரமைப்புவேலைகள் இடம்பெற்று, 1968 ஆம் ஆண்டு புனராவர்த்தன ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம், மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இக் கும்பாபிஷேகம், நல்லூர் சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களை பிரதமகுருவாகக்கொண்டு, பல சிவாச்சாரியார்களினது உதவியோடு மிகச் சிறப்பாக நிறைவுபெற்றது. இதுமுதல் மண்டலாபிஷேகப்பூர்த்திவரை அருணகிரிநாதர் மடத்தில், தினமும் மகேஸ்வரபூசையும் இடம்பெற்றது. 1968 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே திருமதி. செல்லத்துரை பவளம் அவர்களும், திரு. கந்தப்பிள்ளை சிவராசா அவர்களும், அழகிய காண்டாமணியொன்றினை அன்பளிப்புச் செய்தனர். 1971 ஆம் ஆண்டு, மீண்டும் பதினொருபேர் கொண்ட தர்மகர்த்தாசபை தெரிவு செய்யப்பட்டது. இச் சபையின் தலைவராக சமாதானநீதவானாக விளங்கிய திரு.த.நீதிராசா அவர்களும், செயலாளராக வைத்தியகலாநிதி திரு. இ. அருட்பிரகாசம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்காலப்பகுதியில் விநாயகருக்குரிய கட்டுத்தேர் பழுதடைந்து காணப்பட்டது. எனவே விநாயகருக்கு புதியதேர் ஒன்றினைச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சமாதானநீதவான் திரு. த. நீதிராசா அவாகளது தலைமையில், தம்பு குடும்பத்தினரது உபயமாக 1975 ஆம் ஆண்டு புதிய செய்கைத்தேர் உருவாக்கப்பட்டது. இத்தேரினை யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் திரு. ஆறுமுகம் சிவரத்தினம் ஸ்தபதியார் குழுவினர் உருவாக்கினர். இவ்வாண்டிலேயே மணிக்கூட்டுக்கோபுரத் திருப்பணிச்சபை அமைக்கப்பட்டு, திருப்பணிவேலைகள் நிறைவேற்றப்பட்டது. கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் மீது கொண்ட பக்தியினாலும், அவன் அருளைப்பெற்ற அன்பர்களின் முயற்சியினாலும், ஒவ்வொரு கால கட்டத்திலும் இவ்வாலயத் திருப்பணிகள் சிறப்பாக இடம்பெற்றன. 1981 ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை, இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய பூசைகளைக் கவனிக்கும்பொருட்டும், நிறைவுபெறாதிருந்த திருப்பணிவேலைகளை நிறைவேற்றும்பொருட்டும், பதினைந்துபேர்கொண்ட நித்திய பரிபாலனக்குழுவொன்றை நியமித்தது.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தோடு தொடர்புடைய பக்தர்கள் இக்காலப்பகுதியில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர். திருப்பணிவேலைகளுக்காக அமைக்கப்பட்ட நித்தியபரிபாலனக்குழுவினர், உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் நிதிசேகரித்து உள்வீதி, நிலவேலை, உள்வீதிச்சுவர்பூச்சுவேலைகள், உள்வீதி வடக்குப்பக்க இரண்டாவது கொட்டகை, சகடைக்கொட்டகை ஆகிய திருப்பணிகளை நிறைவேற்றினர். மீண்டும் பல்வேறு பணிகளை நிறைவேற்றும்பொருட்டு 1986 ஆம் ஆண்டு திரு. இ. பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தர்மகர்த்தாசபை அமைக்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தர்மகர்த்தாசபை, பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றும்பொருட்டு அமைக்கப்பட்டது. இவ்வாலயத்திலே அக்கறையும், ஆர்வமும் கொண்ட பொதுமக்களின் வேண்டுகோளுக்கமையவே தர்மகர்த்தாசபை மீளத் தெரிவுசெய்யப்பட்டது. குறிப்பாக ஆலய நிர்வாகம் சிறப்பாக நடைபெறவேண்டும் என்பது இச்சபையின் அடிப்படை நோக்கமாகக் காணப்பட்டது. அத்தோடு ஆலயத்திற்குரிய சொத்துக்களை நல்ல முறையில் பேணுவதும் இச்சபையின் கடமைகளுள் ஒன்றாக வரையறுக்கப்பட்டது. ஆலய வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு காலத்திற்குக் காலம் பல்வேறு பெயர்களில், சபைகள் தெரிவு செய்யப்படுவது பொதுவழக்காகக் காணப்படுகின்றது. ஆனால் ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாகக் காணப்படும் வழிபடுவோரது நலன்களைக் கருத்தில் கொண்டு, வழிபடுவோர் சபையொன்றும் 1986 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இச் சபையின் தலைவராக திரு. இ. காசிநாதன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இச்சபை பல்வேறு நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு இயங்கியது.

இவ்வாறு படிமுறையாக வளாச்சியடைந்து வந்த மஞ்சவனப்பதி ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள், 1987 ஆம் ஆண்டு இடம் பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாகத் தடைப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் காரணமாக, ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்திலே தஞ்சமடைந்தனர். இதே ஆண்டு மார்கழிமாத நடுப்பகுதிவரை ஆலயத்தின் நித்திய நைமித்திய பூசைகள் தடைப்பட்டாலும், பின்னர் நிலமையில் மாற்றம் ஏற்றபட்டது. அகதிகளாக வந்த மக்களுக்கு உணவும், உறைவிடமும் வழங்குவதில் தர்மகர்த்தாசபை, வழிபடுவோர் சபை ஆகியவற்றுடன் இணைந்து சைவமக்களும் பணியாற்றியுள்ளனர்.

- வளரும்...



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377


# இவ்வார ராசிபலன்

**22-09-2023 வெள்ளி தொடக்கம் 28-09-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** வாழ்க்கையில் முன்னேற்றம் தரும் வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகரிக்கும். உற்சாகம் களைகட்டும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். விரும்பியது நிறைவேறும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கை துணையால் வளம் பெருகும். பொருளாதாரம் மேம்படும். கடன் பாக்கிகள் வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. மனிதநேயம் மிகுதியாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உடல்நிலையில் கவனம் தேவை. சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் உண்டு. பழையக்கடன் தீரும். விபரீத எண்ணம் விலகும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். துணிவோடு செயல்படுவீர்கள். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோ'ம் குடிக்கொள்ளும். பெற்றோர் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B





**ரிஷபம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். உள்ளம் மகிழும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். திடீர் செலவு ஏற்படும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தன வரவுகள் தடைப்படும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சால் வீண் வம்பு அகலும். உடன்பிறப்பால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். உறவினர் ஒற்றுமை பலப்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். சாமார்த்தியமாக செயல்படுவீர்கள். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: வினை தீர்க்கும் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,8,5
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**மிதுனம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். புதுமைகள் நிறைந்த காலம். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பாராட்டுக்கள் கிடைக்கும். உத்தியோக வாய்ப்புண்டு. மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. சந்தோஷம் அதிகரிக்கும். குழந்தைகளால் பெருமை சேரும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். மங்கள செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர் உற்சாகம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். கலைத்துறை ஆர்வம் கூடும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். குதூகலமான எண்ணம் உருவாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். பாராட்டக்கள் உயரும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசையார்வம் கூடும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். எதிரிகளின் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,7,6
அதிரஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** எதிர்ப்புக்களால் பொறுப்பு கிடைக்கும் வாரம். விறுவிறுப்பான காலம். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். பெண்களுக்கு கவனம் தேவை. தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. குடும்ப கௌரவம் உயரும். நாட்பட்ட நோய்களுக்கு தீர்வு கிடைக்கும். நினைத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். பூமி வாங்கும் யோகம் உண்டு. செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு உண்டாகும். மனைவி சச்சரவுகள் தீரும். தாய் வழி உறவில் கவனம் தேவை. உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். பொருள் இழப்பு ஏற்படும். புதிய வேலை முயற்சி பலன் தரும். உல்லாசப் பயணம் இனிக்கும். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடக்கும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலை காணப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X




**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். விவசாயிகள் பயன்பெறும் வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடவும். தெம்பும், திராணியும் கூடும். உடல் நலம் சிறக்கும். முகப்பொலிவு கூடும். பொருளாதாரம் ஏற்றம் பெறும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். விவசாயிகள் பயன் பெறுவர். சகோதர வழியில் கவனம் தேவை. தர்மச்சிந்தனை மேலோங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் லாபம் புரளும். செல்வாக்கு மேம்படும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவுகள் கூடும். ஆடம்பரப் பொருள் சேரும். பெரியோர்களின் ஆதரவுப் பெருகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். மனம் மகிழும். பதவி உயர்வு தாமதமாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். குடும்ப அன்யோன்யம் சீராக இருக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,G




**கன்னி:** வகையான வாழ்வமையும் வாரம். உடல்பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதவியில் உயர்ந்த நிலை உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி நிலவும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். இரகசியம் காப்பது நல்லது. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆரோக்யம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சியில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பரால் இனிய செய்தி வந்தடையும். சுபவிரயம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். புதியச் சொத்துக்கள் சேரும். விலகி சென்றவர் திரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு கூடும். கடன் விஷயத்தில் விடுதலைப் பெறுவீர்கள். செயல்களில் கவனமுடன் இருக்க வேண்டும். எதிரிகளால் பலன் கிடைக்கும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். பிள்ளைகள் வழியில் செலவுகள் அதிகரிக்கும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவுகள் ஏற்படும். நன்மைகள் அதிகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**துலாம்:** பெண்களால் ஆதாயம் சேரும் வாரம். வறுமைகள் அகலும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. திருப்தி அதிகமாகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். தந்தையின் உடல் நலம் கவனம் தேவை. எண்ணங்கள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பாதகமான சூழ்நிழைலகள் விலகும். குடும்ப மேன்மைகள் உருவாகும். உடல்சோர்வு நீங்கும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். வெற்றி வீடு தேடி வரும். முத்தான வாய்ப்பு பெருகும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U




**விருச்சிகம்:** முத்தான வாய்ப்பு பெருகும் வாரம். சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். விபரீத போக்கு மறையும். உறவினர் வருகையால் பலன் உண்டு. பெற்றோர்களின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டாகும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். ஆன்மீக சிந்தனை கூடும். பிள்ளைகள் வழியில் இன்பம் உண்டாகும். பெற்றோர்களிடத்தில் சமாதானம் கிடைக்கும். வேண்டாத நபர் விலகுவர். பழையக்கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்பால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். திருப்புமுனையான காலம். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. பிரச்சனை முடிவுக்கு வரும். வர்த்தக தொழில் லாபம் தரக்கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,1,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T




**தனுசு:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப வளர்ச்சி கூடும். கௌரவமான காலம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்யோகத்தில் உயர்வு ஏற்படும். ஆரோக்யம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கணவன், மனைவி உறவு நீடிக்கும். மருத்துவச் செலவில் திருப்தி அடையும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். பாதகம் விலகும். முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளிடத்தில் முன்னேற்றம் உண்டு. கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். வேண்டாத விஷயங்கள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மன சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாயில்தேடி வாய்ப்பு வரும். காரிய தாமதம் ஏற்படும். எதிர்கால எண்ணம் உதயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V

(தொடர்ச்சி 26 பக்கம்)

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுடன் தமிழின படுகொலைகளுக்கும் சர்வதேச விசாரணை அவசியம்



**வி.தேவராஜ்**
மூத்த ஊடகவியலாளர்

• இலங்கை, இந்தியா, சர்வதேச சமூகம் உற்பட தமிழ்த் தலைமைகளும் கூட்டுப் பொறுப்பின ஏற்க வேண்டும்.

• ஆட்சி அதிகாரத்துக்காக சிங்கள ஆளும் வர்க்கம் எந்த எல்லைக்கும் செல்வதற்குத் தயங்காது.

தமிழ் மக்களும் தமிழர் போராட்டமும் காட்டிக் கொடுப்புக்களாலும் துரோகத்தனத்தாலும் பலியாகிய பல சம்பவங்களை கடந்த 75 வருடகால வரலாற்றில் பதிவுகளாக கொண்டுள்ளது. இத்தகைய காட்டிக் கொடுப்புக்களிலும் துரோகத்தனங்களிலும் மிதவாதத் தலைமைகள் உற்பட விடுதலைநோக்கி களம் இறங்கிய இளைஞர் குழாங்களையும் இந்த நோய் பற்றிக் கொண்டது. விதிவிலக்கின்றி தமிழர் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் காலத்துக்குக் காலம் சிறு சிறு துளிகளாக கிளைவிட்டுப் பரவிய இத்தகைய குருவிச்சைகளினால் தமிழினம் சந்தித்த இழப்புக்கள் கணக்கில் அடங்காதது.

• "பிரபாகரனைப் பலவீனப்படுத்துவது என்பது தமிழினத்தை வேருடன் பிடுங்கிச் சாய்ப்பதற்குச் சமன்"

ஆனால் இந்த இழப்புக்களால்தமிழினம்சோர்ந்துபோய்விடவில்லை. அமைதியாக மூலையில் முடங்கிவிடவும் இல்லை. அந்த இழப்புக்களையும் சுமந்து கொண்டு மீண்டெழுவதே வரலாராக உள்ளது.

2004 ஆம் அண்டில் கருணா தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து வெளியேறியபோது "தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் பலவீனப்படுத்துவது என்பது தமிழினத்தை வேருடன் பிடுங்கிச் சாய்ப்பதற்குச் சமன்" என்று வீரகேசரி வாரவெளியீட்டில் எழுதப்பட்ட எனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

கருணாவின் வெளியேற்றத்துடனும் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது பிரகடனப்படுத்திய "மனிதாபிமானத்துக்கான போரினை" இந்தியா உற்பட சர்வதேசமும் இணைந்து தலைமையேற்று "வெற்றியினை" இலங்கைக்கு பரிசாக வழங்கின.

அவ்வேளையில் புதிய இலங்கை மலரப்போவதாகவும் ஜனநாயகம் தழைத்தோங்கப் போவதாகவும் தமிழ் மக்களின் வாழ்வில் விடிவு விமோசனம் பிறக்கப் போவதாகவும் பிரசாரப் பீரங்கிகள் இதற்கு சார்பானவர்களால் முழங்கப்பட்டன.

• நரிகளாகக் காத்திருந்த தமிழ்த் தலைமைகள்.

அதேவேளையில் தமிழ் மக்கள் "மனிதாபிமானத்துக்கான போரில்" கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டபோது இந்தக் கொலைகளைத் தடுத்து நிறுத்த முன்வராது அமைதி காத்து மனிதாபிமானத்துக்கான போர் "தமிழர் அரசியலில் தமக்கான விடியலைத் தரும்" என்ற எதிர்பார்ப்பில் தமிழ்த் தலைமைகள் சிங்களத்தின் கொலைக் களத்தின் ஓரத்தில் நரிகளாகக் காத்திருந்தனர். உண்மையில் முள்ளி வாய்க்காலில் கொட்டிய குருதிகளுக்காக இலங்கை ஆட்சியாளர்கள் சர்வதேச சமூகம் மற்றும் இந்தியா என்பன கூட்டுப் பொறுப்பினை ஏற்றாக வேண்டும். இந்தக் கூட்டணியின் பங்காளிகளாக தமிழ்த் தலைமைகளும் இருந்துள்ளன என்ற வகையில் இவர்களும் இதற்கான பதிலைக் கூற வேண்டும். இவர்களும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

அனைத்துமே இவர்கள் எதிர்பார்த்தது போன்று நிறைவேறியது.

- இலங்கை அரசாங்கம் இந்தியா மற்றும் சர்வதேசத்தின் உதவியுடன் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.
- தமிழ்த் தலைமைகள் தமிழர் அரசியலில் "கிங் மேக்கர்களாக" தம்மைத் தாமே முடி சூட்டிக் கொண்டனர்.
- கருணா பிள்ளையான் உற்பட இணக்க அரசியல் நடத்துபவர்கள் மகிந்த அணியினரின் செல்லப் பிள்ளைகளாயினர்.

ஆனால் தமிழ் மக்கள் "வேருடன் பிடுங்கிச் சாய்க்கப்பட்டுவிட்டனர்".

- கருணா பிள்ளையான் மற்றும் இணக்க அரசியல் நடத்தபவர்களால் தமிழ் மக்களின் வாழ்வில் விடியலோ விமோசனமோ பிறக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் "மனிதாபிமானத்தக்கான போரினை" உத்தியோகப்பற்றற்ற முறையில் தலைமையேற்று நடத்தி வெற்றியை ஈட்டிக் கொடுத்த இந்தியா உற்பட சர்வதேச சமூகத்தினாலும் இலங்கை மண்ணில் ஜனநாயகத்தையோ அல்லது தமிழ் மக்களுக்கான விடியலையோ பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

கருணா பிள்ளையான் போன்றோர் தமிழ் மக்களின் விடுதலைக்காக இலங்கை ஆட்சியாளர்களுடன் குறிப்பாக மகிந்த ஆளும் வர்க்கத்துடன் இணையவில்லை. தத்தமது நலன்களுக்காக விலை போனவர்கள். எனவே இவர்களால் தமிழ் மக்களுக்கு விடுதலை விடிவு விமோசனம் என்பன கிடைக்கும் என தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

அதேபோல் இலங்கை அரசாங்கத்தின் மனிதாபிமானத்தக்கான போருக்கு உடந்தையாக நின்ற இந்தியா மற்றும் சர்வதேச சமூகமும் உண்மையில் இலங்கையில் ஜனநாயகம் மலர வேண்டும் புதிய பாதையில் பயணிக்க வேண்டும் தமிழ் மக்களுக்கு விடுதலை விமோசன் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காக போர் நடத்தவில்லை.

ஆப்கானிஸ்தானைவிட்டு அமெரிக்கா வெளியேறிய போது அமெரிக்க ஜனாதிபதி பைடன் "ஆப்கானிஸ்தானில் ஜனநாயகத்தை நிலை நிறுத்துவது அமெரிக்காவின் வேலை அல்ல" என்று குறிப்பிட்டார்.

அதேபோல்தான் இந்தியாவும் சர்வதேச சமூகமும் தத்தமது நலன்களுக்காகவே தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கைப் போரில் பங்கெடுத்தன. எனவேதான் தமக்கான நலன்களை இலங்கை ஆட்சியாளர்களிடம் இருந்து தற்போது கறந்து வருகின்றனர்.

இந்த சக்திகளின் நகர்வுகளுக்கு கர்த்தாவாக இருக்கின்ற தமிழ் மக்கள் தெருவில் நிற்க போர் நடத்தியவர்களும் போரில் பங்குபற்றியவர்களும் காட்டிக் கொடுத்தவர்களும் பலன் பெறுகின்றனர்.

மனிதாபிமானத்துக்கான போரில் இலங்கை ஆட்சியாளர்களினதும் இந்தியா உற்பட சர்வதேச சமூகத்தினதும் தத்தமது நலன் நோக்கிய வாக்குறுதிகளை உள் இழுத்து தமிழ் மக்கள் கொலைக் களத்தில் செத்துக் கொண்டிருக்க அமைதி காத்த தமிழ்த் தலைமைகளும் வடக்குக் கிழக்கில் வெறுமையாகிய தமிழர் அரசியலை பங்குபோடுவதில் இன்றுவரை குடும்பி பிடி சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களாலும் தமிழ் மக்களுக்கு விடிவோ விமோசனமோ வருவதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களுக்கான அரசியல் விடுதலை நோக்கிய பயணத்துக்கான எவ்வித தீர்வுப் பொதிகளும் இன்றி வெறும் கையுடன் நிற்கும் இவர்கள் நாடாளுமன்றம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் தம்மையும் தாம் சார்ந்தவர்களையும் வெற்றி பெறச் செய்துவிடுமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

• கூட்டமைப்பின் பெயரில் தமிழரசுக் கட்சி அரசியல்.

2009 இல் போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்து அதற்கென யாப்பையும் உருவாக்கி வெளிப்படைத் தன்மையுடனான நிதி கட்டமைப்பையும் உருவாக்கி அனைத்து தமிழ்க் கட்சிகளையும் உள்ளடக்கிய பலம் வாய்ந்த அமைப்பாக உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அவ் வேளையில் முன் வைக்கப்பட்ட போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையால் தொடர்ச்சியாக அது நிராகரிக்கப்பட்டது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த தமிழரசுக் கட்சியினர் இதற்கு எதிராக இருந்தனர்.

தமிழரசுக் கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பெயரில் அரசியல் நடத்தி தனது அரசியல் பாதையைப் பலப்படுத்தும் இலக்கை நோக்கிப் பயணிக்க முயல்கின்றது. இது இறுதியில் தமிழர்களுக்கென உள்ள அமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைத்துவிடும் என இந்தக் கட்டுரையின் பத்தியாளரால் தொடர்ச்சியாக அவ் வேளையில் எழுதப்பட்டது. ஆனால் பத்தியாளர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைப்பதாகவும் தமிழ் மக்களிடையே உள்ள ஜனநாயக அமைப்பை இல்லாதொழிக்கப் பார்ப்பதாகவும் இன்னொரு தீவிரவாதத்துக்கான விதைகளைத் தூவுவதாகவும் அயலக தூதரகத்தின் உதவியுடன் பத்தியாளரை ஊடகத்துறையில் இருந்தே அகற்றினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் அதற்கென யாப்பு உருவாக்கப்பட வேண்டும் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்க வேண்டுமென்ற கோரிக்கையை தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா அண்மையில் விடுத்திருந்ததை இங்கு பதிவு செய்தல் பொருந்தும்.

• கூட்டமைப்பு சிதைந்தது.

தற்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்பது தமிழரசுக் கட்சியுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதே இதற்குச் சான்றாகும். உண்மையில் எதிர்பார்த்தது போன்று தமிழரசுக் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைத்துவிட்டதை இன்று வரலாறு பதிவு செய்துள்ளது.

• மொத்தத்தில் தமிழ் மக்களை விடுவிப்பதற்காக இலங்கை ஆட்சியாளர் பிரகடனப்படுத்தி நடத்திய "மனிதாபிமானத்துக்கான போர்" தமிழ் மக்களை விடுதலை செய்யவில்லை.

• தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து சென்ற கருணா பிள்ளையான் மற்றும் இணக்க அரசியல் நடத்துபவர்களாலும் தமிழர் விவகாரத்தில் விடுதலை நோக்கி ஒரு துரும்பைத்தானும் நகர்த்த முடியவில்லை.

• மனிதாபிமானப் போருக்கு அணி திரண்டு ஆதரவு வழங்கி தமிழ் மக்களுக்கு எதிராகப் போரினையும் நடத்தி இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்த இந்தியா உற்பட சர்வதேசசமூகம் தமிழர் விவகாரத்தில் ஏதும் செய்ய முன்வரவில்லை.

முள்ளி வாய்க்காலில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட போது அமைதி காத்த சர்வதேச சமூகம் ஈஸ்டர் குண்டு வெடிப்பில் பலியான தமது நாட்டு குடி மக்களுக்காகவும் உலக கத்தோலிக்க சமூகத்திற்காகவும் சர்வதேச விசாரணை கோரி நகர்கின்றனர். இந்த நகர்வுகள் மறுபுறம் ரணில் விக்ரமசிங்கவின் எதிர்கால அரசியல் நலன்களுக்கான நகர்வுகளாக அரசியல் விமர்சகர்கள் பார்க்கின்றனர்.

ஆட்சி அதிகாரத்துக்காக சிங்கள ஆளும் வர்க்கம் எந்த எல்லைக்கும் செல்வதற்குத் தயங்காது.

• அதே வேளையில் கடந்த 75 வருடங்களாக இனவாதத்தை வைத்து சிங்கள மக்களிடையே மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய சிங்கள ஆளும் வர்க்கம் 2009 இல் போர் மௌனமாக்கப்பட்டதையடுத்து இனவாதமும் "போர் வெற்றி வெறியும்" அரசியல் மூலதனமாக தென்னிலங்கையில் எடுபடாத நிலையில் பாதுகாப்பு என்ற போர்வையில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை நடத்தி சிங்கள ஆளும் வர்க்கம் ஆட்சிபீடமேறியதை சனல் 4 வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இது ஆட்சி அதிகாரத்துக்காக சிங்கள ஆளும் வர்க்கம் எந்த எல்லைக்கும் செல்வதற்குத் தயங்காது என்பதை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் பதிவு செய்தள்ளது. அதாவது தமது அரசியல் நலன்களுக்காக தமிழ் மக்களைத் தொடர்ச்சியாகக் கொன்றொழித்த சிங்கள ஆளும் வர்க்கம் தற்போது சிங்கள மக்களையே பலி எடுக்கத் துணிந்துவிட்டது என்பதையே ஈஸ்டர் குண்டு வெடிப்பும் அரகலயா மக்கள் எழச்சிக்குப் பிந்தைய தென்னிலங்கை நிகழ்வுகளும் துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றன.

மொத்தத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை ஆட்சியாளர்களின் மனிதாபிமானத்துக்கான போரினை வழி நடத்தி அதில் பங்குபற்றி வெற்றியினை தங்கத் தட்டில் வைத்து இலங்கையின் ஆட்சியபாளர்களுக்கு வழங்கிய இந்தியாவும் சர்வதேச சமூகமும் தமிழ் மக்களை மாத்திரமல்ல தென்னிலங்கை சிங்கள மக்களையும் சிங்கள அளும் வர்க்கத்தினரிடம் தாரைவார்த்துக் கொடுத்தள்ளனர்.

அதற்கும் அப்பால் அரகலய எழச்சிக்குத் துணை நிற்பதாக பாசாங்கு காட்டி மீண்டும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் பிடிக்குள் ஓட்டு மொத்த நாட்டு மக்களையும் தள்ளிவிடும் நகர்வினையே சர்வதேச சமூகம் மேற் கொள்கின்றது.

மகிந்த ஆளும் வர்க்கத்திற்கு மாற்றீடாக ரணில்விக்ரமசிங்க ஆளும் வர்க்கம் என்ற சர்வதேசத்தின் சூத்திரம் இதனையேக் காட்டி நிற்கின்றது. இதே பாணியிலேயே தமிழர் அரசியலையும் இந்தியாவும் சர்வதேசமும் உருவாக்குகின்றது.

தமிழர் அரசியலும் தென்னிலங்கை அரசியலும் பழைய போத்தலுக்குள் அடைக்கப்பட்ட பழைய கள்ளாகவே பயணிக்க உள்ளது. அதாவது சர்வதேச சமூகமும் இந்தியாவும் இலங்கையின் 75 வருட கால சிங்கள ஆளும் வர்க்க எஜமானர்களையே ஆட்சியில் வைத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் காய்களை நகர்த்துகின்றனர். இதனை மாற்றும் சக்தி படைத்தவர்கள் மக்கள் மாத்திரமே.

சர்வதேச விசாரணை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அனால் சர்வதேச விசாரணை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக் கூடாது. முள்ளி வாய்க்கால் இனப்படுகொலை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நவாலி தேவாலயத்தின் மீதான விமானக் குண்டு வீச்சு என தமிழ் மக்கள் மீதும் தமிழ் மண்ணிலும் மேற்கொள்ளப்பட்ட அரச பயங்கரவாதம் மற்றும் பேரினவாதம் புரிந்த தொடர்ச்சியான கொலைகள் அழிவுகள் குறித்தும் சர்வதேச விசாரணை மெற் கொள்ளப்பட வேண்டும்.

Email : vathevaraj@gmail.com

## இவ்வார ராசிபலன்


(24 பக்கத் தொடர்ச்சி)




**மகரம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். போட்டிகள் குறையும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்யம் கவனம் தேவை. வியாபாரத்தடை ஏற்படும். ஆடை தானம் ஆயுள் விருத்தி தரும். சாதகமான காலம். கௌரவமான தருணம். கன்னிப் பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியிடம் பாராட்டு கிடைக்கும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். விரும்பிய பொருள் கிடைக்கும். பெருமைகள் உயரும். சிரமங்கள் குறையும். நிர்வாக அலைச்சல் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். மரத்தொழில் லாபம் தரும். நன்மையான விஷயங்களை தொடுவீர்கள். முதுகில் வலி வந்து நீங்கும். மனபயம் நீங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K




**கும்பம்:** நன்மைகள் நாடி வரும் வாரம். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் தேவை. திடீர் பயணம் உண்டு. சம்பள உயர்வு உண்டு. சக ஊழியர்கள் உதவி உண்டு. பொறுப்புக்கள் கூடும். வியாபாரம் செழிக்கும். சாதுர்யமான காலம். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். பணவரவு பெருகும். அற்புத வாய்ப்பு கிட்டும். குடும்ப பிரச்சனைகள் தீரும். தேவைகள் நிறைவேறும். உடல் வலியிலிருந்து விடுதலை அடைவீர். எதிர்ப்புகள் விலகும். மெத்தனப்போக்கு விலகும். பயணம் வெற்றி தரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். இனிதான செய்திகள் தேடி வரும். நினைத்த விஷயங்களில் வெற்றி நிகழும். பொன்னான நேரம் உங்களை வந்தடையும். பிள்ளைகளிடத்தில் உங்கள் அன்பு அதிகரிக்கும். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புதிய எண்ணங்கள் உருவாகும். தொழில் வளம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,3,9,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**மீனம்:** உயர்வு பெறும் வாரம். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். கலைத்தொழிலில் கவனம் தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. நட்டமில்லாத நன்மை தரும். சீரான வாழ்வமையும். சேமிப்பு அதிகமாகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். குடும்ப வளர்ச்சி பெருகும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் கூடும். மன அமைதி உண்டாகும். பொருளாதார வாய்ப்பு தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,5,4,9
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H




# பசுமை அமைதி விருதுகள்




பொருத்தமற்ற நிலப்பயன்பாடு, வளங்களின் அதீதச் சுரண்டல், கட்டுப்பாடற்றுப் பெருகும் மாசுகள், விஸ்வரூபம் எடுத்துள்ள காலநிலை மாற்றம் ஆகியனவற்றின் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் இயற்கை திண்டாடி வருகிறது. இந்நிலை நீடித்தால் விரைவிலேயே உலகம் பெரும் பிரளயத்துக்குள் தள்ளப்பட்டுவிடும் என்று சூழலியல் விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர்.

இயற்கையின் மீதான தாக்குதலை நிறுத்தி அதனுடன் ஒரு பசுமை அமைதி ஒப்பந்தத்தை உடனடியாகச் செய்து கொண்டால் மாத்திரமே பேரழிவில் இருந்து எம்மையும் பாதுகாத்து உலகத்தையும் காப்பாற்ற முடியும். இதனைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் மத்தியில் சூழற் கல்வி, சூழல் விழிப்புணர்வு மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மாணவர்களுக்கும் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளர் ஒருவருக்கும் பசுமை அமைதி விருதுகளை வழங்கிக் கௌரவித்து வருகின்றது.




### மாணவர்களுக்கான பசுமை அமைதி விருதுகள் - 2023

1. மாணவர்களிடையே பசுமை அமைதி விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை இணையவழியில் நடாத்தப்படும்.

2. இப்பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரை பயிலும், இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எவரும் தோற்ற முடியும்.

3. இலவசமாக நடைபெறவுள்ள இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் www.tamilnationalgreen.org இணையத்தளத்தின் ஊடாக 15.10.2023 இற்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

4. பரீட்சை இணையவழியூடாக 28.10.2023 (சனிக்கிழமை) இலங்கை நேரம் முன்னிரவு 7.00 மணி தொடங்கி 8.30 மணிவரை நடைபெறும்.

5. தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும் இப்பரீட்சை 100 பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். கடந்த கால வினாத்தாள்களை இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

6. பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள்.

7. இவர்களிலிருந்து பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் முதல் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பசுமை அமைதிச் சான்றிதளோடு சிறப்புப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

8. இவர்களில் முதல் 3 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ், சிறப்புப் பரிசுகளுடன் பசுமை அமைதி விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். முதலாம் இடத்தைப் பெறும் மாணவர் 1 பவுண் தங்கப் பசுமை அமைதி விருதும், இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவர் வெள்ளிப் பசுமை அமைதி விருதும், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவர் வெண்கலப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்.

இப் பசுமை அமைதி விருதுகள் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்த விருதாக வழங்கப்படும்.

9. சிறப்புப் பரிசுகளையும் விருதுகளையும் தீர்மானிப்பதற்குப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஒரு தொகுதி மாணவர்கள் தேவையேற்படின் இரண்டாவது சுற்றுப் பரீட்சைக்கும் தோற்ற நேரிடலாம்.

10. தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான பரிசுகள் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் நடாத்தப்படும் பசுமை அமைதி விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்படும்.

### சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருது - 2023

சூழல் பாதுகாப்பு மற்றும் சூழல்நேயச் செயற்பாடுகளில் பல ஆண்டுகளாகத் தீவிரமாக உழைத்து வரும் தனிநபர் ஒருவர் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பரிந்துரையில் தெரிவு செய்யப்பட்டு சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருதும் ஒரு இலட்சம் ரூபா பொற்கிளியும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்.

இப்பசுமை அமைதி விருது தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்த விருதாக வழங்கப்படும்.

சிறந்த சூழற் செயற்பாட்டாளர் ஒருவரைப் பரிந்துரை செய்ய விரும்புபவர்கள் அவர் பற்றிய விபரங்களைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், இல. 109, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபால் மூலமாகவோ அல்லது greentamils5@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். பரிந்துரைகளை அனுப்பி வைப்பதற்கான முடிவுத் திகதி 31.10.2023

# MORTGAGE FINANCIAL SOLUTIONS




**Contact Us Today**

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND



**NESAN** *Subramaniam* **416-908-5656**

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · First National Financial LP · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930
5 MCMURCHY AVE N. UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895
3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1433 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 22, 2023

# கல்வியிலும் கலைப் பண்பாட்டுத்துறையில் தான் அடைந்த உயரத்தை தனது மாணவர்களும் அடைய வேண்டும் என்று விரும்புவரே கனடா வாழ் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள்

## அன்னாரது வாழ்நாள் சாதனைகளைப் பாராட்டும் வகையில் எடுக்கப்பட்ட விழாவில் பொன்னையா விவேகானந்தன் புகழாரம்



”இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் பிறந்து கல்வி கற்று பேராதனைப் பல்கலைகழகத்தில் புகுந்து அன்று தொடக்கம் கல்வியிலும் கலைப் பண்பாட்டுத்துறையில் தான் அடைந்த உயரத்தை தனது மாணவர்களும் அடைய வேண்டும் என்று விரும்புவரே கனடா வாழ் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள். இன்று அவருக்காக எடுக்கப்படும் விழாவில் நானும் ஒருவனாக பாராட்டுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்”

இவ்வாறு பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் வாழ்நாள் சாதனைகளைப் பாராட்டும் வகையில் எடுக்கப்பட்ட விழாவில் உரையாற்றிய கனடா வாழ் கல்வியாளரும் பேச்சாளருமான பொன்னையா விவேகானந்தன் புகழாரம் சூட்டினார்.

(உள்ளே விபரமான செய்தி 15ம் பக்கத்தில்)

# கனடாவில் "விலா கருணா" மூத்தோர் இல்லம் நடத்திய "சந்தியாராகம்" சுப்பர் சிங்கர் போட்டி நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

## மண்டபம் நிறைந்திருக்க. இசையும் கொண்டாட்டமுமாக இடம்பெற்ற மூத்தோருக்கான முத்தான விழா



கனடாவில் நீண்ட கால இயங்கிவருபவதுடன் தமிழ் பேசும் மூத்தவர்களின் உடல் நலம் குன்றிய நாட்களில் அவர்களைப் பராமரிக்கும் அற்புதமாக மனித நேயப் பணியை மேற்கொண்டு வரும் திருமதி இந்திராணியின் “விலா கருணா“ மூத்தோர் இல்லம் நடத்திய “சந்தியாராகம்“ சுப்பர் சிங்கர் போட்டி நிகழ்ச்சி கடந்த 16ம் திகதி சனிக்கிழமை ஒன்றாரியோ இசைக் கலா மன்றத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(உள்ளே விபரமான செய்தி 15ம் பக்கத்தில்)

# இலங்கையின் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கனடா வந்துள்ளார்

## 22ம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்காபுறோ நகரில் நடைபெறும் "மிஸ் தமிழ் யுனிவேர்ஸ் – 2023" பிரமாண்டமான விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கின்றார்.



கனடாவில் இயங்கிவரும் அரஜனன் பியுட்டி அக்கடமி யின் ஸ்தாபகர்கள் திரு. திருமதி நரேந்திரா-சசிகலா ஆகியோர் இணைந்து நடத்தும் மிஸ் தமிழ் யுனிவேர்ஸ்-2023“ இன்று 22ம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையை ஆற்றிய பின்னர் வெற்றியீட்டும் இளந்தாரகைகளுக்கு பட்டங்களையும் பரிசுகளையும் இலங்கையின் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் வழங்கவுள்ளார்..

இங்கே காணப்படும் படங்கள் நேற்று ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் அவரை வரவேற்கச் சென்ற திருமதி சகிகலா நரேந்திரா மற்றும் உதயன் லோகேந்திரலிங்கம் உட்பட நண்பர்கள் நண்பிகள் நிற்பதைக் காணலாம்.

